# சகியென்று சரணடைந்தேன்!

## 1

அந்தக் காலைப் பொழுதில், மலர்க் காதலிகளை அடைவதற்குத் தென்றல் தன் தோகையை வீசிக்கொண்டு இருந்தது. சூரியன், படர்ந்து விரிந்த மரங்களின் இடையே, தன் கதிர்களை வெள்ளிக் காசுகளாய் இறைத்துக் கொண்டிருந்தான். சில்லென்ற ஈரக்காற்றில் மிதமான வெப்பமும் கலந்து, தேகத்தை வருடிச் சென்றது.

ரெயில், வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வெளியில் தெரிந்த காட்சிகள், பசுமையாக மனதைக் கொள்ளை கொண்டன. மரங்களும் வீடுகளும், வேகமாய் எதிர்த் திசையில் பயணித்துக் கொண்டு, உள்ளத்தை சிலிர்க்கச் செய்தது.

ஜன்னலோரம் அமர்ந்து, இயற்கையின் சீதனங்களை ரசித்துக் கொண்டிருந்த சகானா, தன் மடியிலிருந்த அஜனை அன்புடன் அரவணைத்துக் கொண்டாள். அவனும், மழலையில் அவளிடம் பேசிக் கொண்டே, புதுமையாய் தெரிந்த வெளிப்புறத் தோற்றத்தை வெகுவாய் ரசித்துக் கொண்டிருந்தான்.

எதிரே அமர்ந்திருந்த ஆதித்யாவின் பார்வை, அஜயிடமே பதிந்திருந்தது. அவன், புன்னகையுடன் அஜயைப் பார்த்துத் தன்னிடம் வருகிறாயா என்று கை நீட்டவும், புதியவனிடம் செல்ல மறுத்து, பயந்து போய் சகானாவை இறுக அணைத்துக் கொண்டான் அஜய்.

மெதுவாக அவன் காதருகில் குனிந்து, சகானா ஏதோ சொல்லவும், ஆதித்யாவை நிமிர்ந்து பார்த்து கூச்சத்துடன் புன்னகைத்தான் அஜய். முதல் வகுப்பு கூபேயிலிருந்த நான்கு இருக்கைகளையும் ஆதித்யாவே பதிவு செய்திருந்ததால், அவர்கள் மட்டுமே அங்கிருந்தனர். அஜய் அவளுடைய முகத்தை வருடி விளையாடிக் கொண்டிருந்தான்.

இந்த ஒரு மாதத்தில், திசை மாறிப் போன தங்களின் வாழ்க்கையை நினைத்து, வேதனையாக இருந்தது சகானாவுக்கு! விளையாடிக் கொண்டே மடியில் தூங்க ஆரம்பித்திருந்த அஜயை நெஞ்சோடு சார்த்திக் கொண்டு, கண்களை மூடி தன் நினைவுகளில் மூழ்கினாள் சகானா.

புத்தகத்திற்குள் மறைத்து வைத்த மயிலிறகாய், மனம் தனக்குள் ஒளிந்திருந்த நினைவுகளை வருட ஆரம்பித்தது. தானும், அக்கா மோகனாவும் சிறு வயதில் சிட்டுக் குருவியாய் சிறகடித்ததும், சுற்றிலும் தோட்டம் சூழ்ந்த அந்த சிறு வீட்டில் தங்களுடைய பெற்றோருடன் இனிதாய் பகிர்ந்துண்டதும், இன்று நடந்தாற்போல் கண்முன் விரிந்தது.

மார்கழி விடியலில், வண்ணக் கோலங்களின் அணி குப்பின் நடுவில், தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு காவிலுக்குச் சென்று, திருப்பாவையுடன் இணைந்த க்காற்றின் தீண்டலில் நனைந்து சிலிர்த்ததும், விடிந்தும்



விடியாத இருளில் பஜன் பாடி வரும் பக்தகோடிகளும், இன்று தொலைந்து போனாற் போன்ற ஒரு பிரமையைத் தந்தது.

அப்பா நாராயணனின் வீணை வாசிப்பும், அம்மா லட்சுமியின் பாட்டும் இணைந்து, வீடே இசைச் சங்கமத்தில் நனைந்திருந்தது. அதனாலேயே அவர்களுக்கு ராகங்களின் பெயர்களைச் சூட்டியதாகத் தாய் கூறியதும், மனமொத்த தம்பதிகளாய் அப்பா உயிருடன் இருந்தவரை அவர்கள் வாழ்ந்ததும், இன்றும் நிழற்படமாய் தோன்றியது.

சகானாவின் சிறு வயதிலேயே தந்தை இறந்த போதும், அவர்களின் வாழ்க்கையை அபஸ்வரமாகாமல் காத்தது இசை என்றும் கூறலாம். லட்சுமி பாட்டு டீச்சராக வேலை செய்து வந்ததும், சொந்த வீடும் சில சொத்துக்களும் இருந்ததும் சேர்ந்து, இரு பெண்களையும் வறுமை தெரியாமல் ஓரளவு வசதியாகவே அவரால் வளர்க்க முடிந்தது.

மோகனாவும், சகானாவும் தங்கள் அம்மாவிடமே பாட்டு கற்றுக் கொண்டனர். அப்போதெல்லாம், அவர்களுடைய வீட்டை இசை தேவதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள். சிறு வயதில், தான் புத்தகப் பைகளுடன் கனவுப் பைகளையும் சுமந்ததும், அக்கா மோகனாவுடன் விடுமுறை நாட்களில் தேனுண்ட வண்டாய் சோம்பி இருந்ததும், பாட்டுக்கு இசை மேடையாய் தோட்டத்தைத் தேர்வு செய்து பாடியதும், நினைவில் அணிவகுத்தது சகானாவுக்கு.

அந்த வயதில், தங்களுடன் இணை பிரியாது கை கோர்த்திருந்த கமர்கட்டும், தேன்மிட்டாயும், எலந்த வடையும், இன்றும் மறக்க முடியாமல் நெஞ்சிற்குள் இனிப்பாக இருந்தது. இன்றையத் தலைமுறை, இது போன்ற சிறு விஷயங்களுடன் பல பாரம்பரியமான வாழ்க்கை

முறையையும் இழந்து டி.வி. பெட்டியின் முன் இளமையைத் தொலைத்து விட்டது வேதனையைத் தந்தது.

காலம் தன் கால் கொண்டு காததூரம் கடக்க, நல்லவை எல்லாம் கடவுளுக்கே அர்ப்பணமோ என்பது போல், லட்சுமிக்குப் புற்றுநோய் வந்தது. உடலை உருக்கி, உயிர் பறித்து, உள்ளங்களை உடையச் செய்து அந்த உதயத்தை அஸ்தமிக்கச் செய்தது.

லட்சுமி இறந்தபோது, சூன்யமாகிப் போன மனதுடன் இருவரும் நின்றதும், அனைத்துத் தேற்ற வேண்டிய உறவுகள், இரு பெண்களின் பாரத்தை சுமக்க பயந்து திசைக் கொன்றாய் சிதறின. சகானா பிளஸ் டூவில் சேர்ந்திருந்த நேரம் அது. மோகனா, ஒரு பள்ளியில் டீச்சராகப் பணிபுரிந்து வந்ததால், குடும்ப பாரத்தை இயல்பாகத் தன் தோள்களில் சுமந்தாள்.

ரெயிலின் ஓசையில், அவளுடைய கனவுலகம் திடீரென்று கலைந்துவிட, தன் கையிலிருந்த அஜயை யாரோ தூக்குவது உணர்ந்து, திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சகானா. ஆதித்யாதான் அவனைத் தூக்கிக் கொண்டிருந்தான். எதிர்ப்புற இருக்கையில் அமர்ந்து, தன் மடியில் வாகாகக் குழந்தையைப் படுக்க வைத்துக் கொண்டான்.

முதலில் அஜய் எழுந்து விடுவானோ என்று பயந்தவள், அவன் நிம்மதியாக உறங்கக் கண்டதும், சாய்ந்து அமர்ந்தாள். மூடிய விழிகளுக்குள், நினைவோடை மென்மையாய் சலசலக்க ஆரம்பித்தது.

சகானா, கல்லூரி வாழ்க்கைப் பாதையில் அடி எடுத்து வைத்த போதுதான் மோகனாவின் வாழ்க்கையில் தன் தடம் பதித்தான் சத்யா.



மோகனா வேலை செய்து வந்த பள்ளியின் நிர்வாகத்தை கவனித்துக் கொண்டிருந்த சத்யா, அவளை மணந்து கொள்ள விரும்பினான். கேரளாவிலிருந்த சத்யாவின் அம்மாவும், தம்பியும் அவர்கள் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர்களறியாமல் நடந்த காதல் திருமணம், சத்யாவின் குடும்பத்தினரை வேதனைப்படுத்திப் பிரித்திருந்தது.

சத்யா மிகவும் நல்லவன்! திருமணம் முடிந்தவுடன் அவர்களுடைய சொந்த வீட்டை விற்று, சகானாவின் பெயரிலேயே வங்கியில் போட்டு வைத்தவன். அவளையும் ஒரு தங்கையாகவே சுவீகரித்துக் கொண்டான். மோகனாவும், சகானாவைப் போலவே நல்ல அழகு. தந்த நிறத்தில், உயரமாக, வாளிப்பான உடலுடன், நீண்ட கூந்தலுடன், இருவருமே சிற்பி செதுக்கிய சிலை போல், லட்சணமாக இருப்பார்கள்.

மூன்று பேரும், ஒரு கூட்டுப் பறவைகளாக புது வீட்டுக்குக் குடிபெயர்ந்ததும், அதில் புது வரவாய் மோகனாவின் வயிற்றில் அஜய் உதித்ததும், ஒரு பூவைப் போல் இருவரும் மோகனாவைத் தாங்கியதும், இன்றும் சகானாவின் கண் முன் விரிந்தது.

அஜய் பிறந்த போது சகானாதான் விடுப்பு எடுத்துக்கொண்டு, மோகனாவை நன்றாக கவனித்துக் கொண்டாள். அவள் மடியிலேயே செல்லமாக வளர்ந்தவன் அஜய். சித்தி என்றால் கொள்ளைப்பிரியம் அவனுக்கு! மோகனாவும் சத்யாவும் அவனை 'சகி' என்று அழைப்பதால், அஜயும் அவளை 'சகிம்மா' என்று தான் கூப்பிடுவான். மோகனாவை விட, அவளிடம்தான் அதிகம் ஒட்டிக் கொள்வான்.

வாழ்க்கை சுலபமாகச் சென்று கொண்டிருந்தது... ரம்யமாகவும் கூட! ஒரு நாள் சத்யாவைப் பார்ப்பதற்காக, அவன் நிர்வகிக்கும் பள்ளிக்கு சென்றிருந்த போதுதான், அவன் தம்பி ஆதித்யாவை சந்தித்தாள் சகி.

அலுவலக அறைக்குள் "மாமா" என்றபடி இயல்பான மகிழ்ச்சியுடன் அவள் நுழைந்தபோது, அலட்சியமாகத் திரும்பிய அவன் விழிகளைச் சந்தித்தபோது, மாநிறத்தில், நல்ல உயரமாக, களையான முகத்துடன், கம்பீரமாக நின்றிருந்த அவனைக் கண்டதும், சகானாவின் மனதில் இவன் யாரென்ற ஆராய்ச்சி மணி அடித்தது.

அப்போது உள்ளே வந்த சத்யா, தன் தம்பி ஆதித்யாவை அவளுக்கு அறிமுகம் செய்தான். வணக்கம் கூறி நிமிர்ந்த போது, எதிரே நின்றிருந்த ஆதித்யாவின் பார்வை அவளிடமே அளவிடுவது போல் பதிந்திருந்தது.

அன்றிலிருந்து ஆதித்யாவின் நினைவுகள், அவள் மனதில் ஏனோ உணர்வுப் பூக்களாய்த் தம் இதழ் விரிந்தன. முதன்முதலில் அவனைக் கண்டபோதே, ஏதோ ஒன்று தனக்குள் தடம் புரண்டது, நினைவு வந்தது. அவனுடைய முதல் பார்வை, ஒரு நொடி மட்டுமே தன் மேல் பதிந்தாலும், அந்த இமைக்கின்ற பொழுதிலும், தன்னுடைய மனதில் காதல் ிம்மாசனமிட்டு ஆதித்யா அமர்ந்தது இன்றும் புதிராய் ிருந்தது.

மனம் முழுவதும் நேச மலர்கள் மணம் பரப்புவதும், ியாத ஒரு உணர்வில் தான் தத்தளிப்பதும் ஏனென்று ளுக்குப் புரிந்த போது, மனம் விதிர்த்துப் போனது.

ந்த நேரத்திலும், தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டி க்கூடாதென்ற எச்சரிக்கை உணர்வு மனதில் படரக்



கனவுகளிலிருந்து கலைந்து கண்விழித்துப் பார்த்த போது, அஜய் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

நிமிர்ந்து ஆதித்யாவைப் பார்த்த போது, அவன் விழிகள் அவளிடமிருந்தது புரிந்து, பார்வையைத் தழைத்துக் கொண்டாள் சகானா. அன்றே, தன் உள்ளத்தைக் கவர்ந்து சென்ற கள்வனாய் ஏனோ இன்று அவனைப் பார்க்கும் போது தோன்றியது.

மறுபடியும் கண்மூடி நினைவு இழைகளைக் கோர்த்த போது, வீட்டில் வானம்பாடியாய் நால்வரும் இணைந்து சிறகடித்த கடந்த காலம் விரிந்தது.

அந்த ஞாயிற்றுக்கிழமை வரும் வரை, மனம் சந்தோஷக் கடலில் மூழ்கி இருந்தது. அன்று காலையில், ஒரு திருமணத்துக்கு காரில் கிளம்பிச் சென்ற மோகனாவும் சத்யாவும் ஒரு விபத்தில் சிக்கி உயிரிழந்தபோது, சிறியவர்களின் வாழ்க்கையோ இருண்டு போய்விட்டது.

இருவரும், போகும் போது கிண்டலும் கேலியுமாகச் சென்று திரும்பிவரும் போது மவுனமாய் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு, அசைவின்றி வந்து சேர்ந்தனர். ஒரே நாளில், யாருமற்ற அநாதைகளாகி விட்ட அஜயும், சகியும் தேற்றுவாரின்றித் தனித்து நின்றனர்.

இறுதிச் சடங்குக்கு வந்திருந்த தூரத்து உறவினர்களுடன், விஷயமறிந்து பதறிப் போய் வந்த சத்யாவின் தாய் சாவித்திரியும் ஆதித்யாவும், பொறுப்புகளைத் தங்களுடைய தாக ஏற்றுக் கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தனர்.

சாவித்திரி அம்மா மிகவும் ஓய்ந்து போய்த் தெரிந்தாலும், தைரியமாகவே இருந்தார். அவர் சஹானாவை பார்த்த முதல் பார்வையிலேயே, தன்னை அவருக்குப் பிடிக்கவில்லை என்று புரிந்து கொண்டாள்... அது பேச்சிலும் வெளிப்பட்டது.

வயதான பெண்மணி... அதுவும் அக்காவுடைய மாமியார் என்பதால், சகி மவுனமாகவே இருந்தாள். அஜய்க்குத்தான் ஒன்றுமே புரியவில்லை. தனக்குப் பிடித்த சகிம்மா, எப்போதும் சிரித்துக் கொண்டும், அவனுடன் விளையாடிக் கொண்டும் இருப்பவள். சோகமாக அழுது கொண்டே இருப்பது அவனுக்குப் பொறுக்கவில்லை.

சஹானாவையே சுற்றி வந்து, முகத்தை வருடி, கண்களைத் துடைத்து விடுவான். அவள் சமாதானமடையவில்லை என்றால் மருண்டு விழித்து, பிறகு அவள் மீதே சாய்ந்து, பேசாமல் உறங்கி விடுவான். அவனுக்காகவே, தன்னை தேற்றிக் கொண்டாள் சகி. ஒன்றே முக்கால் வயதிலும் அவனுக்கு எல்லாமே புரிந்தது. எனவே அவனெதிரில் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

புதியவர்கள் என்பதால், பாட்டியிடமும் ஆதித்யாவிடமும் செல்ல மறுத்து, அஜய் பயந்து அழுதான்.

ஆதித்யா, ஒரு நாள் இருவரின் பொறுப்பையும் தானே ஏற்று அவளிடம் பேசினான். அவர்கள் இருவரையும் கேரளாவுக்கு அழைத்துச் செல்வதாகவும், அஜய் இன்னும் கொஞ்சம் பெரியவனாகும் வரை, அவள் அவனுடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டான்.

சஹானாவுக்கு ஒரு கணம் என்ன பேசுவதென்றே தெரியாத லை. அஜயைத் தவிர, அவளுக்கென்று இப்போது யாருமே



இல்லை. அவள் மீது பாசம் வைத்த ஜீவன்கள், ஒருவர்பின் ஒருவராகப் பிரிந்து சென்று விட்டனர். என்ன முடிவெடுப்பதென்றே புரியாமல், மனதில் யோசனை விரிந்தது.

இந்த வருடம்தான் சஹானா பி.எஸ்.சி. முடித்திருக்கிறாள். கர்நாடக சங்கீதமும், கம்ப்யூட்டரும் தெரியும். அவள் பெயரில் வங்கியில் போடப்பட்ட பணம் தவிர, உயிர்த் துணையாய் அஜய் மட்டுமே!

பலத்த யோசனைக்கு பிறகு ஆதித்யாவிடம் திரும்பியவள், ''ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து, அஜயை நான் நல்லா வளர்த்துடுவேன். நாங்க இங்கேயே இருக்கோம். அஜய், என்னை விட்டுட்டு இருக்க மாட்டான்'' என்றாள் மெதுவாக.

ஆனால் அவன் பொறுமை இழந்த ஒரு மூச்சுடன், கோபமாக நிமிர்ந்தான். ''முதல்லே ஒன்னைத் தெரிஞ்சுக்க! அஜயை நாங்கதான் வளர்க்கப் போறோம். அவன் எங்க வீட்டு முதல் வாரிசு. இப்ப, அவனோட நீயும் வரியான்றது தான் கேள்வி. அஜயை அழைச்சிட்டுப் போய் நாமே வளர்க்கலாம்னு, அம்மா சொன்னாங்க. நான் தான் அவங்களிடம் பேசினேன். அஜய் உன்னை விட்டுட்டு இருக்க மாட்டான்னு, எனக்குத் தெரியும். இத்தனை நாள் பழகறேன்... என்கிட்டேயே ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டேங்கிறான்... சின்னக் குழந்தைதானே!'' என்று நிறுத்தினான்...

என்ன சொல்வதென்று புரியாமல் விழித்த சகியையே ஒரு கணம் யோசனையுடன் பார்த்து விட்டு, ''இப்பதான் அவன் அம்மா அப்பாவை இழந்திருக்கான். உன்னையும் உடனே பிரிஞ்சா, அஜய் ரொம்பக் கஷ்டப்படுவான். அவன் எங்களுடன் பழகும்வரை ஒரே ஒரு வருஷமாவது நீ வந்து தங்கினால் நல்லது என்று எண்ணினேன். ஆனா, உனக்

அவளோட தன்மையில அக்கறை இல்லைன்னு புரியுது. சரி! நீ வரவேண்டாம்'' என்று கோபத்துடன் கூறிவிட்டு, வேகமாக எழுந்து சென்று விட்டான் ஆதித்யா.

அவன் சகியிடம் கோபமாக ஏதோ பேசுவதை உணர்ந்த அஜய், கண்களில் பயத்துடன் அவளிடம் இன்னும் ஒட்டிக் கொண்டான்.

இவனைப் பிரிந்து தன்னால் இருக்க முடியுமா என்ற தவிப்பு, மனதை ஆழமாகப் பாதித்தது. இந்தக் குழந்தைக்காக வாவது, தான் போய்த்தான் ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் சகானா.

பிறகு ஆதித்யாவிடம் சென்று தானும் கேரளாவிற்கு வருவதாகக் கூறியபோது, அவன் விழிகள் ஒரு கணம் விரிந்து பளபளத்தது. ஞாபகம் வந்தது.

முப்பது நாட்கள் காரியம் முடிந்தபின், சாமான்களை எல்லாம் அடுக்கி லாரியில் ஏற்றி அனுப்பிவிட்டு, இன்று ாலையில் கிளம்பி, இருவரும் ஆதித்யாவுடன் கேரளாவுக்குச் செல்கின்றனர். அங்கு சென்றால், தங்களுக்கு வரவேற்பு ப்படி இருக்குமோ என்ற மனக்கிலேசத்துடன் தான் சகானா ல்கிறாள். ஒரு வித பய உணர்வு மனதைக் கிள்ளத் விழித்தபோது, அஜய் அப்போது தான் விழிக்க ம்பித்திருந்தான்.

வனுக்குத் தான் எடுத்து வந்திருந்த இட்லியை டியபடியே வேடிக்கை காட்டினாள். இப்போது அஜய் யாவிடம் சிறிது பயம் நீங்கிப் பழக ஆரம்பித்திருந்தான். ன் மனம், ரெயிலின் வேகத்தைவிட அதிகமான



எதிர்பார்ப்பை சுமந்து எதிர்காலத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

ரெயில் கொச்சினை நெருங்கிக் கொண்டிருந்தது.

## 2

**கொ**ச்சினிலிருந்து காரில் மூவரும் ஆதித்யாவுடைய ஊருக்கு கிளம்பினர். வழியில் இருபுறமும் சோலை எனப் பசுமை மனதை அள்ளியது. மழை, தூறலாகப் பெய்து கொண்டே இருந்தது. சிலு சிலுவென்று சாரலாய், குளிர்ந்த காற்று அவள் மேனியை வருடிச் சென்றது.

ஒரு பெரிய ஏரி அருகே சென்று, கார் நின்ற போது சகானாவுக்கு அது என்ன இடம் என்றே தெரியவில்லை. 'கடல் நீர் பெருகி வந்து, ஓதநீர்ப் பெருக்காய் ஏரியைப் போல் ஆகி இருப்பதாகவும், கேரளாவில் நிறைய இடத்தில் இதுபோன்ற பகுதிகள் அதிகம் இருப்பதாகவும்' ஆதித்யாதான் கூறினான்.

அங்கிருந்து மூன்று பேரும் மோட்டார் படகில் சென்றனர். சகிக்கு, இது புதுமையான அனுபவமாக இருந்தது. நீரில் பெரிய படகு ஒன்றும் எதிரே வந்து கொண்டிருந்தது.

அஜய், தண்ணீரைப் பார்த்ததும் கைதட்டிக் குதூகலித்தான். துள்ளி விழுந்து விடாமல், அவனை இறுகப் பற்றிக் கொண்டாள் சகானா. அவர்களின் படகு, ஒரு படகுத் துறையில் சென்று நின்றது. அங்கிருந்து பார்த்தால், சிறிது தூரத்தில் மேடான பகுதியில் ஒரு பிரமாண்டமான வீடு தெரிந்தது.

வீட்டின் முன்புறம் பெரிய தோட்டத்துடன் இருபுறமும் சரிவாக அமைந்த பகுதிகளுடனும், இரண்டடுக்கு வீடாக

சேரா ஓடுகள் வேய்ந்து மிக அழகாக இருந்தது. ஏதோ ஒரு திரைப்படத்தில் வந்த பத்மநாபபுர அரண்மனையை அது அவளுக்கு நினைவுபடுத்துவதாய் இருந்தது.

மூன்று பேரும் தண்ணீர் பரப்பிலிருந்து இறங்கி நடந்து, மேடாக உயர்ந்த படிகளில் ஏறிச் சென்றார்கள். வீட்டின் ஒரு புறம் சரிவின் முடிவில் ஒரு தென்னந் தோப்பும் தெரிந்தது. மறுபுறம் கண்ணுக்கெட்டிய தூரத்தில், கடல் தன் அலைகளால் ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்தது.

அந்த வீட்டின் அமைப்பே சகானாவின் மனதைக் கவர்ந்தது. புதிய வீட்டைப் பார்த்து பயந்து போன அஜய், அவளுடைய கழுத்தைப் பிடித்து இறுகக் கட்டிக் கொண்டான். சகானா, அவனைத் தட்டிக் கொடுத்து சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஒரு வயதான அம்மாதான் வந்து கதவைத் திறந்து வரவேற்றார். சகானாவையும் குழந்தையையும் கண்டதும் முகத்தில் ஆச்சரியமான புன்னகையுடன் அஜயை நோக்கித் கை நீட்டினார், அந்த நீலா அம்மா.

அவன் மிரண்டு போய்த் திரும்பி, சகியிடமே ஒட்டிக் கொண்டான். அந்த அம்மாவைப் பார்த்ததுமே, ஏனோ தன் பாட்டி நினைவுதான் வந்தது சகானாவுக்கு.

அஜயிடம் குனிந்து, ''பாட்டிம்மாடா செல்லம்... உன்னை நல்லா பாத்துப்பாங்க. மம்மு தருவாங்க... பாட்டிம்மா வுக்கு வணக்கம் சொல்லு'' என்று கொஞ்சவும், அவன் வெட்கத்துடன் நிமிர்ந்து ''வணக்கம்'' என்று மழலையில் கூறிச் சிரித்தான்.



அவனுடைய கையை ஆசையுடன் பற்றிக் கொண்டவர், ''குழந்தை அப்படியே பெரிய தம்பி மாதிரியே இருக்கும்மா... ஆனாலும் இப்படி நடந்திருக்கக் கூடாது இந்த வீட்டிலே'' என்று கண்ணீர் மல்க வருத்தத்துடன் கூறிவிட்டு, அஜயின் கன்னத்தை வருடினார்.

அஜய், சகியின் மேல் சலுகையாக சாய்ந்து கொண்டான். அவன் அப்படியே சத்யாவின் மறுபதிப்பு! தன்னுடைய அப்பாவைப் போலவே நிறமாக சுருண்ட முடியுடன் சிரிக்கும் கண்களுடன் கொஞ்சம் சதைப் பிடிப்பான உடல்கட்டுடன் இருந்தான்.

ஒருவேளை ஆதித்யா, சத்யா மாதிரி இருந்தால் அஜய் பயப்பட மாட்டானே என்று சகானாவுக்கு தோன்றியது. சத்யா மிகவும் மென்மையானவன். ஆனால் ஆதித்யா வேறு ரகம்.. அவனுடைய அம்மா மாதிரி உருவம்! மாநிறத்தில் உயரமாக, அகன்ற தோள்களுடன், அடர்ந்த மீசையும், அழுத்தமான முகவாயுடனும் அவனைப் பிடிவாத குணமுள்ளவனாக காட்டும் முக அமைப்புடனும், அனாவசியமான சதைச் சரிவின்றி ஆண்மை நிரம்பியவனாகவும் இருந்தான்.

சத்யா இருக்கும் இடமே எப்போதும் கலகல வென்றிருக்கும். மோகனாவும் அப்படித்தான். சகானாவின் உள்ளம், அவர்களின் நினைவில் ஊமையாக அழுதது. கண்களில் கண்ணீர் மல்க, அஜயை இறுக அணைத்துக் கொண்டவள் யாருக்காகவும் தான் அஜயை விட்டுத்தரக் கூடாது என்று மனதில் உறுதி கொண்டாள்.

அதுவரை அவர்களிருவரையுமே கவனித்துக் கொண்டிருந்த ஆதித்யா, அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

அவர்களுக்கென இரு அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அழகான கட்டிலுடன், எல்லா வசதிகளுடனும் உள்ளேயே குளியலறை வசதியும் அமைந்து பெரிதாக இருந்தது ஒரு அறை.

ஆதித்யா அடுத்த அறையைத் திறந்து காட்டினான். அந்த அறை முழுவதும் விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள், சைக்கிள், சிறிய கார் என்று அஜய்க்காகவே தயார் செய்யப்பட்டு இருந்தது. சிறிய மேஜை, நாற்காலி ஒரு புறமும், மறுபுறச் சுவரில் வண்ண வண்ண கார்ட்டூன் படங்களும் ஒட்டப்பட்டு மிக அழகாக இருந்தது.

அந்த அறையைப் பார்த்ததுமே அஜய்க்கு கண்கள் விரிந்து பளபளத்தன. ஆனாலும் சகானாவிடமிருந்து கீழே இறங்க மறுத்தான். அவனைத் திரும்பவும் தங்கள் அறைக்கே அழைத்து வந்தாள் சகி. இருவரையும் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றான் ஆதித்யா.

அஜய்க்கு முகம் கழுவி வேறு உடைமாற்றி படுக்க வைத்தாள் சகானா. அவன் உறங்கியதும் தானும் சென்று முகம் கழுவிவிட்டு வந்து படுத்தவள், அஜயை அணைத்துக் கொண்டு அப்படியே உறங்கி விட்டாள்.

அன்று மாலையில் அறைக் கதவை மெதுவாக தட்டி விட்டு உள்ளே வந்தான் ஆதித்யா. சிறு குழந்தை போல் உறங்கும் சகானாவையும், அஜயையும் சிறிது நேரம் பார்த்தவன் மெதுவாக அஜயின் அருகில் சென்று அவன் தலையைத் தடவிக் கொடுத்தான்.

உடனே அவன் தொடுகையில் விழித்த அஜய், ''சகிம்மா'' என்று அவளுடன் இன்னும் ஒட்டிக் கொண்டான். அவனது



அசைவில் கண்விழித்த சகி, நேரே ஆதித்யாவைக் காணவும் ஒரு நொடி மிரண்டு, பிறகு இயல்பாகி எழுந்து அமர்ந்தாள்.

விழிகளில் வினாவுடன் அவள் நோக்கிய போது, ''அம்மா அஜயைப் பார்க்கணுமாம். அதான் அழைச்சிட்டுப் போகலாம்னு வந்தேன். அவனை ரெடி பண்ணிட்டுக் கீழே அழைச்சிட்டு வரியா?'' என்றான் கேள்வியாக ஆதித்யா.

''சரி'' என்று தலையசைத்து விட்டு, அஜயுடன் குளியலறைக்குள் சென்றாள் சகானா. அவனைத் தயார் செய்து தானும் கிளம்பிக் கண்ணாடியில் பார்த்த போது இளஞ்சிவப்பு நிற சுடிதாரில் அம்சமாக இருந்தாள் அவள்.

அஜயுடன் கீழே ஹாலுக்கு சென்ற போது, அங்கு சாவித்திரியம்மா ஆதித்யாவுடன் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டு இருந்தார். அஜயைக் கண்டதும், முகம் மலர்ந்து எழுந்து வந்து அவனைத் தூக்க முயன்றார். அஜய் அவரிடம் போக மறுத்தான்.

சகானா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. கண்களில் மிரட்சியுடன் திரும்பிக் கொண்டான்.

அவளிடம் திரும்பிய சாவித்திரியம்மா, ''என்ன பிரயாணமெல்லாம் சவுகரியமா இருந்ததா? அஜயை வளர்க்கத்தான், நீ இங்க வந்திருக்கே! அதை ஞாபகம் வச்சிட்டு நடந்தா போதும். அவனை நல்லா கவனிச்சுக்கணும்... சரி போ...'' என்றார் கண்டிப்பு கலந்த குரலில், கோபத்துடன்.

சகானா மனம் உடனே தொய்ந்தது.

நிமிர்ந்து அவரை நோக்கியவள் ''நான் எதுக்காக இங்கே வந்திருக்கேன்னு எனக்கு நல்லாத் தெரியும்மா! அஜய்னா

எனக்கு உயிர்! அவனை நான் நல்லாப் பாத்துப்பேன்'' என்று கூறிவிட்டு, அஜயுடன் திரும்பி வேகமாக மாடிக்கு வந்து தங்கள் அறைக்குள் நுழைந்தும், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள சிறிது நேரம் தேவைப்பட்டது சகானாவுக்கு!

கதவு தட்டப்பட்டு, நீலா அம்மாள் உள்ளே நுழைந்தார். ஒரு பெரிய தட்டில் பால், கேக், பிஸ்கட், நேந்திரம்பழ வறுவல் எல்லாம் வைத்து எடுத்து வந்திருந்தார்.

அஜய் சாப்பிட்ட பிறகு, அவனை விளையாட்டு அறைக்கு அழைத்துச் சென்றாள் சகி. அவள் அறையிலிருந்தே, அந்த அறைக்குச் செல்ல ஒரு கதவும் இருந்தது.

அங்கு சென்றதும், பொம்மைகளுடன் அஜயை விளையாட விட்டு விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள். அவனும் எல்லாவற்றையும் பார்த்தவுடன் மிகவும் நுஷியாக விளையாட ஆரம்பித்தான். அவன் அழகாக விளையாடுவதை ரசித்துக் கொண்டிருந்தாள் சகானா. இருவருக்கும் பொழுது இனிதாகச் சென்றது.

திடீரென்று ஓடி வந்து, அவள் தோள்களைப் பற்றிய அஜய், கிம்மா...பாடு...'' என்றான்.

அவர்களுடைய வீட்டில் மோகனாவும், சகானாவும் லையில் விளக்கேற்றி விட்டு எப்போதுமே கீர்த்தனைகள் டுவது வழக்கம். அஜய், அமர்ந்து கேட்டுக் கொண்டு ப்பான். சத்யாவும் அவர்கள் பாடுவதை மிகவும் பான். ''கோவை சிஸ்டர்ஸா'' என்று கேலி செய்வான்.

வன் தன்னை அம்மா என்று அழைப்பது பெரும் வரமாய் ன்றியது சகானாவுக்கு. இன்று என்ன பாடுவது என்று சித்து விட்டுப் பிறகு, ''என்ன தவம் செய்தனை



யசோதா...!'' என்று கண்களை மூடிக் கொண்டு, நெஞ்சுருகப் பாடினாள்.

அவள் மடியில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான் அஜய்.

பாட்டுச் சத்தம் கேட்டு அந்த அறைக்குள் வந்த ஆதித்யா உதட்டருகில் கை வைத்து, ''உஷ்'' என்று அஜயை அடக்கியவன் அவள் எதிரே நின்று பாட்டை ரசித்துக் கொண்டிருந்தான். நாபியிலிருந்து எழுந்து, குழைந்து வந்து மனதை மயக்கிய அந்த இசை, ஆதியின் கண்களில் ஒரு ஆச்சரிய மின்னலைத் தோற்றுவித்தது.

அற்புதமாய் பாடி முடித்து நிமிர்ந்த சகானா, எதிரில் அவனையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ஆதியைக் கண்டதும், ஒரு கணம் வெலவெலத்துப் போய்விட்டாள். இவன் எப்போது வந்தான் என்ற எண்ணம் கேள்வியாய் உறுத்த, திரும்பி அஜயைப் பார்த்தாள். அவன் ''உஷ்'' என்று ஆதித்யா செய்தது போல் உதட்டின் மேல் விரல் வைத்துக் காண்பிக்கவும், உடனே ஆதி சிரித்து விட்டான்.

சகானாவும் புரிந்து கொண்டு சிரித்தவள் ''என்ன விஷயமா வந்தீங்க சார்?'' என்று கேட்க, அவளை வினோதமாகப் பார்த்த ஆதித்யா, ''என்ன சொன்னே இப்ப?'' என்றான் புருவங்கள் நெரிய!

''ஏதோ சொல்லணும்னுதானே வந்திருக்கீங்க. என்ன விஷயம்னு கேட்டேன்'' என்றாள்.

''அதில்லை... அதுக்கு அப்புறமா ஏதோ சொன்னியே 'சார்'ன்னு... அதைக் கேட்டேன். சார் எல்லாம் ஒண்ணும் வேண்டாம். சும்மா பேர் சொல்லியே என்னைக் கூப்பிடலாம்.

நான் ஒன்னும் உன்னோட பாஸ் இல்லை. சார்ன்னு கூப்பிடறதுக்கு'' என்றான்.

''இல்லை! அது மரியாதையா இருக்காது...'' என்று பதட்டத்துடன் மறுத்தாள் சகானா.

''நான் என்ன, உன்னை வாடா, போடான்னா கூப்பிடச் சொல்றேன். மரியாதை இல்லாமப் போறதுக்கு! ஆமாம்... நீ சத்யாவை எப்படிக் கூப்பிடுவே?'' என்றான் அழுத்தமான குரலில்.

''மாமான்னு கூப்பிடுவேன். ஆனா உங்களை அப்படிக் கூப்பிட முடியாதே!''

ஆதித்யாவும் யோசனையுடன், ''ம்... அப்ப நீயும் அம்மா மாதிரியே ஆதின்னு கூப்பிடு.'' என்று இயல்பாகக் கூறிவிட்டு அஜயைத் தூக்கி முத்தமிட்டான்.

பிறகு அவளிடம் திரும்பி, ''உன் பாட்டுல நான் சொல்ல வந்ததையே மறந்துட்டேன். இன்னிக்கு நைட் நாம எல்லாரும் வெளியே ஹோட்டலுக்குப் போய் சாப்பிடலாம். அதைச் சொல்றதுக்குதான் வந்தேன். ரெண்டு பேரும் ஏழு மணிக்குத் தயாராயிடுங்க'' என்றான்.

ஒரு நிமிடம் யோசித்த சகானா, ''வந்த முதல் நாளே வெளியே வேண்டாமே! அஜய்க்கு இந்த இடம் பழகட்டும். வெளிச் சாப்பாடு அவனுக்கு ஒத்துக்குமான்னு தெரியலை'' ன்றாள் யோசனையுடன்.

உடனே முகம் மாறி விட, ''சரி... நான் வரேன்டா குட்டிப் யா!'' என்று கூறி விட்டு வெளியே சென்றான் ஆதித்யா.

இரவுச் சாப்பாடு, அறைக்கே வந்தது. சப்பாத்தியும், ியும் செய்து எடுத்து வந்தார் நீலா அம்மா.



அவர் சகியைப் பார்த்து, ''என்னை நீலான்னே கூப்பிடும்மா. குட்டித் தம்பி என்ன சொல்றாரு?'' என்று கேட்டுக் கொண்டே வந்து அஜய் சாப்பிடும் வரை, கூட இருந்து பார்த்து விட்டுத்தான் சென்றார்.

சகானா தன் மனதைத் திருப்ப அஜய்க்கு கதை சொல்லி உறங்க வைத்த பின், சிறிது நேரம் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட்டது. யாராக இருக்கும் என்ற யோசனையுடன் எழுந்து சென்று கதவைத் திறந்த போது அங்கு ஆதித்யா நின்றிருந்தான்.

முகம் கருங்க நிமிர்ந்த சகானாவைப் பார்த்து, ''அஜய் தூங்கிட்டானா? விளக்கெரிஞ்சதால அவன் முழிச்சிட்டு இருக்கானோன்னு நினைச்சேன். குட்நைட்'' என்றவன் தன் அறைக்குச் சென்று விட்டான்.

இரவு உடையுடன், அவன் முன் நின்றது சகானாவிற்கு தர்மசங்கடமாக இருந்தது. அவசரமாக கதவைத் தாளிட்டு விட்டு வந்து படுத்தவள், அப்படியே உறங்கிப் போனாள். பயண அலுப்பும், அதிகாலையிலேயே அன்று விழித்ததுமாகச் சேர்ந்து இருவரும் நன்றாக உறங்கினார்கள்.

மறுநாள் காலையில் விழித்ததுமே தான் எங்கிருக்கிறோம் என்றே புரியவில்லை சகானாவுக்கு! பின்பு நன்றாக விழித்து உணர்ந்து, அஜய் தூங்கும் போதே எழுந்து குளித்து விட்டுத் தன் வேலைகளை முடித்து, அவனை எழுப்பினாள்.

''அஜ்ஜு! இன்னிக்கு காலையிலே, நாம ரெண்டு பேரும் கடற்கரைக்குப் போலாம்னு சொன்னேனே... சகிம்மா! எழுந்திருடா கண்ணா'' என்று காதோரம் சொன்னதும்,

குழந்தை உற்சாகமாக எழுந்து தயாரானான். குளிக்கும் முன்பே, அவனைக் கடலுக்கு அழைத்துச் செல்லலாம் என்று கீழே அழைத்து வந்தாள்.

வீடு அமைதியாக இருந்தது. ஒரு பணிப் பெண் மட்டும் வீட்டைத் துடைத்து சத்தம் செய்து கொண்டிருந்தாள். சமையலறைக்குச் சென்று அஜய்க்கு பாலில் காம்ப்ளான் கலந்து கொடுத்து விட்டு, நீலாம்மாவிடம் சொல்லிக் கொண்டு அஜயுடன் வெளியே வந்தாள், சகி.

வீட்டைச் சுற்றிக் கொண்டு பக்கவாட்டில் உள்ள படிகளில் இறங்கியபோதுதான், இருவருமே ஆதித்யாவைப் பார்த்தனர். ஜாகிங் முடிந்து வந்து கொண்டிருந்தான் அவன்.

அவர்கள் இருவரையும் கண்டவுடன் ''குட்மார்னிங்'' என்று கூறிவிட்டு, அஜயின் கன்னத்தை செல்லமாகத் தட்டியவன், அவளிடம் திரும்பினான். கண்கள் சுருங்க, ''என்னடா.. நம்ம வீட்டுத் தோட்டத்துல ஒரு பச்சை ரோஜா பூச்சாப் பூத்திருக்கேன்னு, தூரத்தில் இருந்து பார்க்கும் போது ரொம்ப ஆச்சர்யப்பட்டேன். கிட்டே வந்து பாத்தாதானே தெரியுது.. அது என்னன்னு'' என்றான் குறும்புடன்.

குனிந்து தன் உடையைப் பார்த்த போது, அதன் இளம் பச்சை நிறமும், அவனுடைய வார்த்தைகளின் பொருளும் புரிந்து, மனம் படபடக்க முகம் சிவந்து போனாள் சகானா.

இவன் ஏன் இப்படித் தன்னை வார்த்தைகளாலும் பார்வைகளாலும் தவிக்கச் செய்கிறான் என்ற எண்ணத்தில், நெஞ்சம் ஆடிக் காற்றில் சிக்கிய இலவம் பஞ்சாய் அலை பாய்ந்தது.



இது நல்லதற்கில்லை என்ற எச்சரிக்கை உணர்வு மனதில் ஊடுருவ, வேகமாக நிமிர்ந்து ''நாங்க பீச்சுக்குப் போகணும்.. கொஞ்சம் வழி விடறீங்களா?'' என்றாள் ஒரு விலகல் தன்மையுடன்.

இரு புருவங்களும் நெரிய, அவளையே ஒரு கணம் வெறித்தவன் உதடுகளைப் பிதுக்கித் தோளைக் குலுக்கிக் கொண்டு சென்றான்.

கடலில் அலைகள் நுரையை அலங்காரத் தோரணங்களாய் விரித்து, அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து கொண்டிருந்தது. சூரியன் தொலைதூரத் தொடுவானில் கடலில் குளித்து எழுந்து, செந்நிறமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஒரு விதமான ஆர்வம் மனதைத் தூண்ட சகானா திரும்பிப் பார்த்த போது, வேகமாகச் செல்லும் ஆதித்யாவும் ஒரு கம்பீரச் சூரியனாகவே தோன்றினான்.

அந்தக் காலைப் பொழுதில் கடல் மணலில் கால்கள் புதைய நடப்பதே, ஒரு சுகானுபவமாக இருந்தது. அஜயின் கால்கள் கடல்நீரில் நனையும்படி அவனை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு நின்றாள். முதலில் கடலின் பிரமாண்டத் தையும், அலைகளின் ஆர்ப்பரிப்பையும் பார்த்துப் பயந்த அஜய், சிறிது நேரத்துக்குப் பிறகு தன்னைத் தனியே விடச் சொல்லி உற்சாகமாய் விளையாட ஆரம்பித்தான்.

ஆனால் சகானாவுக்கு பயமாக இருந்தது. தன்னுடனேயே வைத்துக் கொண்டு கரையோரத்தில் அவனை விளையாட விட்டாள்.

அக்காவும் மாமாவும் இப்போது உயிருடன் இருந்து, இந்தக் குடும்பத்துடன் இணைந்திருந்தால், எவ்வளவ

இனிமையாக இருந்திருக்கும் என்று மனம் ஏக்கமாய் நினைத்தது... தவிப்பை விதைத்தது. உள்ளத்தில், பழைய நினைவுகள் அணிவகுப்பு நடத்தியது.

## 3

ஆதித்யா, தன் அறையிலிருந்தபடி கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த இருவரையும் கண்களால் அளவெடுத்துக் கொண்டிருந்தான். அஜயைக் கண்ட போது, அவன் மனதில் சத்யாவின் நினைவுகளே மீண்டும் மீண்டும் வந்து அலைமோதின. சத்யா விஷயத்தில், அம்மா செய்தது தவறோ என்ற எண்ணம், எப்போதும் போல் மனதில் வந்து நிறைந்தது.

கடற்கரையிலிருந்து திரும்பியதும் அஜயைக் குளிக்க வைத்துத் தயார் செய்து கீழே அழைத்து வந்தாள் சகானா.

மேஜையின் மேல், காலை டிபன் தயாராக இருந்தது. புட்டும் கொண்டைக்கடலை மசாலாவும், ஆப்பமும் தேங்காய்ப்பாலும் இருந்தது. அவற்றில் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, அஜய்க்கு ஊட்டிக் கொண்டிருந்தாள் சகானா.

சாப்பிடுவதற்கு எப்போதுமே அஜய் அடம் பண்ணியதில்லை. சமர்த்தாக இருப்பான். கையில் கார் பொம்மையுடன் அவன் சாப்பிடும் அழகையே ரசித்துக் கொண்டு இருந்தாள் சகி.

அப்போது சாப்பிடுவதற்காக அங்கு வந்த ஆதியும் அஜயின் பக்கத்து நாற்காலியிலேயே இயல்பாக அமர்ந்து கொண்டான். நீலாம்மா, அவனுக்கும் டிபன் எடுத்து வைத்தார்.

அஜயைக் கொஞ்சிய படியே மெதுவாக சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் திரும்பி சகானாவைப் பார்த்து, ''அஜய்,



காரம் எல்லாம் சாப்பிடுவானா? இந்தப் பக்கத்து சமையல் அவனுக்குப் பிடிக்கலைன்னா அவனுக்குப் பிடிச்ச மாதிரி செய்யச் சொன்னா நீலாம்மா செய்வாங்க. அவனுக்கு, என்ன எல்லாம் பிடிக்கும்னு அவங்ககிட்ட சொல்லிடு'' என்றான்.

சகியும், ''நேத்தே நான் நீலாம்மா கிட்ட எல்லாம் சொல்லிட்டேன். அஜய் எல்லாமே சாப்பிடுவான். சாப்பிட அடம் பண்ணவே மாட்டான். நாங்களும் அங்கே, இதெல்லாம் பண்ணுவோம். சத்யா மாமாவுக்குப் பிடிச்ச மாதிரிதான், அக்கா சமைப்பாங்க. அதனால, அஜய்க்கும் இதெல்லாம் பிடிக்கும்'' என்றாள்.

சத்யாவைப் பற்றி பேசியதுமே, ஒரு கணம் அவன் முகம் மாறி, பின்பு தன் இயல்புக்குத் திரும்பி வந்தது.

அப்போது, அங்கு வந்த சாவித்திரி அம்மா சகானாவிடம், ''ஏம்மா! அவனைத் தோட்டத்தில வச்சி, விளையாட்டுக் காட்டி சாப்பாடு ஊட்டலாமே! பெரியவங்க மாதிரி ஒரே இடத்துல உக்கார வச்சி ஏன் சாப்பிடக் கொடுக்கறே?'' என்றார் குற்றம் சாட்டும் குரலில்!

அதற்குள் ஆதித்யா, ''ஏம்மா! குழந்தை மேஜையில உக்காந்து சாப்பிடறது நல்ல பழக்கம் தானே! அதை ஏன் மாத்தணும்கறீங்க... நானே, அவன் இப்படிப் பழகறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன். நம்ம கூடவும் அவனுக்குப் பழக நேரம் கிடைக்குமே! ஏன்டா குட்டிப்பையா'' என்றான் அஜயின் தலையை செல்லமாகக் கலைத்து விட்டபடி.

அஜய்க்கு என்ன புரிந்ததோ, ஆதித்யாவைப் பார்த்து கை தட்டிச் சிரித்தான்.

கண்களில் மெலிதான சீற்றத்துடன், சகியைப் பார்த்து விட்டு, அங்கிருந்து அகன்றார் சாவித்திரி அம்மா.

அஜய் சாப்பிட்டு முடித்ததும் அவனைத் தூக்கிக் கொண்ட ஆதித்யா, "நீ சாப்பிட்டுட்டு வந்து, இவனை வாங்கிக்கறியா?" என்று கேட்கும் போதே, அஜய் சகியிடம் தாவிக் கொண்டு சிணுங்கினான்.

அவளருகில் வந்த சகானா, அஜயின் கையைப் பிடித்துக் கொண்டு, "அஜ்ஜூம்மா! அழக்கூடாது. சகிம்மா சாப்பிடணும் இல்லையா? நீ சித்தப்பாகிட்ட சமத்தா இருப்பியாம். நான் சாப்பிட்டுட்டு உடனே வந்து தூக்கிப்பேனாம். சரியா?" என்று கூறி, அவன் கையில் முத்தமிட்டு விட்டுச் சமையலறைக்குள் சென்றாள்.

அவள் சாப்பிடும் வரை, ஆதித்யாவும் அஜயைத் தூக்கி வைத்துக் கொண்டு, அங்கேயே நடந்து கொண்டிருந்தான். சாப்பிட்டுக் கொண்டே நிமிர்ந்து அவர்களைப் பார்த்தபோது, ஆதித்யா அஜயிடம் குனிந்து மெதுவான குரலில் என்னவோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் வந்ததும் அஜய் அவளிடம் தாவிக் கொண்டு வந்து விட்டான்.

மாடிக்குச் சென்று அஜயை விளையாட விட்டு விட்டு, கம்ப்யூட்டர் சம்பந்தமான புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள் சகி. பதினோரு மணிக்கு, சகானா கூறியது போலவே சத்துமாவு கஞ்சியைக் காய்ச்சி எடுத்துக் கொண்டு வந்தார் நீலாம்மா. அஜய்க்கு ஊட்டி விட்டபிறகு அவன் தூங்கியதும், சகானாவிற்கு பொழுதே போகவில்லை.

கீழே வந்து சமையலறையில் நீலாம்மாவுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். அப்போது மேற்பார்வையிட உள்ளே வந்த சாவித்திரி அம்மா, "குழந்தை எங்கே? நீ இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே?" என்றார் கோபமாக.



சகானா மெல்லிய குரலில், "இல்லம்மா... அஜய் தூங்கறான். அதான்! சும்மா இருக்கறது, பொழுது போகலை. அஜய் எப்படியும், ஒரு மணி நேரத்துக்கு மேல தூங்குவான். இங்கே நீலாம்மாவுக்கு உதவி செய்யலாம்னு வந்தேன்" என்றாள்.

"ஒரு நிமிஷம் என்னோட வா" என்று கூறி விட்டு முன்னே சென்ற சாவித்திரி, எதிரே இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றார். அந்த இடம் அலுவலக அறை போல், மேஜை, நாற்காலி, கம்ப்யூட்டர், புத்தக அலமாரியுடன் இருந்தது. அவளுடன் உள்ளே சென்றவர் திரும்பினார்.

"உனக்கு என்ன வேலை கொடுத்திருக்கோ, அதை மட்டும் நீ செஞ்சா போதும். அப்புறம்... நீ இங்க வந்து இருக்கறதே, அஜய்க்காகத்தான் அப்படிங்கறதை மறந்துடாதே. அதனால தான், உன்னை இங்க அழைச்சிட்டு வரவே சம்மதிச்சேன். உங்க அக்கா மாதிரி, பெரிய புளியங்கொம்பாப் புடிச்சா, வாழ்க்கையில உயர்ந்திடலாம்னு ஏதும் எண்ணம் இருந்தா அதை மறந்திடு" என்றவர், கோபமூச்சுடன் நிறுத்தி விட்டுத் தொடர்ந்தார்.

"என் பையன்கிட்ட பேசற வேலையே இனிமே வச்சுக்கக் கூடாது. புரிஞ்சுதா? இன்னும் ஒரு வருஷம் தான் நீ இங்கே இருக்கலாம். அதுக்கப்புறம் அஜயை நாங்களே பாத்துப்போம். உனக்கும் கோயம்புத்தூரிலேயே ஒரு வேலை வாங்கித் தரச் சொல்றேன். நீ அங்கேயே போயிடலாம்" என்றார்.

அவருடைய பேச்சின் அர்த்தம் உணர்ந்து, அவள் முகத்தி வேதனையும் அருவெறுப்பும் ஒன்றாகத் தோன்றியது. என் பெண்மணி இவர்! அக்காவின் உண்மையான காதலையு கொச்சைப்படுத்தி, தன்னைப் பற்றியும் தவறாகக் கணித்

பணத்தை மட்டுமே பிரதானமாய் நிறுத்தி, மனித மனங்களின் மதிப்பை உணராமல், ஏன் இப்படி எல்லாம் பேசுகிறார் என்ற எரிச்சல் மனதில் மையம் கொண்டது.

அவளுடைய முகபாவத்தையே கவனித்துக் கொண்டிருந்த சாவித்திரி, ஒரு வெற்றிப் புன்னகையுடன் வெளியே செல்லத் திரும்பினார்.

"ஒரு நிமிஷம்மா!" என்ற சகானா அவர் முன் வந்து, "இனிமே எந்த நிலையிலயும் நான் உங்க பிள்ளையோட பேசவோ அவர் வாழ்க்கையில குறுக்கிடவோ மாட்டேன். ஆனா, பணத்தைப் பெரிசா நினைச்சி வந்ததா மட்டும், எங்க குடும்பத்தைத் தப்பா நினைக்காதீங்க... ப்ளீஸ்!" என்று கூறிவிட்டு, வேகமாக மாடிக்குச் சென்று விட்டாள்.

இன்னலில் முகம் புதைத்து, மூச்சு வாங்க நின்று யோசித்த போது, காதல் கொண்ட உள்ளம் கண்ணாடி போல் தன்னை எல்லோரிடமும் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற அச்சம் முதன்முதலாக மனதில் எழுந்தது. பாதரசத் துளியாய், இங்கு ஒட்ட மனம் மறுத்தது.

தனக்கு ஆதித்யாவிடம் வந்த ஈர்ப்பு நிலை, பணத்துக்காகவோ அந்தஸ்தைப் பார்த்தோ தோன்றியதில்லை என்ற எண்ணமே எழுந்தது.

வேதவித்தாய் அன்று மனதில் விழுந்து, வேர் பிடித்து ருந்த காதல், துளிர்த்த நிலையில் இன்று சாவித்திரியம்மா ன் வார்த்தைகளால் வாட ஆரம்பித்தது. உள்ளத்தில் நன்றாக றி இருந்த காதல் வேரை அடியோடு பிடுங்கி வீசவும் யாமல், மனம் குலுங்கியது.



ஒரு பொன்மொழி நினைவுக்கு வந்தது. 'ஒரு படகை மூழ்கடிக்கக்கூடிய சக்தி, எந்த நதிக்கும் கிடையாது... அந்தப் படகு மிகவும் பலவீனமாக இருந்தாலொழிய...' என்ற வரிகள் ஞாபக அடுக்குகளில், தன் தடம் பதித்தது.

தன் மனதை சிதறடிக்கக்கூடிய சக்தி, சாவித்திரி அம்மாவுடைய வார்த்தைகளுக்கு இருப்பது புரிந்தது. அதனால் மனதில் தைரியத்தை உறுதியுடன் தத்தெடுத்துக் கொண்டாள் சகானா. இனி இங்கு இருக்கும் வரையில் ஆதித்யாவிடம் பேசுவதோ அவன் வழியில் குறுக்கிடுவதோ கூடாது என்ற முடிவு உறுதியாய் அவளுள் நிறைந்தது.

அவனைத் தவிர்க்கும் விதம் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள். இனிமேல், அவன் காலையில் கடற்கரைக்குச் செல்லும் போது, தான் அந்தப் பக்கமே செல்லக்கூடாது என்ற எண்ணத்தைத் தீர்மானமாக மனதில் செதுக்கினாள்.

அன்றையப் பொழுது அமைதியாகவே சென்றது. இரவுச் சாப்பாட்டை, தங்கள் அறைக்கே கொண்டு வந்து வைத்து விடும்படி, அவள் நீலாம்மாவிடம் கூறி விட்டாள். காலையிலும், அஜய்க்கு மட்டும் அறைக்கு எடுத்து வந்து தரும்படியும், பிறகு தான் வந்து சாப்பிடுவதாகவும் கூறி இருந்தாள்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே, வெளியே செல் வேண்டுமென்று மழலையில் கேட்டுக் கொண்டிருந் அஜயைத் தூக்கிக் கொண்ட சகானா வெளியில் வந்தவ மறுபுறம் தென்னந்தோப்புக்குச் செல்லும் படிகளில் இறங் தோப்பிற்குள் நடக்க ஆரம்பித்தாள். உற்சாகத்துடன் அஜ கீழே இறங்க முயற்சி செய்யவும், அவனை நடக்க விட்ட கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்து சென்றாள்.

பிறகு வீடு திரும்பி அஜயைக் குளிக்க வைத்து, டிபன் கொடுக்கும் போது அறைக்கதவு தட்டப்பட்டது. கதவு திறந்து பார்த்தால், அங்கு ஆதித்யாதான் நின்று கொண்டிருந்தான்.

சிறு புன்னகையுடன் அவனை ஏறிட்ட சகி, "அஜய்! யார் வந்திருக்காங்கன்னு பாரு..." என்று கூறிக் கொண்டே அஜயிடம் வந்தாள்.

அவர்களைப் பார்த்த ஆதி, "என் நீங்க ரெண்டு பேரும் கீழே சாப்பிட வரலை? காலையில கடற்கரைக்கும் வரலை! அஜய் நல்லாத்தானே இருக்கான்... உடம்புக்கு ஒன்னும் ப்ராப்ளம் இல்லையே?" என்று கேட்டுக் கொண்டே வந்து, அஜயைத் தூக்கிக் கொண்டான்.

"அதெல்லாம் ஒன்னும் இல்லை, அஜய் நல்லாருக்கான். காலையிலே, நாங்க தோப்புப் பக்கம் நடந்து போய்ப் பாத்துட்டு வந்தோம். நீலம்மா டிபனை இங்கேயே கொண்டு வந்தாங்க... அதான்!" என்று உண்மையை மறைத்துக் கூறினாள் சகி.

"ஏய் குட்டிப் பையா! உனக்கு என்ன வேணும் சொல்லு! நான் வாங்கிட்டு வரேன்." என்றவன் அவளிடம் திரும்பி, "உனக்கு ஏதாவது வேணுமா?" என்று கேட்டான், கண்களில் எதிர்பார்ப்புடன்.

"ம்ஹூம்..." என்று தலை அசைத்த சகானா, "அஜய்க்கு எல்லாமே இருக்கு. ஒன்னும் வேணாம்" என்றாள்.

அஜய் கொஞ்சம் கொஞ்சமாக ஆதித்யாவிடம் பழகத் தொடங்கி இருந்தான். அவன் வந்து தூக்கினால், பொழுதெல்லாம் அழுவதில்லை.



ஆதித்யா அவளிடம் சிறிது நேரம் விளையாடி விட்டுச் சென்றதும், கீழே சென்ற சகானா சாப்பிட்டு விட்டு பிறகு அஜயை அழைத்துக் கொண்டு சாவித்திரி அம்மாவிடம் சென்றபோது, அவர் வரவேற்பறையில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தனியே அமர்ந்திருந்தார். நல்ல வேளையாக ஆதித்யா அங்கு இல்லை.

அஜயை அவரிடம் கொடுத்தவள், அவன் அழ ஆரம்பிக்கவும் குனிந்து, "அஜ்ஜூ செல்லம்! நம்ம பாட்டிம்மாடா! அவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிக்குமாம். நீ அவங்களோட விளையாடுவியாம். நான் போய், உன் பொம்மை எல்லாம் எடுத்துட்டு வருவேனாம்" என்று அவனை சமாதானப்படுத்தி விட்டு மேலே சென்றவள், சிறிது நேரம் கீழே இறங்கி வரவே இல்லை. அஜய், தன் பாட்டியுடன் பழகட்டும் என்ற எண்ணத்தில் மாடியிலேயே இருந்தாள்.

மனம் துக்க நினைவுகளில் மூழ்கியது. தான் விரும்பிய யாருமே தனக்கு நிலைக்க மாட்டார்களோ என்ற பயம் பரவி, உடல் குலுங்கியது.

## 4

சகானா கீழே வந்த போது, அங்கு இருவரையுமே காணவில்லை. வெளியே சென்று பார்த்த போது அஜய் ஆதித்யாவுடன் காரில் வந்து இறங்கினான்.

அவளைக் கண்டதும், "சகிம்மா" என்று ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டான்.

ஆதித்யா அலுவலகத்திற்கு செல்பவன் போல் உடை அணிந்திருந்தான். அவளருகே வந்து, "அம்மாவுக்கு, இவன்

அழுகையை சமாளிக்க முடியலை. அதான் காரிலே ஒரு ரவுண்டு அழைச்சிட்டுப் போனேன்'' என்றான்.

அஜயைத் தூக்கிக் கொண்ட சகானா, ''இவன் அம்மா கிட்டே பழகட்டும்னுதான், கொஞ்சநேரம் விட்டுட்டுப் போனேன். ஏன்டா அஜ்ஜு பாட்டியைப் படுத்திட்டியா? பாவம்டா அவங்க! இனிமே சமத்தா இருக்கனும் என்ன?'' என்று கூறவும் பெரிய மனிதன் போல் தலையாட்டினான் அஜய்.

அவன் கன்னத்தைத் தட்டி விட்டுக் கிளம்பினான் ஆதித்யா. சகானா புன்னகையுடன் உள்ளே வந்த போது, அங்கு கோபமாக நின்று அவளையே முறைத்துக் கொண்டிருந்தார் சாவித்திரி.

''என்ன? என் பையனோட பேசனும்னு தான், அஜயை என்கிட்ட விட்டியா? நான் கூட நீ பேசினதை வச்சு, ஏதோ நீ நல்லவன்னு நினைச்சேன். ஒரு நிமிஷம் உங்க குடும்பத்தோட புத்தி... அதான் பணக்காரனைப் பாத்தா, அட்டையா ஒட்டிக்கறது எனக்கு மறந்து போச்சு'' என்று கோபத்துடன் சீறினார்.

அவருடைய முகத்தையும் பேச்சையும் கண்ட அஜய், சகியின் தோள் வளைவில் பயத்துடன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

சகானாவின் மனதில், முதன் முதலாக தான் ஏன் இங்கு வந்தோம் என்ற கவலை வந்து தீண்டியது.

கலங்கிய கண்களுடன், ஒன்றும் பேசாமல் மாடிக்குச் சென்று தனிமையில் யோசித்தாள். கவலை கொண்ட மனிதனை சிறு சொல் கூட உடைக்கும் என்பது மெய்தான் போலும். கவலை, அவள் மனதை ஆக்கிரமித்து உடைத்தது. இமைகள் நனைந்தன!



அன்பு என்பதே பரிச்சயம் இல்லாமல் என்ன மனிதர்கள் இவர்கள் என்ற ஆயாசமேற்பட்டது. அவள் கவலைக்கு மருந்தாக, அஜய் வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவள் முகம் வாடினால், அனிச்சமலர் போல் அவனும் வாடி விடுவது கண்டு அவன் முன்னால் இனி தன்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது அவளுக்குள்!

அஜயுடன் சேர்ந்து விளையாடியே, அன்றையப் பொழுது போனது. மாலையானதும், அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றாள் சகானா.

ஆதித்யா, ஏழு மணிக்குத்தான் எப்போதுமே வீட்டுக்கு வருவான் என்று நீலாம்மா கூறி இருந்ததால், அவன் இல்லாத போதே சென்று வரலாம் என்று சென்றாள். கடல், தன் அலைக்கரங்களை விரித்து வரவேற்றது. அஜய் ஆர்வத்துடன் கடல் நீரில் நின்று விளையாடினான்.

கடல் மணலில், காலுக்கடியில் நண்டு ஒன்று சின்னதாக ஓடவும் ''சகிம்மா'' என்று பயத்துடன் ஓடி வந்தபோது, அவனை பயம் தெளிய வைத்து, மணலில் அமர்ந்து மணல் வீடு கட்ட ஆரம்பித்தாள் சகானா. அழகாக கோபுரம் போல் அமைத்து, வாசலில் நுழைந்து மறுபுறம் வரும்படி ஓட்டை அமைத்து, சுற்றிலும் அகழியைப் போல் பள்ளம் அமைத்தாள்.

அவளையே கண்கொட்டாமல் பார்த்திருந்த அஜய், ''ஐ! சகிம்மா... வீடு!'' என்று கைதட்டி ஆரவாரம் செய்தான்.

திடீரென்று பின்னாலிருந்து ஆதித்யாவின் குரல் கேட்டது. ''ஹாய் அஜய்! என்ன... உங்க சகிம்மா, எனக்குப் போட்டியா வந்துடுவாங்க போலிருக்கு... போனாப் போகுதுன்னு இடம்

கொடுத்தா, என் பொழப்புல மண் அள்ளிப் போட்டுடுவாங்க போல!'' என்று கூறிக் கொண்டே, இயல்பாக அஜயின் அருகே மணலில் அமர்ந்தான்.

ஆதித்யா, பி.ஆர்க். முடித்து விட்டு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி நடத்தி வந்தான். அதனால் தான், சஹானா மணல் வீடு கட்டியதைப் பார்த்து, தனக்குப் போட்டியாக வருவதாகக் கிண்டல் செய்தான். இவன் இந்த நேரத்தில் எப்படி வந்தான் என்ற யோசனையுடன் மவுனமாக அமர்ந்திருந்தாள் சகி.

ஆதித்யாவைக் கண்டதும், சந்தோஷத்தில் துள்ளினான் அஜய். குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டவன் ''என்ன? பீச்சுக்கு வந்தாலே ஒரே குஷிதானா? நாம ரெண்டு பேரும் விளையாடலாமா?'' என்றான். அஜய் தலையாட்டியதும், ''என்னைப் பிடி... பார்ப்போம்!'' என்று கூறிவிட்டு எழுந்து மெதுவாக ஓட ஆரம்பித்தான்.

அஜய் துரத்த, ஆதித்யா ஓட ஒரே சிரிப்பாக இருந்தது. கடல் மணலில் தத்தித் தத்தி ஓடும் அஜயைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் சஹானா. அதைப் பார்க்கவே, சகிக்கு மனசுக்கு இதமாக இருந்தது.

சத்யாவின் இறப்புக்குப் பிறகு, அஜய்க்கு ஒரு ஆணின் அன்பு தேவையாக இருந்தது. என்னதான் பெண்கள் வளர்த்தாலும், குழந்தைகளுக்கு ஒரு ஆணின் அரவணைப்பும், கண்டிப்பும் நிச்சயம் தேவை என்ற எண்ணம் சஹானாவுக்கு எப்போதுமே உண்டு. அப்பாவின் அன்புக்கு ஏங்கியவர்களில் அவளும் ஒருத்தி! அந்த வலி, அவளுக்கும் தெரியும்.

இப்போது அஜய்க்கு, அவன் சித்தப்பாவின் அன்பாவது கிடைத்ததே என்ற நிம்மதி மனதில் நிறைந்தது.



வீட்டுக்குத் திரும்பிய போது, சாவித்திரி வாசலிலேயே காத்திருந்தார்.

''ஆதி! நீ எம்பா வந்த உடனே, ரெஸ்ட் எடுக்காம கடற்கரைக்குப் போனே? போய் டிபன் சாப்பிடு!'' என்று கூறி அனுப்பி விட்டு கோபத்துடன் திரும்பிக் கொண்டார்.

அஜயை சாப்பிட வைத்து விட்டு வந்து புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் சஹானா.

அறை வாசலருகில் யாரோ வருவது உணர்ந்து, நிமிர்ந்து பார்த்த போது ஆதி வந்து கொண்டு இருந்தான். அவனைக் கண்டதும், அஜய் மகிழ்ச்சியுடன் ஓடிவரவும், அவனை அன்புடன் தூக்கிக் கொண்டான் ஆதித்யா.

சஹானாவிடம் திரும்பி, ''இன்னிக்கு ராத்திரி, வெளியே ஹோட்டல்லே ஒரு டேபிள் ரிசர்வ் பண்ணி இருக்கேன். இன்னிக்கு நாம எல்லாரும் வெளியே சாப்பிடப் போறோம்'' என்றான் அவளையே கூர்ந்து பார்த்தபடி!

''எனக்குத் தலைவலி! அதனால, நீங்களே அஜயை அழைச்சிட்டுப் போயிட்டு வாங்க...'' என்று கூறி விட்டு குனிந்து கொண்டாள் சகி.

அவளையே ஆழமாகப் பார்த்தவன், ''ஏன் பொய் சொல்றே? என்னோட வர இஷ்டமில்லைன்னா, நேராகவே சொல்லலாம்... சஹானா! அதுக்காக ஏன், பொய்யா தலைவலியைத் துணைக்குக் கூப்பிடறே?'' என்றான் சீற்றத்துடன்.

அவன் கோபத்தை விட, தன்னை முதல் முறையாக அவன் பெயர் சொல்லி அழைத்தது அவளை அதிகம் பாதித்தது.

அவனுடைய உச்சரிப்பில் தன் பெயரே அழகாகி விட்டதைப் போல் உணர்ந்தாள்.

ஆதித்யா அவ்ளையே கவனிப்பதை உணர்ந்து நிமிர்ந்த சகானா, "அம்மாவை அழைச்சிட்டு போங்க. அஜயும் தான் இப்ப உங்ககிட்டே நல்லா பழகிட்டானே! நீங்க எல்லாரும் போயிட்டு வாங்க" என்றாள் மெதுவாக.

அவளையே யோசனையோடு பார்த்தவன் "ஏன்? அம்மா உன்னை ஏதாவது சொன்னாங்களா?" என்றான் கண்களில் கூர்மையுடன்.

சகானா உடனே, "இல்லை... அம்மா ஒண்ணும் சொல்லலை! நானா தான்... தேவையில்லாம, நான் எதுக்குன்னு சொன்னேன்" என்று கூறிவிட்டு அஜயைத் தூக்கிக் கொண்டாள்.

"எது தேவை, எது தேவை இல்லைங்கறதை எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீயும், அஜயும் இன்னும் அரைமணி நேரத்துல தயாரா இருக்கீங்க!" என்று ஆணையிடுவது போல் கூறிவிட்டு, வெளியே சென்றான் ஆதி.

மனதில் யோசனையுடனே அஜயைத் தயார் செய்து விட்டு, தானும் கிளம்பினாள் அவள். எளிமையாக ஒரு சந்தன நிற சுரிதார் அணிந்து தயாரான போது, அதிலும் தேவதை போல் இருந்தாள்.

மூன்று பேரும் தயாராகி கீழே வந்து சாவித்திரி அம்மா டம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள். வாசலுக்குச் ல்லும் வரையிலும் அவரின் பார்வை, முதுகில் ஈட்டியாய் துவதைப் போன்ற உணர்வை சகானாவிற்கு தோற்று து. குத்தீட்டிகளாய் இந்த உலகம்... தான் மட்டும் மவுனப் ர்வைக்குள் என்று அவளுக்குத் தோன்றியது.



வீட்டின் பின்புறம், கார் செல்லச் சரிவான பாதை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. காரில் கிளம்பி, அவர்களை பெரிய ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான் ஆதித்யா. பெரிதாக, மங்கிய ஒளியுடன் இருந்த் அந்த ஹாலில் சென்று அமர்ந்ததும், ஆதித்யாவே உணவை வரவழைத்தான்.

அஜய்க்கு முதலில் கொண்டு வரச் சொல்லி, அவனுக்கு ஊட்டினாள் சகானா. பிறகு, அவர்களிருவரும் சாப்பிட்டனர். எல்லா உணவு வகைகளுமே வித்தியாசமான சுவையுடன் நன்றாக இருந்தது.

சாப்பிட்டு முடித்து, அவர்கள் வெளியே வரும்போது, ஒருவன் வேகமாக முன்வந்து ஆதியிடம் நலம் விசாரித்துப் பேசிக் கொண்டு இருந்தான். கிளம்பும் போது திரும்பி, சகானாவையும் குழந்தையையும் கவனித்து விட்டு ஆச்சர்யமானான்.

"நம்ம சத்யா சாரோட குழந்தையா இது?" என்று கேட்டுக் கொண்டே, ஆவலுடன் அஜயின் கையைப் பிடித்து முத்தமிட்டான். ஆதியின் முகம் ஏனோ மாறியது. "குழந்தையைப் பார்க்கும் போது, அப்படியே சத்யா சார் மாதிரியே இருக்கு மேடம்!" என்று அவளிடம் கூறிவிட்டு, அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றான்.

யார் இவன்? ஒருவேளை ஆதியின் நண்பனாக இருக்குமோ என்ற யோசனையுடன், அஜயைத் தூக்கிக் கொண்டு முன்னால் சென்றாள் அவள். அவனும் ஒன்றும் கூறவில்லை. காரில் செல்லும் போது, அவள் புறம் திரும்பியவன், "அவர் யாருன்னு சொல்லவே இல்லையே?" என்றாள் கேள்வியாக.

''அறிமுகப்படுத்தற அளவு முக்கியமான ஆளில்லை அதனாலதான் சொல்லலை'' என்ற அவன் குரலில் புரியாத ஒரு பாவம் இருந்தது. அதன் பிறகு ஏனோ மவுனமே அங்கு நிலவியது.

வீட்டுக்கு வந்த பின் அறையில் இரவின் பின்னணியில் ஜன்னலருகே நின்று இருட்டை வெறித்தபடி சகானா தன் எதிர்காலத்தைப் பற்றி யோசித்த போது, அதுவும் எந்த ஒளியுமின்றி இருளாகவே இருப்பதாகத் தோன்றியது. ஆனால் இருளுக்குப் பின் வரும் வெளிச்சம், எப்போதுமே பிரகாசிக்கும் என்பது போல் தனக்கும் ஒரு நாள் விடியும் என்று மனதில் உறுதி வந்தது.

மறுநாள், காலைப் பொழுது ரம்மியமாக விடிந்து கொண்டிருந்தது. அஜயுடன் தயாராகி வெளியே வந்து பார்த்த போது இரவும் பகலும் கை குலுக்கிக் கொள்ளும் அந்த விடியலின் அழகு அற்புதமாய், காற்றில் இருந்த குளிரின் ஈரம் நாசியில் நலம் விசாரிப்பதாய் இருந்தது. தோப்பினுள் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் சகானா.

தென்றல் இதமாய், தோப்புகளில் உலவ நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. தோட்டத்தில் மொட்டுகள் மவுனமாக மலர்ந்து கொண்டிருந்தன. அந்த இளங்காலையின் ஏகாந்தம் பொன்னானதாக இருந்தது.

அஜயை இறுகப் பற்றிக் கொண்டு, மெதுவாக நடந்து கொண்டிருக்கும் போது, நேற்றிரவு பார்த்த அந்தப் புதியவன் எதிரே வந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் புன்னகைத்தவன், ''நீங்க தானே மோகனா மேடத்தோட தங்கை?'' என்றான்.



''ஆமாம்'' என்று கூறிவிட்டு, கண்களில் அவன் யாரென்ற வினாவுடன் நோக்கினாள் சகானா.

''ஓ! என்னை அறிமுகப்படுத்திக்கவே மறந்துட்டேன். என் பேர் திலீப்... இங்கே சாவித்திரி அம்மாவோட பள்ளியில தான் வேலை செய்யறேன். எனக்கு சத்யா சாரை நல்லா தெரியும். அவர் இங்கே இருக்கிற பள்ளியைப் பொறுப்பேத்து நடத்துவார்னு நாங்கல்லாம் நினைச்சோம். ஆனா என்னவெல்லாமோ நடந்து முடிஞ்சிடிச்சி'' என்று கூறிவிட்டு, அவளின் சோர்ந்த முகத்தைக் கண்டவுடன், ''சாரி!'' என்றான்.

சகியும், ''பரவாயில்லை'' என்று கூறி மெலிதாக முறுவலித்தாள்.

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று அவன் அவளைப் புகழ ஆரம்பிக்கவும், அவள் தர்மசங்கடத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

திலீப், அஜயை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டான். தன் தந்தையைப் போல் நிறமாக சுருண்ட முடியுடன், கண்ணாடி போட்டுக் கொண்டு இருந்ததாலோ என்னவோ அஜய் அவனிடம் மறுக்காமல் சென்றான்.

எந்த பந்தாவுமின்றி, அவன் இயல்பாகப் பேசியதால் அவனுடன் பேசுவது சகானாவுக்கு சுலபமாக இருந்தது. திடீரென்று அவன், ''உங்க பெயர் என்னன்னு சொல்லவே இல்லையே?'' என்றான்.

''சகானா'' என்று அவள் கூறியவுடனே, ''ரொம்ப அழகான பேர். மோகனா, சகானா ரெண்டுமே ராகத்தோட பெயர்தான் இல்லையா? உங்க அம்மாவுக்கு சங்கீதம்னா பிடிக்குமா?'' என்று கேட்டான்.

புன்னகையுடன் "ஆமாம்! அம்மா பாட்டு டீச்சரா இருந்தாங்க. அதான், எங்க ரெண்டு பேருக்குமே ராகங்களோட பெயரா வச்சிருக்காங்க" என்றாள்.

எதிர்ப்புறம் நடந்து வந்து கொண்டிருந்த ஆதித்யா, இருவரையும் கவனித்துக் கொண்டே வந்தான். திலீப்பிடம் சிரித்தபடி பேசிக் கொண்டு வரும் சகானாவைப் பார்த்ததும், அவன் முகம் இறுகி, கண்களில் சினம் தெரிந்தது.

ஆதித்யா அவர்களருகில் வந்தவுடன், திலீப் "வணக்கம் சார்!" என்றான் பணிவுடன்.

அவனிடமிருந்து, அஜயை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள் சகி.

ஆதி, தன் மனதினுள் சகானாவைப் பற்றிய சிந்தனை யுடனே, பதிலுக்கு வணக்கம் கூறிவிட்டு, மவுனமாய் தன் அறைக்குள் சென்றான்.

அஜயை சாப்பிட வைத்து நீலாம்மாவிடம் கொடுத்து அவன் பாட்டியிடம் கொடுக்க சொல்லி விட்டு, தனக்கு சாப்பிட எடுத்து கொண்டு மாடிக்குச் சென்றாள் சகானா.

சாவித்திரி அம்மாவிடம் சென்று, அவருடைய சொற்களால் வேறு மனம் புண்பட வேண்டாமென்று தோன்றியது. சாப்பிடும் போதே, கதவு தட்டப்பட்டு அறைக்குள் சீற்றத் துடன் வந்தான் ஆதி. அவனைக் கண்டதும் எழுந்தவளை, சாப்பிடும்படி சைகை செய்து விட்டு, ஜன்னலருகில் சென்று நின்றான்.

விழிகளில் சினத்துடன் அவளிருந்த பக்கம் கூடத் திரும்பாமலே, "உனக்கு நான் சொல்லித்தான் தெரியணும்னு இல்லை. ஆண்கள் எல்லாருமே நல்லவங்கன்னு சொல்ல



முடியாது. நீ சின்னப் பொண்ணு... இப்போ எங்க பொறுப்பில இருக்கே! அதனால, எல்லார்கிட்டயும் ஒரு அளவாப் பழகக் கத்துக்கணும்... பின்னாடி எந்தப் பிரச்சினையும் உன்னால வரக்கூடாது" என்று ஒரு புரியாத தொனியில் கூறிவிட்டு திரும்பிப் பார்க்காமல் அந்த அறையை விட்டு வெளியேறினான்.

என்ன இவன்... வந்தான், கவரைப் பார்த்துப் பேசிவிட்டுப் போகிறான். நான் யாரிடம் அப்படிப் பழகினேன் என்று யோசித்தபோது, உடனே திலீப்பின் நினைவு வந்தது. தான் ஒரு ஆணிடம் சாதாரணமாகப் பேசுவது கூடவா தவறென்று கேள்வியாய்த் தோன்றியது. இவனும் சாவித்திரி அம்மாவின் மறுபதிப்போ என்ற எண்ணம் மனதில் வந்தது.

ஒரு வேளை தான் திலீப்புடன் பழகுவது ஆதியின் பொறாமையைத் தூண்டுகிறதோ என்ற எண்ணம் திடீரென்று தோன்ற நெஞ்சினுள் தித்திப்பாய் இறங்கியது. அதற்குக் காரணம் என்ன என்று யோசித்தபோது, எந்த ஒன்றின் மேல் நேசம் அதிகமிருக்கிறதோ, அதை இழந்து விடுவோம் என்ற பயம், பொறாமையின் முதல் அறிகுறி என்பது புரிந்தது.

ஆளுமை இல்லாத காதல், பூக்கள் இல்லாத தோட்டம் மாதிரியோ என்றும் கேள்வி எழுந்தது. ஆனால் அவன் விழிகளில் தெரிந்த தீவிரம், அவள் உயிரையே உலுக்குவதாக இருந்தது.

தன் மேல் அவனுக்கு நம்பிக்கை இல்லையே என்ற வலி, இதயத்தில் எழுந்தது. அன்று உன்னை நேசிக்க ஆரம்பித்ததை நான் தவிர்த்திருந்தால், இன்று என் மனம் உடைந்து போனதையும் தடுத்திருக்கலாம் என்று அவள் மனம் எண்ணியது.

அன்றைய தினம் பாட்டியுடன் அஜய் சிறிது நேரம் தனியாக பயமின்றி விளையாடிக் கொண்டிருந்தான். சாயந்திரமே, புதிதாக ஒரு பெண் சகானாவிற்கு உதவியாகக் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு என்று வேலைக்குச் சேர்க்கப்பட்டாள்.

அந்தப் பெண் சித்ராவுக்கு, பத்துப் பன்னிரெண்டு வயதிருக்கும். அவள் தன் உறவுக்காரப் பெண் என்று நீலாம்மா கூறினாள்.

அந்தப் பெண்ணும் நீலாம்மாவுடனேயே தங்கிக் கொண்டாள். ஏனோ, அவளிடம் அஜய் அன்றே ஒட்டிக் கொண்டான். சிறு குழந்தை, அந்த சின்னப்பெண் சித்ராவை உடனே ஏற்றுக் கொண்டது. ஆச்சர்யமாக இருந்தது சகானாவுக்கு! குழந்தைகள், பொதுவாகத் தன்னுடன் விளையாடும் வயதுடையவர்களை வெகுளித்தனமாக ஏற்றுக் கொள்வது தெரிந்தது. சிலநேரம் சிறு குழந்தைகளுக்குப் புரிவது கூடப் பெரியவர்களுக்கு புரியாதது, வியப்பை அளித்தது.

## 5

காலையில் சித்ராவும் அஜயைத் தயார் செய்வதற்கு சகானாவுக்கு உதவினாள்.

அன்று தோப்பில் நடந்து செல்லும் போது, திலீப்பை மறுபடியும் சந்தித்தாள் சகானா. அவனுடன் பேசலாமா வேண்டாமா என்று எண்ணியபோது அவளைப் பார்க்கவே தான் வந்ததாகக் கூறினான் திலீப்.

நேற்று ஆதி கூறியது சரியோ என்று மனதிற்குப் பட்டது. அவளுடன் நடந்து கொண்டே, அவள் படிப்பைப் பற்றி விசாரித்தான்.



அவள் பி.எஸ்.சி. என்றதும் "நானும் எம்.எஸ்சி.தான்! அப்புறம் நிர்வாகப் பயிற்சி முடிச்சிட்டு இங்கே வேலை பாக்கறேன்" என்று கூறிவிட்டு எதையோ நினைவு படுத்தியவன் போல், "நான் கேட்க வந்த விஷயத்தையே மறந்திட்டேன். உங்களுக்கு கர்நாடக சங்கீதம் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும். ஏன் கேக்கறீங்க?" என்றாள்.

அவன் உடனே, "அப்பாடா! ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது. எங்க வீட்டுக்கிட்டே இருக்கும் பெண்களுக்கும் பாட்டு கத்துக்கணும்னு ரொம்ப நாளா ஆசை. இங்கே பக்கத்துல, யாருமே சரியானபடி டீச்சர் இல்லை. பாட்டு தெரிஞ்சவங்களா தேடிட்டு இருந்தோம். இந்தத் தோப்பு முடிஞ்சவுடனே நம்ம குவாட்டர்ஸ்தான். நம்ம பள்ளியிலே, அலுவலகத்திலே வேலை செய்யறவங்கன்னு எல்லாருக்குமா சேர்த்து ஒரு அம்பது வீடுங்க இருக்கு. உங்களுக்கு சரின்னா, காலையிலயோ சாயந்திரமோ வந்து பாட்டு சொல்லித் தரலாம்" என்றான் அவன்.

சகானாவின் மனதினுள் உற்சாகம் குமிழியிட்டது. தனக்குத் தெரிந்த கலையை பிறருக்கு கற்றுத் தருவதில் வரும் சுகமே அலாதி என்று தோன்றியது. உடனே சரி என்று சொல்லவும் தயக்கமாக இருந்தது.

"சாவித்திரி அம்மாவோட பேசிட்டு, அப்புறமா சொல்றேனே" என்றாள்.

வீட்டிற்கு வந்தவுடன் ஹாலில் அமர்ந்திருந்த சாவித்திரியிடம் சென்று மெதுவாக திலீப் கூறியதைப் பற்றி சொன்னாள் சகானா.

அவளை நிமிர்ந்து பார்த்த அவர் கண்களில் எந்த உணர்வும் இல்லை. ஆர்வமின்றி ''உன் இஷ்டம்...ஆனா அஜய்?'' என்று கேட்டார்.

''நானே அழைச்சிட்டுப் போயிட்டு, திரும்பக் கூட்டிட்டு வந்துடறேம்மா'' என்றாள் அவள். பிறகு, ''காலையில ஒரு மணி நேரம்தான்... சித்ராவும் இருக்கறதாலே சிரமமில்லைன்னு நினைக்கிறேம்மா!'' என்றவுடன் அரை மனதுடன் தலையாட்டினார் சாவித்திரி அம்மா.

காலையில் ஆறு மணிக்கு அஜய் எழுந்தவுடன், பால் கொடுத்து அழைத்துக் கொண்டு போனால், டிபனுக்கு அவனை அழைத்து வந்து விடலாம் என்ற எண்ணம் வந்தது. ஆதித்யாவிடம் கூறினால் என்ன சொல்வானோ என்ற பயம் மனதினுள் கிளர்ந்தது.

ஆனால் காலையிலிருந்து அவனைப் பார்க்கவே முடியவில்லை. அன்று மாலையும் வெகு நேரம் கழித்தே அவன் வீட்டுக்கு வந்தான். அஜய்க்கு எண்களின் வரிசையை எழுதி சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தாள் சகானா. அதை சித்ராவும் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சகானா அவளிடம், ''என்ன சித்ரா பாக்கறே? நீயும் எழுது!'' என்றாள்.

''நான் பள்ளிக்கே போனதில்லைங்க... எங்க சின்னம்மா விடாதுங்க. தம்பியைப் பாத்துக்கணும்... வீட்டு வேலை செய்யணும்'' என்றாள் சித்ரா.

ஊருக்கொரு காமராஜர் பிறந்தால்தான், இந்த நாடு முன்னேறும் என்று தோன்றியது. படித்தவர்கள் நிறைந்த கேரளாவிலேயே இந்த கதி என்றால் மற்ற மாநிலங்கள் எப்படி இருக்கும் என்ற வேதனை வந்தது அவளுக்குள்.



தன் மனதில் எழுந்த எண்ணங்களுடனே எழுதிக் கொண்டிருந்தவள், ஆதித்யா உள்ளே வந்ததையே கவனிக்கவில்லை. இயல்பாகத் திரும்பியவள், அறைக் கதவில் சாய்ந்தபடி அலட்சியமாக நிற்கும் அவனைப் பார்த்ததும் எழுந்தாள்.

''என்ன? வேலை கிடைச்சிருக்கு போலிருக்கு'' என்று கிண்டலாக கூறியவன், அஜயைத் தூக்கிக் கொண்டான்.

அவனை நிமிர்ந்து பார்த்தவள், ''இல்லை! சும்மாதான் அஜய்க்கும், சித்ராவுக்கும் சொல்லிக் கொடுத்துட்டு இருந்தேன்'' என்றாள்.

உயர்த்திய புருவங்களுடன், ''நான் இதைச் சொல்லலை... திலீப் உனக்கு பாட்டு டீச்சர் வேலை வாங்கித் தரப் போறாராமே, அதைச் சொன்னேன்'' என்றான் அழுத்தமாக.

''நானே உங்ககிட்டே சொல்லணும்னு நினைச்சேன். சும்மா இருக்கறதுக்கு, ஏதாவது உபயோகமா பண்ணலாமேன்னு தோணிச்சி அதான் சரின்னேன். உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே?'' தயக்கத்துடன் கேட்டாள் சகானா.

உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கியவன் வேறு ஒன்றும் கூறாமல் அஜயுடன் கீழே சென்றான்.

சகானா, சித்ராவையும் உடன் அனுப்பினாள். அவளிடம், ''அஜய் அழுதா, என்கிட்டே வந்து உடனே சொல்லணும். நீ மேலே தூக்கிட்டு வரக்கூடாது. கீழே போட்டுடுவே... சரியா?'' என்று கூறி அனுப்பி விட்டு தன் பெட்டியிலிருந்து பாட்டுப் புத்தகத்தை எடுத்துப் புரட்டத் தொடங்கினாள்.

அவளுடைய அம்மாவின் முத்தான கையெழுத்து, சகானாவின் கண்களில் கண்ணீர் முத்துக்களை அரும்பச் செய்தது. சரிகமபதநி என்று சுரங்களைத் தாளத்துடன் கோர்த்து, சாதகம் செய்ய ஆரம்பித்தாள். இசைக்கு இருக்கும் பெரிய மகத்துவமே மனதை அப்படியே அதில் ஆழ்த்தி மற்ற கவலைகளை மனதை விட்டு நீங்கச் செய்வதுதான்...!

இம்மையும், மறுமையும் இணைந்து இனிதாய் வந்து என்னுள் கலந்திட்ட இதய ஓசையோ என்று, இசையைப் பற்றி நினைக்கத் தோன்றியது. இசையின் சந்தங்களில் மெய் மறந்திருந்த சகானாவை, அஜயின் நினைவு இவ்வுலகுக்கு இழுத்து வந்தது.

கீழே சென்ற போது அஜய் அங்கு ஆதித்யாவுடனும், சாவித்திரியுடனும் விளையாடிக் கொண்டிருந்தான். தரையில் பாய் விரித்து அமர்ந்து பொம்மைகளுடன் அவர்கள் மூன்று பேரும் விளையாடுவதை ரசித்து விட்டு, அஜயின் கவனத்தைக் கவராமல் மெல்ல வெளியே சென்றாள் அவள்.

பவுர்ணமி வெளிச்சத்தில், தோட்டமே உருக்கி வார்த்த பொன் போல் இருந்தது. வானம், நட்சத்திர மின்மினிகளை பூமிக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தது. தனக்குள் மூழ்கி இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த போது, யாரோ வரும் சப்தம் அவள் மவுன தவத்தைக் கலைத்தது.

காற்றடித்தாலே, கலைந்து போகின்ற மெல்லிய மேகம் போல் நினைவுகள் கலைந்து திரும்பிப் பார்த்தால், ஆதித்யா கண்களில் அர்த்தம் புரியாத ஒரு பார்வையுடன் நின்றிருந்தான். அவன் விழிகள் அவளுள் புகுந்து ஊடுருவுவதைப் போல் இருந்தது. அதை சந்திக்க முடியாமல், திரும்பி உள்ளே செல்ல அடியெடுத்தாள் சகானா.



அவளுடைய கையைப் பிடித்துத் தடுத்த அவன் கரம் இரும்பாக இருந்தது. அவளை நோக்கிக் குனிந்து ''அம்மா சொன்னாங்க! நீ பாட்டுச் சொல்லித் தாதுக்கு சரின்னு சொல்லிட்டேன்னு... எனக்குப் பிடிக்கலை. ஆனா உன் இஷ்டம்!'' என்று கூறி விட்டு, விருட்டென்று திரும்பிச் செல்லும் ஆதியைப் பார்த்த போது ஏனோ மனதை அடைத்தது சகானாவுக்கு.

ஒரு சின்ன விருப்பத்தைக் கூட, தன்னால் இங்கு நிறை வேற்றிக் கொள்ள முடியாதா என்ற தவிப்பு, மனமெங்கும் பரவியது. கோபத்துடன் போகும் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மறுநாள் காலையில் ஆறரைக்கெல்லாம் திலீப் வந்து விட்டான். அஜய்க்கு தேவையானவற்றை எடுத்துக் கொண்ட சகானா, சாவித்திரியிடம் போய் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

தோப்பின் முடிவில் வரிசையாக ஒரே மாதிரிக் கட்டிடங்கள் அமைந்திருந்தன. அங்கு இருந்த தன் வீட்டுக்கு அவர்களை திலீப் அழைத்துச் சென்றான். அவளை உட்கார வைத்து விட்டு உள்ளே சென்று அவனுடைய அம்மா ஜானகியை அழைத்து வந்தான். அவரைப் பார்த்ததுமே சகானாவின் மனதில் மரியாதை வந்தது.

எளிமையாக நெற்றியில் விபூதியுடன் அமைதியாகக் காட்சியளித்தார் அவர். சாவித்திரி அம்மாவிடம் இயல்பாகப் பழக மறுத்த மனம், இவருடன் இலகுவாக ஒட்டிக் கொண்டது. சிறிது நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்த போது, அவரைப் பற்றித் தான் கணித்தது சரி என்றும் தோன்றியது.

சகானாவிடம், காபியைக் கொடுத்த ஜானகி, ''பக்கத்து வீடு காலியாத்தாம்மா இருக்கு. அதை சுத்தம் பண்ணி வச்சிடறேன். நாளைக்கு காலையில இருந்து நீ பாட்டு சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கலாம். நாளும் நல்லா இருக்கு. நான் எல்லாம் பாத்துக்கறேன்'' என்றார் கனிவுடன்.

''ரொம்ப நன்றிம்மா. நானும், பொழுது போகாம சும்மா இருக்கணுமேன்னு நினைச்சிட்டு இருந்தேன். நாளைக்குக் காலையில வரேன். நான் கிளம்பறேன் திலீப் சார்'' என்று கை குவித்தாள்.

திலீப் உடனே, ''ஒரு சின்ன திருத்தம்! திலீப்புன்னே நீங்க என்னைக் கூப்பிடலாம். நாம எல்லாரும் ஒரே இனம்... மத்தியதர வர்க்கம்! சார்னு சொல்லி அந்நியப்படுத்த வேண்டாமே!'' என்றான் புன்னகையுடன்.

சரி என்று தலையசைத்து விட்டு சகானா கிளம்பியதும், திலீப்பும் துணையாக அவளுடன் நடந்து வந்தான். தோப்பிற்குள் பாதி தூரம் செல்லும் போதே, எதிரே ஆதித்யா வருவது தெரிந்தது. அருகில் வந்தவன் திலீப்பிடம் திரும்பி, நான் அழைச்சிட்டுப் போய்க்கறேன். நீங்க போங்க. ங்களுக்கு இன்னிக்கு ஸ்கூல் உண்டுதானே?'' என்றான்.

''ஆமாம் சார்... நான் போய்க் கிளம்பணும்'' என்றான் திலீப் னிவுடன்.

தலையாட்டி விட்டு அவளிடமிருந்த அஜயை வாங்கிக் ாண்ட ஆதித்யா சகியிடம் திரும்பி, ''உனக்கு வண்டி டத் தெரியுமா?'' என்றான் யோசனையுடன்.

பாட்டு வண்டி எல்லாம் எனக்கு ஓட்டத் தெரியாது' என்று ம்புடன் கூறினால், இவன் என்ன சொல்வான் என்ற



நினைவில் உள்ளூரப் புன்னகைத்து விட்டு ''கைனடிக் ஹோண்டா ஓட்டுவேன்'' என்றாள் இயல்பாக.

ரகசியச் சிரிப்பால் மலர்ந்த அவள் விழிகளையும் முகத்தையும் ஒரு சில விநாடிகள் கூர்ந்தவன், சரி என்பது போல் தலையசைத்து விட்டு வேகமாக முன்னே நடந்தான். அதன்பிறகு அவளிடம் எதுவும் பேசாமல் தன் அறைக்குள் சென்று விட்டான்.

ஆனால் அன்று மாலையே வாசலில் புதிதாக கைனடிக் ஹோண்டா ஒன்று நின்றிருந்தது. அதை ஆச்சரியமாகப் பார்த்த சகானாவிடம் ''நீ பாட்டுக் கிளாசுக்குப் போய் வருவதற்கு'' என்று மட்டும் கூறிவிட்டுச் செல்லும் ஆதியைப் பார்த்தபோது இது திலீப் தன்னுடன் வருவதைத் தடுக்கும் நடவடிக்கையோ என்ற எண்ணம் எட்டிப் பார்த்தது.

அன்றிரவு, நல்ல மழை பெய்து கொண்டு இருந்தது. இரவின் தனிமையில் அமர்ந்து சகானா யோசித்துக் கொண்டிருந்த போது, தான் பாட்டு சொல்லிக் கொடுக்க ஒத்துக் கொண்டதே அவனுக்கு பிடிக்கவில்லையோ என்று எண்ணினாள்.

அவன் கோபப்பார்வை தன்னைத் தீண்டியவுடன் தன் மூச்சு அனலாய் மாறியதை மழைச்சாரல் வந்து மனதோரம் கூறியது. உள்ளூர ஒரு குளிர் பிறந்து, தேகத்தை சிலிர்க்கச் செய்தது. ஜனன மரணப் பதிப்பு போல் வாழ்க்கையில் காதலும் ஒருமுறை மட்டுமே வருமென்று தோன்றியது.

அதிகாலையில் எழுந்த போது, நேற்றிரவு ரகசியமாய் தன் கனவில் வந்து சென்ற ஆதியின் நினைவு, மலை அருவியின் சலசலப்பாக இருந்தது. மலையில் அருவியின் ஓட்டம்

நின்றாலும் தன் தடத்தை அது விடாது பதித்திருப்பது போல் அவனும் தன் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருப்பது புரிந்தது.

மறுநாள் காலையில் புது வண்டி பூஜை போடப்பட்டுத் தயாராக இருந்தது. அஜயையும், சித்ராவையும் உடன் அழைத்துக் கொண்டு தோப்பைச் சுற்றிச் சென்ற பாதை வழியே சகானா சென்ற போது வாசலுக்கு வந்து பார்த்த சாவித்திரியம்மாவின் பார்வையில் நிச்சயமாக சந்தோஷம் தெரியவில்லை.

திலீப்பின் வீட்டிற்குச் சென்ற போது அங்கு மாணவிகள் நிறையப் பேர் காத்திருந்தனர். சிறு வயதிலிருந்து பெரிய பெண்கள் வரை இருந்தார்கள். ஜானகி புன்னகையுடன் வாசலுக்கே வந்து வரவேற்றார். அவளை உட்கார வைத்து விட்டு அந்தப் பெண்களை அறிமுகப்படுத்தினார்.

அஜயை அவரும் சித்ராவும் கவனித்துக் கொண்டனர்.

''எவ்வளவு பணம் கொடுக்கணும்னு, அவங்க எல்லாரும் என்கிட்ட கேட்டாங்கம்மா. உன்னைக் கேட்டுட்டு சொல்றதா சொன்னேன். ஒரு மாசத்துக்குன்னு கேக்கலாமா? இல்லை இத்தனை வகுப்புக்குன்னு கேக்கலாமா?'' என்றார் ஜானகி.

''அவங்க என்ன கொடுக்கறாங்களோ வாங்கிக்கறேன்மா. இது என் ஆத்மதிருப்திக்காக, நான் செய்யறது! அதனால அதை வியாபாரமாக்க நான் விரும்பலை. நீங்களே அவங்ககிட்டே சொல்லிடுங்க'' என்றாள் சகானா முறுவலித்தபடி.

முதல் நாள் விநாயகர் துதி செய்து ஆரம்பித்தபோது, அவள் குரல் இனிமையாய் இழைந்தது. ராகங்கள் உதய



நிலவாய், உயிரோசையாய், ஊழிக்காற்றாய் மிதந்து வந்தது. இசையெனும் ஆழ்கடலில் இனிதாக மூழ்கி கரங்களை முத்தாகக் கோர்த்தாள். அன்று வகுப்பு முடிந்த மாணவிகள், மகிழ்ச்சியுடன் சென்றனர்.

ஒரு மணி நேரம் போனதே தெரியவில்லை. மனம் லேசாகி இருந்தது சகானாவுக்கு! நீண்ட நாட்களுக்குப் பின் நிம்மதியை மனம் தத்தெடுத்துக் கொண்டது.

அஜயை அணைத்து ஆசையுடன் முத்தமிட்டவள் தன்னால் பிறரை மகிழ்விக்க முடியும் என்றால், அது தனக்குள் வரமாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

## 6

வீட்டிற்கு வந்து இறங்கியதுமே எதிர்ப்பட்ட சாவித்திரி அம்மா, அஜயை வாங்கிக் கொண்டு வேகமாக உள்ளே சென்றார். அஜய்க்கு டிபன் எடுத்துக் கொண்டு அவனைத் தேடிய போது, ஆதித்யாவுடன் வந்து கொண்டிருந்தான் அஜய்.

வேகமாக முன் வந்து, ''ரொம்ப நன்றி'' என்றாள் சகானா.

இரு புருவங்களும், கேள்வியுடன் உயர, ''எதற்கு?'' என்றான் ஆதி.

''டூவீலர் ஏற்பாடு செஞ்சு தந்ததுக்கும், என்னை பாட்டு கிளாஸுக்கு அனுப்பினதுக்கும்!'' என்றாள் சகி.

''முதல் விஷயம் வேணும்னா நான் விருப்பப்பட்டு செஞ்சது. ஆனா, ரெண்டாவது விஷயம் எனக்கு விருப்பமில்லாதது. அதுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை!'' என்று பட்டென்று கூறிவிட்டு ஓட்டுக்குள் சுருங்கிக்

கொள்ளும் தந்தையாய் அவன் முகம் கருக்கிச் சென்றது. அவள் மனதைத் தைத்தது.

அஜயுடன் விளையாடிக் கொண்டிருந்த போது தான், சகிக்கு நினைவு வந்தது... இன்னும் ஒரு வாரத்தில், அஜயின் இரண்டாவது பிறந்தநாள் வருகிறதென்று! சாவித்திரியிடம் சென்று விவரம் கூறினாள்.

அஜயின் முதல் பிறந்தநாளை நண்பர்களுடன் போன வருடம் ஹோட்டலில் பெரிய அளவில் கொண்டாடியது, சகானாவுக்கு உடனே மோகனாவையும் சத்யாவையும் நினைவுபடுத்தியது.

இந்தப் பிறந்தநாளையும் நன்றாகக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் அவளுள் கிளர்ந்தது. அஜய் பாட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்ததால், அவள் நேரே ஆதித்யா விடம் சென்றாள். அவனுடைய அலுவலக அறையில் எழுதிக் கொண்டிருந்தவன் அவளைக் கண்டதும், உயர்த்திய புருவங்களுடன் எழுந்து வந்தான்.

அவனிடம், "சத்யா மாமாவுடைய திங்ஸ் எல்லாம், எங்க இருக்கு? அடுத்த வாரம் அஜயோட ரெண்டாவது பிறந்தநாள் வருது. அவனோட முதல் பிறந்தநாள் ஆல்பம், மாமாவோட பெட்டியில இருக்கு. அதை அம்மாவுக்குக் காட்டலாம்னுதான் கேட்கிறேன்" என்ற போது, அவன் முகம் இயல்பான மகிழ்ச்சியில் விகசிப்பதைக் கண்டாள்.

உடனே, "அஜய்க்கு என்னைக்குப் பிறந்த நாளுன்னு நீ சொன்னே? அதைப் பெரிய அளவுல நல்லா கொண்டாட ணும். அப்படியே அவளையும், இங்கே எல்லார்கிட்டயும் அறிமுகப்படுத்தின மாதிரியும் இருக்கும்" என்றான் ஆதி மகிழ்ச்சியுடன்.



"அடுத்த ஞாயிற்றுக்கிழமை. போன வருஷம், நாங்க எல்லாரும் ரொம்ப சந்தோஷமா கொண்டாடினோம்" என்று கூறிவிட்டு, அக்கா, மாமாவின் நினைவில் கண்கள் கலங்க தலைகுனிந்து கொண்டாள் சகி.

"என்னோட வா!" என்று கூறிவிட்டு, பின்பக்கம் இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றான் ஆதித்யா, அங்கே ஊரிலிருந்து எடுத்து வந்த பொருட்கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அவள்தான் எல்லாவற்றையும் பேக் செய்து வைத்ததால், சத்யாவின் பெட்டியிலிருந்த புகைப்படங்களை எடுத்த போது, மேலே இருந்த அவர்களுடைய கல்யாண ஆல்பத்தையும் எடுத்துப் பார்த்தாள். சத்யாவையும் மோகனாவையும் புகைப்படத்தில் கண்டதும், அவள் கண்களில் நீர் கோர்த்து, பார்வையை மறைத்தது.

அம்மா இறந்த போது, அந்த சோக நிமிடங்களில் தலை கோதி விட்ட ஒரு தோழியாய்! கூந்தலில் நீர் சொட்ட சிலிர்த்து நிற்கும் போது, தலை துவட்டி விடும் ஒரு அன்னையாய்! தன்னைக் குழந்தை போல அரவணைத்த ஒரு சகோதரியை இழந்த துக்கம், அவளை வெகுவாய் பாதித்தது.

ஆதித்யா, பின்புறமிருந்து சகானாவையே கவனித்துக் கொண்டு இருந்தான். அவள் உடல் குலுங்க ஆல்பத்தில் முகம் புதைத்து அழுவதைக் கண்டதும், வேகமாக விரைந்து வந்து அவளை அப்படியே தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

சகானாவின் அழுகை அவன் மனதை இரண்டாகப் பிளந்தது. அவளின் சோகம் துடைக்க வேண்டும் என்ற அவசரம், அவன் செயலில் தெரிந்தது. சகி, தாங்காமல் அழுது கொண்டே இருந்தாள்.

அவனுடைய மார்பில் தான் முகம் புதைத்திருப்பதை, அவள் முதலில் உணரவே இல்லை. அவனுடைய கைகள், அவள் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுக்கும் போதுதான், சுய நினைவுக்கு வந்து அவனிடமிருந்து அவசரமாகப் பதறி விலகினாள். அவன் தொடுகையால் தேகத் தங்கம் உருகியது.

அவனிடமிருந்து விலகி, ஆல்பத்துடன் தன் அறைக்கு ஓடிச்சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் சகானா. அவள் பின்னோடு வந்த ஆதித்யா எவ்வளவு நேரம் கதவு தட்டியும் திறக்கவில்லை அவள்! யோசனையுடன், ஏதோ நினைவுகள் மனதில் பின்ன, கீழே சென்றவன் அஜயுடன் அமர்ந்து சிறிது நேரம் விளையாடினான்.

வெகுநேரம் கழித்து, மனம் தெளிந்து எழுந்த சகானா, முகம் கழுவிக் கொண்டு இசைப் புத்தகத்தை கையில் எடுத்து அதில் கவனம் செலுத்தத் தொடங்கினாள். ஆனால் ஆதி தன்னை அணைத்து ஆறுதல் படுத்தியதை எண்ணி, மனம் படபடத்தது. இதுவரை ஒரு ஆணின் ஸ்பரிசம் பட்டிராததால், அவள் மனம் அந்த முதல் தொடுகையில், தன் நிலை இழந்தது. அது அவளுக்குள் உயிர்ப்பைத் தந்து, உயிர்ப்பூவை மலரச் செய்தது.

இமைக்கின்ற நொடிக்கும் குறைவான பொழுதினில், அவனைப் பற்றி ஆயிரம் எண்ணங்கள் மனதில் உதித்தது.

சில்லென்ற பனிநீரை, யாரோ முகத்தில் தெளித்தாற் போல், தன் நினைவுக்கு வந்தாள் சகானா. மனதில் விழுந்த அடிகளுக்குப் பின், வாழ்க்கைப் பாடம் கற்றுத் தரும் குருவாய், அனுபவமெனும் ஆசான் அவளைக் கடிவாளமிட்டு அடக்கியது.



அட்சரம் பிசகாமல், அன்று சாவித்திரி அம்மா பேசியது நினைவில் மோதி, கனவைக் கலைத்தது. தன்னுடைய முட்டாள்தனமான காதலை, தனக்குள் அடைத்துப் பூட்டி இறுகத் தாளிட்டாள் சகானா.

இனி, ஆதித்யா இருக்கும் திசைக்கே திரும்பக் கூடாது என்ற உறுதியோடு கீழே வந்தபோது, சாவித்திரியுடன் அஜய் மட்டும் இருந்தான். அவரிடம் சென்று ஆல்பத்தைக் கொடுத்துவிட்டு, நேரே சமையலறைக்குச் சென்றாள்.

காலையில் சாப்பிடாமல் சென்றது அப்போது தான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. பசியே இல்லை என்றாலும், இரண்டு இடியாப்பம் வைத்து சாப்பிட்டாள்.

நீலாம்மா, அவளுடைய சிவந்த முகத்தையும், சற்றே வீங்கிய இமைகளையும் கண்டு பரிதாபப்பட்டவர் அன்புடன் சகியைப் பார்த்து, ''அக்காவை நினைச்சி அழுதியாம்மா? கஷ்டமாதான் இருக்கும். என்ன செய்யறது? இறந்தவங்க பரவாயில்லை, நிம்மதியாகப் போயிடறாங்க. ஆனா, உயிரோட இருக்கிறவங்களோட நிம்மதியையும் சேர்த்து எடுத்துக்கிட்டுல்ல போய்டுறாங்க! நீ தைரியமா வாழ்க்கையை வாழப் பழகிக்கணும்மா!'' என்று கூறிய போது, படிக்காத இவருக்குள் இப்படி ஒரு பக்குவமா என்ற வியப்புதான் சகானாவுக்கு வந்தது.

ஆதித்யா கிளம்பிச் செல்லும் ஓசை, கார் செல்வதன் மூலம் கேட்டது. அஜயை அழைத்து வரச் சென்றபோது, சத்யாவின் புகைப்படத்தை பார்த்து, சாவித்திரி கண்கலங்கிக் கொண்டிரு தத்தைக் கண்டாள் சகானா. இவரும் பாசம் மிகுந்தவர்தா என்ற எண்ணம், அவள் மனதில் நிலைபெற்றது.

அஜய், கஞ்சி சாப்பிட்டு விட்டுத் தூங்கியதும் பாட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

நாளைக்கு எடுக்க வேண்டிய பாடங்களில் மனதைச் செலுத்தினாள். போன் வந்திருப்பதாக பணிப்பெண் வந்து சொன்னபோது, யாராக இருக்கும்? ஒருவேளை திலீப்போ என்று எண்ணியபடி எடுத்தாள் சகானா.

அவள் "ஹலோ" என்றபோது, எதிர்ப்பக்கம் இருந்து ஒரு சப்தமும் இல்லை. திரும்பவும் "ஹலோ" என்றதும், ஆதித்யாவின் ஆழ்ந்த குரல் "நான் ஆதி பேசறேன்" என்று கேட்டது. உடனே மனம் விதிர்த்து போனது அவளுக்கு.

அவன் உடனே, "என்ன? குரல் ஒரு மாதிரியா இருக்கு? இன்னும் சமாதானமாகலையா!" என்றான், குரலில் ஒருவித மென்மையுடன்.

அலைபாய்ந்த மனதை அடக்கி, "ம்ஹூம்... அதெல்லாம் ஒன்னும் இல்லையே... அம்மாவோட பேசணுமா?" என்றாள் இயல்பாக.

"ஏன்? உன்கிட்டே பேசக்கூடாதா? எனக்கு இன்னிக்கு ஆபீசுக்கு வரவே பிடிக்கலை. இங்கே வந்தும், ஏதேதோ ஞாபகம்! வேலையே ஓடலை. பேசாம வீட்டுக்குத் திரும்பி வந்திடலாமான்னு இருக்கேன்" என்றான், குரலில் ஒருபுதுத் தொனியுடன்.

இதயம் நழுவி, வேறு இடம் பெயர்ந்த மாதிரி இருந்தது அவளுக்கு. பேசாமல் போனை வைத்து விட்டாள்.

தன் அறைக்குள் சென்று கதவை இறுகத் தாழிட்டுக் கொண்டாள். வெளியிட முடியாத தன் மன உணர்வுகளுக்கும் சேர்த்து! அன்று மதியம் சாப்பிடவே முடியவில்லை.



மாலையானதும், அஜயுடன் கடற்கரைக்குச் சென்று, அவனை விளையாட விட்டு விட்டு மணலில் அமர்ந்திருந்தாள். உள்ளத்திற்குள் எண்ணங்கள் கடல் அலையை விட வேகமாய்ப் பொங்கியது.

'கடவுளே! இங்கெனக்குள் அவன் நினைப்பை, ஏன் விதைக்கின்றாய்... பிறகு ஏன் வதைக்கின்றாய்' என்ற எண்ணம் வந்தது.

மணலின் மீது காலடிச் சுவடுகளைக் கண்ட போது... கடல் மணலில் ஏற்பட்ட காயங்கள் காலடித் தடங்களாகவும், தன் மனதில் ஏற்பட்ட ஊமைக் காயங்கள் சொல்லடித் தடங்களாகவும் தோன்றியது. உடனே சாவித்திரி அம்மாவின் நினைவு வந்தது.

திடீரென்று, அஜயின் ஆரவாரமான கூச்சல் கேட்டு கண்விழித்தபோது ஆதித்யா வந்து கொண்டு இருந்தான். அவசரமாக எழுந்து எதிர்ப்புறம் நடக்கத் தொடங்கினாள் சகானா. அவளை விசித்திரமாக நோக்கிவிட்டு, அஜயைத் தூக்கிக் கொண்டு விரைவாகச் சென்று சகியின் கையைப் பற்றினான் ஆதித்யா.

எவ்வளவோ முயன்றும், அவளால் அவனுடைய உடும்புப் பிடியிலிருந்து, தன் கையை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. ஏறிட்டு அவனை நோக்கியவள், அவன் பார்வையிலிருந்த கோபத்தைக் காணவும், விழிகளை மணலில் பதித்தாள். அவன் பார்வை கோபமெனும் ஆயுதமேந்தி வருவதாகப்பட்டது.

"ஏன்? என்னைப் பார்க்கப் பிடிக்கலையா... என்னைத் தவிர்க்கற மாதிரித் திரும்பிப் போறே? எனக்குள்ளே ஆயிரம்

ஆசைகள், கற்பனைகள் நிறைய உன்னால ஏற்பட்டுடுச்சு... எல்லாத்தையும் உன்கிட்டே சொல்லலாம்னு ஓடிவந்தா ஏன் இப்படி விலகி போறே'' என்றான் பிடித்திருந்த கையை விடாமல்.

சகானா தலை குனிந்தபடி, ''என் மனசுல எந்தக் கற்பனையும் இல்லை. ப்ளீஸ்! என்னை விட்டுடுங்க. உங்க வீட்டில் பெரிய மனசு பண்ணி எனக்கு இடம் கொடுத் திருக்கீங்க. அதுக்காக, என் மனசுல எல்லாம் உங்களுக்கு இடம் தர முடியாது... சாரி!'' என்று கூறி விட்டு, மூச்சிரைக்க வேகமாக ஓடி வீட்டிற்குள் சென்று விட்டாள்.

சகானாவின் பதில், அவனுக்கு வாழ்விலேயே முதல் தோல்வியை அறிமுகப்படுத்துவதாக இருந்தது. கண்கள் இரண்டும் ரத்தமெனச் சிவந்து, முகம் பாறையென இறுகி உறைந்தது. ஒரு வண்ணத்துப்பூச்சியின் மோதலில் இதயமே சுக்கு நூறாகியது.

அஜய்க்கு ஏதோ புரிந்து அழ ஆரம்பித்தான். அவனுடன் வீட்டுக்கு வந்த ஆதி, அம்மாவிடம் அவனைக் கொடுத்து விட்டு தன் அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டான். அவன் மனம், உடைந்து சிதறி இருந்தது.

சகானாவின் நிலையோ சொல்ல முடியாத வேதனைகளைச் சுமந்தபடி இருந்தது. காதல் கொண்ட தன் மனதை மறைத்து, ஆதித்யாவின் உள்ளத்தையும் உடைத்தது. அவளை உயிரிழந்த பறவை போல் ஆக்கியது. தன் மேலேயே தாங்க முடியாத வெறுப்பு வந்தது, சகானாவுக்கு.

ஆதித்யாவின் முகம் நினைவில் வந்து, மனதை அலைக்கழித்தது. அஜயை சித்ராவிடம் விட்டு விட்டு



தலையணையில் முகம் புதைத்து, தன் மனக்குமுறலைக் கண்ணீர் வழியே வெளியிட்டுக் கொண்டிருந்தாள். நெஞ்சம் கனத்துப் போயிருந்தது. அவளின் அழுகை, அன்று முழுவதும் தொடர்ந்தது.

மறுநாள் விடியல் அவளுடைய கடமையை நினைவு படுத்தியது. அழுது வீங்கிய முகத்தை, எத்தனை முறை கழுவினாலும் பயன் இல்லை. கண்கள் சோர்ந்து, இமைகள் வீங்கி, முகம் சிவந்து காணப்பட்டாள்.

பாட்டு வகுப்புக்குச் சென்ற போது அவளைக் கண்ட ஜானகியின் மனம் துணுக்குற்றது. எப்போதுமே பளிச்சென்ற சிரிப்புடன் இருக்கும் பெண், இன்று ஏன் இப்படி இருக்கிறாள் என்று யோசித்தாலும், அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை.

வகுப்பு முடிந்தவுடன் அவளை அழைத்துச் சென்று காபி போட்டுக் கொடுத்த பிறகே அனுப்பி வைத்தாள்.

வீட்டிற்கு வந்த போது, ஹாலில் அப்போதுதான் எழுந்து வந்து கலைந்த தலையுடன் தினசரிப் பத்திரிகையைப் படித்து கொண்டிருந்தான் ஆதித்யா.

அதிகாலையிலேயே எழுந்து ஜாகிங் செல்பவன், இன்று ஏன் இப்படி அமர்ந்திருக்கிறான் என்ற எண்ணம் மனதில் ஓடியது. அவன் கண்கள் சிவந்து, முகம் உணர்ச்சியின்றி இருந்தது. அவன் தன்னிடம் ஏதும் பேசும் முன், விலகி மாடிக்கு அவசரமாகச் சென்றாள் சகி. அன்றிலிருந்து ஆதித்யா அவள் இருக்கும் பக்கமே திரும்பவில்லை.

மணலைக் குடையும் மண்புழுவாய், அவள் மனதை ஆதியின் நினைவு குடைந்தது. அவனுடைய கம்பீரம் மட்டும் மனதில் நீங்காமல் நிலைபெற்றது.

கிளிகள் கூட, சில சமயங்களில் மனித மொழியில் பேசுகின்றன. ஆனால் அவன் விழிகள் பேசும் மொழி மட்டும் பல சமயங்களில் புரியாத புதிராய் இருந்தது. புரிந்த போதோ, அதைத் தான் ஏற்றுக் கொள்ள முடியாத சோகமான நிர்ப்பந்தம் அவளுடைய விழியோரங்களில் இரு சோக அரும்புகளை அறிமுகப்படுத்தியது.

கோயம்புத்தூரில் இருந்தவரை, தான் சுதந்திரப் பறவையாய் சிறகடித்ததும், இன்று அவளுடைய நேசச் சிறையில் அகப்பட்டுத் தவிப்பதும் புரிந்து மனம் ரணமானது. தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்ள, தான் இன்னும் பக்குவப்பட வேண்டும் என்ற எண்ணம் சகானாவுக்குள் ஆழமாய் வேரூன்றியது.

## 7

அஜயின் பிறந்தநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே திலீப்புடன் கடைக்குச் சென்று ஒரு பிரேஸ்லெட்டும், அழகிய ஷெர்வானி உடை ஒன்றையும் வாங்கினாள் சகானா.

பிறந்தநாளுக்கென நண்பர்களையும், அலுவலகத்தில் வேலை செய்பவர்களையும் சாவித்திரி அம்மா அழைக்க ஏற்பாடு செய்திருந்தார்.

முதல் நாளே, வீடு முழுவதும் வண்ணக் காகிதங்களால் அலங்கரித்தனர். வீட்டின் வரவேற்பறையில் கேக் வெட்டி கொண்டாடிவிட்டு, விருந்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தனர். எல்லாவற்றையும் சாவித்திரி அம்மாவே முன் நின்று கவனித்துக் கொண்டார்.



வீட்டின் பின்புறம் பெரிய புல்வெளி இருந்தது. தாங்களாகவே எடுத்து சாப்பிடும் பஃபே முறையில் அங்கு விருந்தை வைத்திருந்தனர்.

பிறந்தநாள் அன்று காலையில், அஜய்க்கு வாழ்த்து சொல்லி முத்தமிட்டாள் சகானா. அவனைக் குளிக்க வைத்துத் தயார் செய்து, தான் வாங்கி வந்திருந்த உடையையும், நகையையும் அணிய வைத்து, கீழே அழைத்துச் சென்றாள்.

எதிரே, ஆதித்யா மாடிப்படியேறி வந்து கொண்டிருந்தான். ஒரு வாரமாக மாடிப் பக்கமே வராதவன், அஜய்க்கு வாழ்த்துச் சொல்லத்தான் வருகிறான் என்று புரிந்து, அஜயை அவனிடம் அனுப்பி விட்டு, கீழே இறங்கிச் சென்றாள் சகானா.

சமையலறையில், காலை உணவு தடபுடலாகத் தயாராகிக் கொண்டிருந்தது. அதன் நறுமணம் வீடு முழுவதும் கமழ்ந்தது. பலூனை ஊதிக்கட்டிக் கொண்டிருந்தனர். வேலையாட்கள். வரவேற்பறையை மலர்களாலும் பலூன்களாலும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர்.

அங்கு மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த சாவித்திரி அம்மா முதன்முறையாக அவளைப் பார்த்துப் புன்னகை செய்தார். பதிலுக்குப் புன்னகைத்து விட்டு, அஜயைத் தேடினாள் சகி. ஆதித்யாவே அவனைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

அஜயை ஆவலுடன் தூக்கி முத்தமிட்ட சாவித்திரி அம்மா, "இந்த டிரெஸ் அஜய்க்கு ரொம்ப அழகா இருக்கே? எங்கே வாங்கியது?" என்றார் அவளைப் பார்த்து.

சகானா முறுவலித்தபடி, "நேத்துதான்மா கடைக்குப் போய் வாங்கிட்டு வந்தேன். இந்த பிரேஸ்லெட் கூட அங்கதான் வாங்கினேன்" என்றாள்.

முதன்முதலாக அக்கறையுடன், ''தனியாகவா போனே?'' என்று கேட்ட அவரிடம், ''இல்லம்மா! திலீப்போட போனேன்'' என்றான் சகி.

ஒரு வேகமான மூச்சுடன் திரும்பிய ஆதித்யா, ஒரு நொடி அவளைப் பார்வையாலேயே எரித்துவிட்டு பிறகு திரும்பிக் கொண்டான்.

சாவித்திரி அஜய்க்கு வைர டாலர் பதித்த சங்கிலியை அணிவித்து விட்டார்.

அவனுக்காக, சிறிய அளவில் கோட் சூட்டிற்கு அளவு கொடுத்திருந்தது நேற்றே தைத்து வந்திருந்தது. எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு, அஜயைக் கீழேயே விளையாடச் சொல்லி விட்டு மாடிக்கு சென்றவள் தலை குளித்துக் கிளம்பி இறங்கி வந்தாள். அஜய்க்கு காலை டிபனை, அவனுடைய பாட்டியே கொடுத்து விடுவதாகக் கூறி இருந்தார்.

சகானா அன்று பாட்டு வகுப்புக்கு விடுமுறை விட்டிருந் தாள். அஜயுடன் வந்த ஆதித்யா, அவளைத் திரும்பியும் பாராமல் அஜயைத் தந்து விட்டு வேகமாகச் சென்று விட்டான்.

அஜய்க்கு, மதியம் சாப்பாடு கொடுத்துத் தூங்க வைத்துவிட்டு தானும் சிறிது நேரம் ஓய்வெடுத்தாள் சகானா. ான்கு மணிக்கு அஜயை எழுப்பி அவனைத் தயார் செய்து ாவித்திரி அம்மாவிடம் விட்டு விட்டு வந்தவள், தானும் ாராக ஆரம்பித்தாள்.

தனக்குப் பிடித்த வெள்ளை நிற ஆர்கன்ஸாவில், ஞ்சிவப்பு நிற வெல்வெட்டில் ரோஜாக்களை வைத்துத்



தைக்கப்பட்ட புடவையை அணிந்தவள், பொருத்தமாக முத்துக்கள் பதித்த நகைகளையும் அணிந்து கொண்டாள்.

சகானா தயாராகி கீழே வரவேற்பறைக்கு வந்தபோது, அங்கு யாருமே இல்லை. அந்தப் பெரிய அறையின் நடுவே பெரிய மேஜையின் மேல் கேக் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இரு மெழுகுவர்த்திகள், சாக்லேட் டப்பாக்கள் எல்லாம் தயாராக இருந்தது.

ஏழு மணிக்கு கேக் வெட்டுவதாக ஏற்பாடு. இப்போது மணி ஐந்தே முக்கால் என்றது. அங்கிருந்த கடிகாரம். தன் அறையில் இருந்து வெளியே வந்த ஆதித்யா, சகானாவைக் கண்டதும், ஒரு கணம் இமைக்க மறந்து சிலையானான்.

சபாரி சூட்டில் அவன் நின்ற கம்பீரம் கண்டு சகானாவும் பார்வையை விலக்க முடியாமல் தவித்தாள். இருவருக் கிடையேயும் ஒருவித அழுத்தமான மவுனம் ஆட்சி செய்தது. முத்துச் சிப்பிக்குள் மழைத்துளியைப் போல், அவனுடைய நினைவுகளைச் சுமந்தபடியே அவள் மனம் மவுனப்புரட்சி செய்தது.

தன்னை அறியாமல், அவனிடம் மனதை திறந்து பேசி விடுவோமோ என்ற பயத்தில் சகானாவுக்கு மூச்சடைத்தது. வேகமாக சாவித்திரி அம்மாவிடம் சென்றவளை, அவர் பார்வை பிரமிப்புடன் சிறிது நேரம் அளவிட்டது.

அஜய், கோட் சூட்டில் அழகாக இருந்தான். ஆதித்யாவின் கையைப் பிடித்து நடந்து கொண்டு உற்சாகத்துடன் அவனுடைய பாட்டியை, ''பாட்டிம்மா'' என்று கூப்பிடப் பழகி இருந்தான். விருந்தினர் ஒவ்வொருவராக வரத் தொடங்கி னார்கள்.

அனைவரும் வந்ததும், கேக் வெட்டினார்கள். பாட்டி பின்புறம் நின்று பிடித்துக் கொள்ள, ஆதித்யா ஒரு பக்கமும், சகானா மறுபக்கமும் நின்றிருந்தார்கள். கேக் வெட்டியவுடன், அஜய் கையில் கேக்குடன் சகியிடம் திரும்பினான்.

சகானா, அவனுடைய நீட்டிய கையைப் பிடித்து அப்படியே திருப்பி சாவித்திரி அம்மாவின் வாயில் கேக்கை ஊட்டினாள். அவர் முகம் உடனே மலர்ந்தது.

பிறகு அஜயிடம் குனிந்து, ''அஜ்ஜுகும்மா! சித்தப்பாவுக்குக் கொடு'' என்றாள் மெதுவாக.

ஆதித்யாவின் வாயில் ஊட்டி விட்டு, பிறகு சகிக்கும் கொடுத்தான். அவளுக்குக் கண்கள் பனித்தது. இந்த அன்பு ஒன்றே தன் வாழ்நாள் முழுவதும் போதும் என்று சகானாவுக்கு தோன்றியது.

எல்லோரும் கேக் சாப்பிட்டபிறகு, பின்புறமிருந்த புல்வெளியில் சென்று சிறு குழந்தைகளுக்குப் பல போட்டிகளை நடத்தினார்கள். ஒரே ஆட்டமும் பாட்டுமாக இருந்தது. எல்லாம் முடிந்தவுடன், யாராவது பாட வேண்டும் என்று வந்திருந்தவர்கள் அனைவருமே ஒரே முகமாகக் கூறினர்.

சாவித்திரி அம்மா சகானாவிடம் திரும்பி, ''உனக்குத் தான் பாடத் தெரியுமே? நீ பாடேம்மா...'' என்றார்.

ஆச்சரியத்தில் அவளுக்குப் பேச்சே வரவில்லை. சிறு முறுவலுடன் மறுத்த சகானாவின் அருகில் வந்த ஆதித்யா, தன் ஒரு வாரத்தின் மவுனம் கலைத்து, ''ப்ளீஸ் பாடு சகி'' என்றான் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்.



அவனுடைய பேச்சின் தீவிரத்தில் சிலிர்த்தவள் என்ன பாடுவதென்று யோசித்தாள். ஏன் இந்தப் பாடலைத் தேர்வு செய்தோம் என்று புரியாமலேயே பாடத் தொடங்கினாள். **''அலைபாயுதே கண்ணா... என் மனம் அலைபாயுதே...''** என்று பாடியபோது, குரல் குழைந்து, இழைந்து தேனாய் அனைவரின் மனதிலும் நுழைந்தது.

ஆனால், ஆதித்யாவுக்கு மட்டுமே அவளுடைய அலைபாயும் மனது புரிந்தது. வார்த்தைகளால் கூற முடியாத ஆயிரம் செய்திகளை, ஒரு பாடல் அவனுக்கு உணர்த்துவதாய் தோன்றியது.

பாடலின் இடையே, **'ஒரு தனித்த வனத்தில், அணைத்து எனக்கு, உணர்ச்சி கொடுத்து முகிழ்த்தவா!'** என்ற வரிகள் வந்தபோது தன்னை அறியாமல் உயர்ந்த அவளுடைய விழிகள், அவனிடம் சரணடைந்தன.

அந்த வரிகளில் ஒன்றி ஒரு மவுன லயத்தில் திளைத்திருந்தான் ஆதித்யா. அந்த வரிகள் அவனுக்கு அன்றொரு நாள், தன் கையில் வீணை போல் இனிதாய் அடங்கி இருந்த அவளின் உருவம், மனதில் நினைவுகளை மீட்டுவதாய் இருந்தது.

கண்மூடி மெய்யுருக அவள் பாடி முடித்ததும், அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஒரு விதமான மோன நிலையில் திளைத்திருந்த ஆதித்யாவும் சுய நினைவுக்கு வந்து, அவளைக் கண்களாலேயே பாராட்டினான்.

எல்லோரும் சாப்பிடச் சென்ற போது அஜய்க்கு சாப்பிடக் கொடுப்பதற்காக சகானா நீலாம்மாவிடம் சென்றாள்.

அவனுடைய தேவைகளை கவனித்து முடித்து விட்டு வரும்போது, திலீப் அவளுக்காகக் காத்திருந்தான்.

அவள் தட்டுடன் வந்து அமர்ந்தபோது அருகில் வந்து அமர்ந்தவன், ''ரொம்ப அருமையா இருந்தது சகானா உங்க பாட்டு! மனசு உருகிப் பாடின மாதிரி இருந்தது. ஆனா எந்தக் கண்ணனை நினைச்சின்னு தான் தெரியலை'' என்றான் ஆர்வத்துடன்.

அவள் கண்கள் மட்டும் ஆதியையே தேடியது. அவனைக் கண்டதும் உள்ளம் பரவசமானது. அப்போது, அவனும் அவளையேதான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் பார்வை சீற்றத்துடன் ஊடுருவி, முகம் எந்த உணர்வும் இன்றி துடைத்து விட்டாற் போலிருந்தது.

சிறிது நேரத்திற்கு முன், குறும்புடன் மாயம் செய்த அந்த விழிகள், இப்போது அவளைக் கோபத்துடன் துளைப்பதாய் பட்டது. அவனுடைய கோபத்தின் காரணம் புரியாமல், மனதிற்குள் தொய்ந்து போனாள் சகி.

அதன் பின்பு விழா முடியும்வரை, ஆதித்யா அவளருகில் வரவே இல்லை. அஜய்க்கு தூக்கம் வருவது தெரிந்ததும், அவனை அழைத்துச் சென்று கதை சொல்லி, உறங்க வைத்து விட்டுப் படுத்தபோது, அறைக்கதவு தட்டப்பட்டது.

## 8

**சகானாவிற்கு,** இந்த நேரத்தில் தன்னை அழைப்பது யாராக இருக்கும் என்று தோன்றியது. எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தால், ஆதித்யா நின்று கொண்டிருந்தான். அவளை ஏறிட்டும் பார்க்காமல், நேரே உள்ளே வந்து,



அஜயின் தலையை வருடி முத்தமிட்டு விட்டு வேகமாக வெளியே சென்றான்.

ஆதித்யாவின் புறக்கணிப்பை அவளால் தாங்க முடியவில்லை. அவள் மனம் உலைக்களமாக மாறியது. நான் என்ன தவறு செய்தேன்? ஏன் என்னைத் தவிர்க்கிறான்? என்ற வினாக்கள் எழும்பின.

அன்று, நீண்ட நேரம் விழித்திருந்தாள் சகானா. இரவு அஜய் அனத்திக் கொண்டும், முனகிக் கொண்டும் இருந்தான். தொட்டுப் பார்த்தால் உடல் அனலாக கொதித்தது. என்ன செய்வதென்று புரியாமல் காய்ச்சலுக்கான மருந்தைக் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

அந்த நேரத்திலும், ஆதித்யாவின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவை மெலிதாகத் தட்டினாள். அவளைக் கண்டதும் கேள்விக்குறியோடு பார்த்தவனிடம், ''அஜய்க்கு உடம்பு ஒரே அனலாக் கொதிக்குது. மருந்து கொடுத்திருக்கேன்... இருந்தாலும் எனக்கு பயமா இருக்கு'' என்றாள் பதட்டத்துடன்.

வேகமாக அவளுடன் மாடிக்கு வந்த ஆதித்யா, அஜயைப் பார்த்து விட்டு உடனே டாக்டருக்கு போன் செய்தான். அவர் வரும்வரை, இருவரின் கவனமும் அஜயின் மீதே இருந்தது. டாக்டர் வந்து பார்த்து, ஒரு ஊசி போட்டு விட்டு பயப்பட ஒன்றுமில்லை என்று சென்றார்.

அன்று இரவு சகானா ஒரு நிமிடம் கூட உறங்கவில்லை. அஜயின் அருகிலே அமர்ந்து, நெற்றியில் துணியை நனைத்துப் பற்றுப் போட்டுக் கொண்டு இருந்தாள். ஆதித்யாவும் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்றைய பொழுது மெலிதான சோகத்துடன் விடிந்தது சகானாவுக்கு. விடிந்தவுடன், சாவித்திரி அம்மா பதட்டத்துடன் வந்து பேரனை அணைத்துக் கொண்டார். ஆதியும், அவருடன் வந்திருந்தான்.

அவனிடம் திரும்பிய சாவித்திரி அம்மா, "ராத்திரி முழுக்க நீ தூங்கலையாமே? ஆதி சொன்னான். இனிமே நானும் சித்ராவும் பார்த்துக்கறோம். நீ போய் பக்கத்து அறையில் படுத்துக்க! விருந்தாளிங்க வந்தால் தங்கற அறைதான் அதுவும்!" என்றார்.

"இல்லம்மா! நான் அஜயோடவே இருக்கேன்" என்று சகி கூறியதும், "சொன்னாக் கேளு சகானா... போ... அப்புறம், உனக்கு ஏதாவது வந்தா யார் பாக்கறது?" என்று கூறி, அவளை அனுப்பி வைத்தார்.

அவள் பின்னோடு, அடுத்த அறைக்கு வந்த ஆதித்யா கேலி கலந்த கோபத்துடன் "அம்மா பாவம் வெகுளி! உனக்கு ஏதாவதுன்னா, உன் காதலன் திலீப் வருவான்னு அவங்களுக்குத் தெரியாது. அவங்க நல்லவங்க... உன்னாட்டம் மோசக்காரி இல்லை!" என்று, கடித்த பற்களிடையே திராவகத்தை வீசிவிட்டுப் போனான்.

'நான் மோசக்காரியா?' என்று அவள் மனம் துடித்தது. 'என் சந்தோஷங்கள் மட்டுமே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு... ஆனால் என் சோகங்கள் மனப்பெட்டகத்துள் பூட்டி வைப்பதற்கு என்பது எனக்கு மட்டும் தானே தெரியும்' என்ற எண்ணம் ஏனோ வந்தது அவளுக்கு!

கண்கள், கண்ணீரை உற்பத்தி செய்தது. மனிதனை பலவீனப்படுத்தும் பலமான ஆயுதம், அவளையும் பல



மிழக்கச் செய்தது. அழுது கொண்டே அப்படியே உறங்கிப் போனாள் சகானா.

இடையில் வந்து பார்த்துச் சென்ற சாவித்திரிக்கு, அழுது சிவந்திருந்த அவள் முகம், பாசத்தை உணர்த்தியது போலும். ஒரு கணம் அவளையே பரிவுடன் நோக்கி விட்டுச் சென்றார்.

அஜய்க்கு இப்போது பரவாயில்லை. தேறி எழுந்து, கஞ்சி சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். சகியை, ரொம்பவும் தேடினான். சாவித்திரி அம்மாதான் அவனை சமாதானப் படுத்தி வைத்தார்.

சகானா கண் விழிக்கும் போது, பத்து மணிக்கு மேல் ஆகி இருந்தது. பதறி எழுந்தவள், தங்கள் அறைக்குச் சென்றாள். தலை கலைந்து, முகம் சிவந்து எந்த ஒப்பனையும் இல்லாமல் இருந்த போதும் அவள் தனி அழகோடு இருந்ததை, அந்த நேரத்திலும் சாவித்திரி அம்மா கவனிக்கத் தவறவில்லை.

அவர், "ஏன் சகானா... அதுக்குள்ளே எழுந்திரிச்சிட்டே? இன்னும் கொஞ்ச நேரம் ஓய்வாப் படுத்திருக்கலாமே? நேத்தும் நல்ல அலைச்சல் உனக்கு... நீ ரொம்பப் பாசமான பொண்ணுன்னு இப்பதான் நான் புரிஞ்சிக்கிட்டேன். எதையும் மனசில வச்சிக்காதம்மா" என்று கூறினார்.

அவர் அருகில் வந்து அமர்ந்த சகானா, "நான் ஒண்ணும் தப்பா நினைக்கலேம்மா. இன்னொருத்தரோட இடத்திலே நம்மை நாமே வச்சிப் பாத்தாதான், மத்தவங்களோட கஷ்டம் புரியும்னு எனக்கும் தெரியும்மா!" என்று கூறிவிட்டுத் தன்னிடம் தாவி வந்த அஜயைத் தூக்கி, தோளில் சாத்திக் கொண்டாள்.

சாவித்திரி மெதுவாக, ''இந்த சின்ன வயசுல உனக்குத்தான் எவ்வளவு பொறுமைம்மா. அவனைப் பெத்த தாய் மாதிரியே பாத்துக்கறே! நான் தான் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன்'' என்று கூறி அவளை தர்மசங்கடத்துடன் பார்த்தார்.

சகி அவரை நிமிர்ந்து பார்த்து முறுவலித்து, ''பெத்தாதான் அம்மான்னு இல்லைம்மா. எல்லாப் பெண்கள் கிட்டேயுமே தாய்மை நிறைஞ்சு இருக்கு. ஒரு சின்னப் பெண் குழந்தை கிட்டே, ஒரு பொம்மையைக் குடுங்க. உடனே அதை சாப்பிட வச்சு, குளிப்பாட்டி, அரவணைச்சுப் பாத்துக்கற அந்த அன்பு இருக்கே... அப்பவே, அவளுக்குள்ளே தாய்மை வந்துடுது. அன்பா இருக்கற எல்லாருமே என்னைப் பொறுத்தவரைக்கும் அம்மா தாம்மா'' என்றவள் அஜயை அணைத்துக் கொண்டாள்.

இந்தச் சின்னப் பெண்ணுக்குள் தான் எவ்வளவு பக்குவம் இருக்கிறது என்ற நினைவில், தன் செயல்களுக்கு தாமே வருத்தப்பட்டார் சாவித்திரி.

அஜயின் உடல்நிலை சரியாக ஒரு வாரம் பிடித்தது. சகானா அவனுடனேயே இருந்தாள். பாட்டு வகுப்புக்குக் கூட விடுமுறை விட்டு விட்டாள். அந்த ஒரு வாரத்தில், அஜயைப் பார்க்கவென்று திலீப் இரண்டு முறை வந்துவிட்டான்.

இரண்டாவது முறை அவன் வந்தபோது, அவனிடம் சாவித்திரி அம்மா, ''நாளையிலே இருந்து, சகானா பாட்டு சொல்லிக் கொடுக்க வருவா திலீப்... நான் அஜயைப் பாத்துக்கறேன். அதான் எனக்கு சித்ரா துணைக்கு இருக்காளே'' என்று கூறினார்.



மறுநாள் காலையில், பாட்டு வகுப்பு முடிந்து கிளம்பும் போது, திலீப்பும் அவளுடன் வந்தான். ஏதோ சொல்ல வந்து தயங்கி நிறுத்தி, ''சகானா! உங்களை எனக்கும் அம்மாவுக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு. நீங்க சரின்னு சொன்னா... என்னை விருப்பப்பட்டா... அம்மா உங்களை தன்னோட மருமகளாக்கிக்க இஷ்டப்படறாங்க'' என்றான் தயக்கத்துடன்.

அவள் கையில் பிடித்திருந்த பை கையிலிருந்து நழுவியது. வருத்தத்துடன் ''சாரி திலீப்! அந்த மாதிரி எண்ணமெல்லாம் என் மனசுல இல்லை. உங்களை ஒரு நல்ல நண்பராகதான் என்னால நினைக்க முடியுது. தயவு செஞ்சு என்னைத் தப்பா நினைக்க வேண்டாம்னு அம்மாகிட்ட சொல்லிடுங்க'' என்று கூறி, வண்டியை எடுத்தாள் சகானா.

''ஒரு நிமிஷம்'' என்று அவளை நிறுத்திய திலீப், ''நீங்க வேற யாரையாவது விரும்பறீங்களா சகானா?'' என்று நேரிடையாகவே கேட்டான்.

ஒரு கணம் தயங்கிய சகி, பிறகு மெல்லிய குரலில் ''ஆமாம் திலீப்'' என்று கூறிவிட்டுத் திரும்ப, ''ஆதித்யா சார் தானே அது?'' என்ற அவன் குரல் காற்றில் கலந்து கீதமாய் அவள் காதுகளில் நுழைய, ''ம்...'' என்று புன்னகையுடன் தலையசைத்து விட்டுக் கிளம்பினாள்.

இன்னும் சிறிது நாட்களுக்கு அஜயை, கடற்கரைக்கு அழைத்துப் போக வேண்டாம் என்று சாவித்திரி அம்மா கூறி இருந்தார்.

இப்போது சாவித்திரியம்மாவுக்கும் அவளுக்குமிடையே மெலிதான நட்புணர்வு வந்திருந்தது.

அஜயுடன் விளையாடிக் கொண்டிருந்த போது உள்ளே வந்த ஆதி, "என்ன? ஒரு வாரப் பிரிவை கூட தாங்க முடியலையாக்கும் ரெண்டு பேருக்கும்! அவன் இங்கே ஓடி வர்றதும் நீ அங்கே போறதும்... சகிக்கலை! குழந்தை இருக்கான்... பாத்து நடந்துக்கங்க" என்ற போது மனம் விதிர்த்துப் போனது.

உண்மை, உதட்டு நுனி வரை வந்து உறைந்தது. திலீப்பைத் தான் விரும்பவில்லை என்று சொல்ல ஒரு நிமிடமாகாது. ஒரு வார்த்தையில் அதைச் சொல்லி விடலாம். ஆனால் அதன் பின் விளைவுகளை யோசித்த போது, சாவித்திரியம்மாவின் தற்போதைய மாற்றமும் பேச்சும் நினைவுக்கு வந்து தடுத்தது.

இதையே ஒரு கவசமாக, ஆதியிடமிருந்து தன்னைப் பிரித்துக் காக்கும் வேலியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றெண்ணி, சோகமாகப் புன்னகை செய்தாள் சகானா.

அவளுடைய புன்னகையைக் கண்டவன், அதில் மறைந்து இருந்த சோகத்தை அறியாமல், கோபத்துடன் விரைந்து வெளியே சென்றான். எத்தனை நாட்கள் இதுபோல் அவனிடம் கண்ணாமூச்சி விளையாட முடியும் என்ற எண்ணம் தோன்றியபோது, ஆயாசமாக இருந்தது. ஆதித்யாவுடைய குத்தல் பேச்சு அவள் உள்ளத்தைக் காயப்படுத்தியது.

'உன் வீட்டுத் தோட்டத்தில் இதழ் விரித்தன மலர்கள்... என் மனத் தோட்டத்தில் உன் சொல் பிரித்ததும் ரணங்கள்! ஏன், அக்னிப் பூக்களை மட்டுமே, என் சோந்தவனத்தில் பூக்கச் செய்கிறாய்?' என்ற கேள்வி மனதினுள் எழுந்து ரணப் படுத்தியது.



காலம், தன் போக்கில் கால்களில் சக்கரத்தைக் கட்டியபடி வேகமாகச் சென்றது. ஏனோ அன்றிலிருந்து ஆதியின் கண்கள் அவளைக் கண்டாலே வெறுப்பை உமிழ்ந்தன... கோபத்துடன் திரும்பிக் கொண்டன.

சாவித்திரியம்மா மட்டும், அஜய் காய்ச்சலில் படுத்து எழுந்ததிலிருந்தே அவளிடம் பரிவுடன் நடந்து கொண்டார்.

பாட்டு வகுப்பில், இன்னும் பத்து மாணவிகள் அதிகமாகச் சேர்ந்திருந்தனர். அஜயும், கொஞ்சம் கொஞ்சமாக மற்றவர்களிடம் பழக ஆரம்பித்தான். மாலையிலும், பாட்டு வகுப்புக்குச் சென்று சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள் சகானா.

இப்போதெல்லாம் அஜய் பாட்டியுடனே தன் பொழுதை அதிகமாகச் செலவிடத் தொடங்கி இருந்தான். அதுபோல் அன்று மாலை, அவன் சாவித்திரியுடன் விளையாடிக் கொண்டிருந்த போது கீழே வந்த சகானா, அவனுடைய கவனத்தைக் கலைக்காமல் வெளியே வந்தாள். ஏனோ கடற்கரைக்குச் செல்ல வேண்டும் போல் தோன்றியது பக்கவாட்டுப் படிகளில் இறங்கி, கடல் மணலில் கால் புதை நடந்து சென்றாள்.

இயற்கையின் ரசவாதம் மனதை அமைதிப்படுத்த, இதழி புன்னகையுடன் வீட்டிற்கு திரும்பிய சகானா, ஹா சோபாவில் அமர்ந்திருந்த சாவித்திரி அம்மா நெஞ்சை பிடித்துக் கொண்டு துடிப்பதைக் கண்டவுடன் பத போனாள்.

அருகில் ஓடிச்சென்று பார்த்தபோது, அவர் உடல் வியர்த்து சோர்ந்து போயிருந்தார். உடனே போனை எடுத்து சுழற்றி ஆதிக்கு, பதைப்புடன் விவரத்தைக் கூறினாள்.

அவன் குரலும் பதட்டமாக இருந்தது. ''நான் நேரா ஹாஸ்பிடலுக்கு வந்துடறேன். நீ, நம்ம கார்ல அம்மாவை அழைச்சிட்டு அங்கே வந்துடு. டிரைவருக்கு இடம் தெரியும். டைம் வேஸ்ட் பண்ணாம, உடனே கிளம்பிடுங்க'' என்றான்.

வேகமாகச் சென்று டிரைவரை அழைத்து விவரத்தை கூறி விட்டு, வேலையாட்களின் உதவியுடன் சாவித்திரி அம்மாவை காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தாள் சகானா.

அஜய், நீலாம்மாவின் பொறுப்பில் இருந்தான். மருத்துவ னைக்குச் சென்ற பிறகு, ஆதித்யாவும் டாக்டர்களும் பாறுப்பேற்றுக் கொண்டனர். டாக்டர்கள் வந்து சொல்லும் ரை, அவள் மனம் துடித்துக் கொண்டு இருந்தது.

சீஃப் டாக்டர் வெளியே வந்து, மைல்ட் ஹார்ட் அட்டாக் ன்றும், நேரம் கடத்தாமல் உடனே அழைத்து வந்தது லதாகப் போனதாகவும் கூறியபோது, மனதின் இறுக்கம் ருமூச்சாய் விடைபெற்றுச் செல்ல, அப்படியே சுவரில் ய்ந்து கண்மூடினாள் சகானா.

ஆதியும், தவிப்பின் உச்சத்திலிருந்து இயல்பு நிலைக்கு தான். சாவித்திரியுடன் உறவுப் பெண்ணொருத்தி த்துவமனையில் துணை இருக்க, வீட்டில் எல்லாப் றுப்புகளையும் சகானாவே கவனித்துக் கொண்டாள்.



கண் விழித்ததுமே, ஆதியைத் தேடி அலைந்த சாவித்திரி அம்மா விழிகளில் சகானா முதலில் தென்பட, நன்றியோடு அவளைப் பார்த்தார். அவர் உடல் நலம் சரியாகி, வீட்டுக்குத் திரும்பிவர ஒரு வாரம் பிடித்தது.

வீட்டுக்கு வந்தவுடன், அவரை கவனிக்கும் பொறுப்பை சகி ஏற்றுக் கொண்டாள்.

ஒருநாள், மெதுவாக அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்ட சாவித்திரி அம்மா, ''உன்னைத் தப்பாப் புரிஞ்சிக் கிட்டேன் சகானா. என்னை மன்னிச்சிடும்மா! உயிருக்கு முன்னாடி, மத்த எல்லாமே சாதாரணம் தான்கிறதை நான் இப்ப தெரிஞ்சிக்கிட்டேன். என்ன பணம் இருந்து என்ன...? சரியான நேரத்துக்கு நீ என்னை ஹாஸ்பிடலுக்கு அழைச் சிட்டுப் போனதாலே தானே என்னைக் காப்பாத்த முடிஞ்சுது. இப்பவும் பாரு! நீ என் மேல எவ்வளவு அக்கறை எடுத்துக்கறே... ரொம்ப நன்றிம்மா!'' என்றார் உணர்ச்சிப் பெருக்குடன்.

அவருடைய கைகளைப் பிடித்து மெதுவாக அழுத்திய சகி, ''அம்மா! அன்பைக் கொடுத்தா, அன்புதான் பதிலாக் கிடைக்குங்கிறது எங்க அம்மா எங்களுக்கு சொல்லித் தந்தது. ஒரு கல்லை எடுத்து எறிஞ்சா, அந்த மரம் கூட ஒரு கனியைப் பரிசாக கொடுக்குது... நாம மனுஷங்க! நாம மத்தவங் களுக்குத் தடையில்லாமக் கொடுக்கிறது அன்பு மட்டும் தான்னு சொல்லுவாங்க. எனக்கு உங்களோட ஃபீலிங்ஸ் புரியுதும்மா. எதையும் போட்டுக் குழப்பிக்காம ரெஸ்ட் எடுங்க'' என்று கூறிவிட்டு வெளியே வந்தவள் கடற்கரையை நோக்கிச் சென்றாள்.

## 9

மணலில் அமர்ந்த போது, மனதில் அலையெனப் பழைய நினைவுகள் கரை புரண்டது. ஆற்றின் புது வெள்ளப்பெருக்கு, பழைய நீர்த் தடத்திலேயே தாவி வருவது போல், பழைய நினைவுகள் வேகமாக மனதில் தடம் பதித்து வந்தது.

மிருதுவான இனிய மன உணர்வுகள், தாயின் நினைவை கண் முன் கொணர்ந்தது. ஓடி விளையாடிய பள்ளிப் பருவம் மனதில் நிழலாட, கல்லூரி நாட்களில் கவிதை எழுதியது கனவாய் விரிந்தது. மோகனாவின் நினைவுகள், ரசித்துக் கடந்த நினைவுகளை கண்ணெதிரில் மலரச் செய்தது.

அந்த எண்ண ஓட்டத்தால் இதழில் புன்னகையுடன் அமர்ந்திருந்தாள் சகானா. திடீரென அவளுடைய கை, யாராலோ வேகமாகச் சுண்டி இழுக்கப்பட்டது. அதிர்ந்து போய் நிமிர்ந்து பார்த்த போது எதிரே ஆதித்யாதான் கண்ணோரம் சீற்றத்துடன் அவளை எழுப்பி நிறுத்தி யிருந்தான்.

அவள் ஒன்றும் புரியாமல் மருண்டு விழித்தாள்.

ஆதித்யா இதழோரம் கசிந்த கேலிப புன்னகையுடன் என்ன? பாட்டு டீச்சரம்மாவுக்கு இன்னும் அந்த திலீப்போட னைப்பு போகலையா? ஒரே சிரிப்பா இருக்கு! அவன் மேல ட்ட அக்கறையை, கொஞ்சம் அஜய் மேலயும் காட்டினா லா இருக்கும். இங்கே நீ எதுக்காக வந்திருக்கேங்கறதை ந்துடாதே. அஜய் உன்னைக் காணாமல் அங்கே அழுது ட்டு இருக்கான்.'' என்று உறுமிவிட்டு எதிர்ப்புறம் க்கிச் செல்ல ஆரம்பித்தான்.



அவனுடைய மனம் தீயாய் தகித்தது. அதைத் தூண்டி விட்ட திரியாய் சகானா இருந்தாள். தான் வந்ததைக் கூட அறியாமல், எங்கோ பார்த்து முறுவலித்தபடி அவள் யோசனையில் ஆழ்ந்து இருந்தது, அவன் மனதை எரிமலை ஆக்கியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தியை இழந்திருந்தான் ஆதித்யா.

அவள் நினைவுகளின் ரிஷிமூலம் என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. அதை அறியவும் முற்பட வில்லை.

ஆதித்யா வெகு நேரம் மணலில் நடந்து விட்டு, வீட்டுக் குள் சென்றபோது, அஜய் சாவித்திரி அம்மாவுடன் ஹாலில் இருந்தான்.

தான் அஜயைப் பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லி அனுப்பியும், சகானா அங்கில்லாதது கண்டு கடும் கோபத் துடன் மாடிக்குச் சென்ற ஆதி, அவளின் அறைக்கதவைத் தட்டாமலே தள்ளித் திறந்து உள்ளே வேகமாக வந்தான்.

அலமாரியில், அஜயின் துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த சகி, சப்தம் கேட்டுத் திரும்பினாள். வேகமாக அவளருகே வந்த ஆதித்யா, அவளை வேகமாக இழுத்து அணைத்து, கோபத்துடன் அவள் முகத்தை நிமிர்த்தி, தன் உதடுகளின் முத்திரையை அவள் இதழ்களில் ஆழப் பதித்தான்.

அவனிடமிருந்து விலகப் போராடிய சகி, முடியாம சோர்ந்து போனாள். அதே வேகத்தில் அவளைத் திடீரெ விடுவித்தவன், அவள் பிடிமானமின்றித் தடுமாறி மருண்

விழிப்பதைக் கண்டு, அவளைக் காயப்படுத்திவிட்ட திருப்தியுடன் புயலாய் வெளியே சென்றான்.

முதலில், சகானாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனுடைய கோபமும் வேகமும், அவளைப் புயலில் சிக்கிய படகு போல் ஆக்கியது. மனம், முள்ளில் மாட்டிக் கொண்ட சேலையாய் கிழிந்து போயிருந்தது. அப்படியே சரிந்து அமர்ந்து, கால்களில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

என் கண்ணன், துச்சாதனனாகவும் மாறிவிடுவானோ என்ற பயம் மனதிலிருந்த நம்பிக்கையை உடைத்து துவம்சம் செய்தது. அவன் ஏன் இப்படி மாறினான் என்ற தேடலில், அவள் உள்ளம் போராடியது. தொலைந்து போன காதலை எண்ணி மனம் சருகானது! யாரோ, தன் மெல்லிய மனதில் பாறாங்கல்லை வைத்து அழுத்தியது போல் இருந்தது.

அவளால், தன்னைத் தேற்றிக் கொள்ளவே முடியவில்லை. வெகுநேரம் அழுதுவிட்டு, முகத்தில் தண்ணீர் விட்டு டித்துக் குளித்து விட்டு கீழே வந்தபோது, அவள் முகம், வித்திரி அம்மாவின் மனதில் பல எண்ணங்களை ைத்தது.

பிறகு வந்த நாட்கள், சகானாவுக்கு நீண்ட யுகங்களாக ருந்தன. அவள் மனம், பாலைவனமாய் அன்பின்றி வறண்டு ந்தது. பழைய குறும்பும் சிரிப்பும் கண்களிலிருந்து விடை ற்றுச் சென்றிருந்தது.

அஜய், இப்போது அதிகமாக சகியைத் தேடுவதில்லை. டிவிடமும், சித்ராவிடமும் நன்றாகப் பழகி விட்டான். சில ங்களில் சித்ராவே நன்றாகக் கவனித்துக் கொண்டாள். டிவிடமும் சாப்பிடப் பழகி இருந்தான்.



இன்னும் சில மாதத்தில், எப்படி இருந்தாலும் சகானா அஜயைப் பிரிந்து சென்றாக வேண்டும். சாவித்திரி அம்மாவின் கட்டளையை மீறி, இங்கு இருக்க முடியாது என்பது நன்றாகவே புரிந்தது.

ஆனால், முன்பு அஜய் மட்டுமே இருந்த உள்ளத்தில் இப்போது ஆதியும் குடியிருந்தான். தன் இரு கண்களையும் இழந்துதான், சகி அந்த இடத்தை விட்டுச் செல்லப் போகிறாள். ஆனால், மனம் மட்டும் குருடாகப் போகிறது. அப்போது தனக்குத் துணையாகத்தான் ஒருவருமே இருக்கப் போவதில்லை என்ற உண்மை மனதை விதிர்க்கச் செய்தது.

அவளால் இப்போதெல்லாம் சரியாகவே சாப்பிட முடியாததால், உடல் மெலிந்தது. ஆதித்யாவின் புறக்கணிப்பைத் தாங்க முடியாமல் மனம் தவித்தது.

ஒரு முடிவுடன், ஒருநாள் திலீப்பிடம் பேசினாள் சகானா. அன்று, பாட்டு வகுப்புக்குச் சென்று திரும்பி வரும் போது அவனிடம், ''எனக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்ய முடியுமா திலீப்?'' என்றாள்.

''ஏன் சகானா? இங்கதானே இருக்கப் போறீங்க! எதுக்கு வேலை எல்லாம்... சாவித்திரி அம்மா இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாங்க. அதோட, ஆதித்யா சாருக்கும் இதெல்லாம் பிடிக்காது'' என்றான்.

''நான் இங்கிருந்து எப்படியும் இன்னும் சில மாசத்துல போய்தான் ஆகணும் திலீப்! சாவித்திரி அம்மா தான் அப்படிச் சொன்னதே! இப்ப அஜயும் எல்லார்கிட்டயும் நல்லாப் பழகிட்டான். அவனைப் பிரியறதுதான் எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு. ஆனால் என்னைக்கு இருந்தாலும்

பிரிஞ்சதானே ஆகணும். அதனாலதான் இந்த முடிவுக்கு வந்தேன். உங்களாலே ஏற்பாடு செய்ய முடியலேன்னா, வேண்டாம்'' என்றாள் சகானா சோர்வுடன்.

அவள் முகத்தையே கவனித்தவன், ''ஆதித்யா சாரோட ஏதாவது பிரச்சினையா சகானா? நான் வேணும்னா பேசிப் பாக்கட்டுமா?'' என்றான் வெகுளியாக.

'பிரச்சினையின் மூலகாரணமே நீதான் திலீப்' என்றால் அவன் என்ன சொல்வான் என்று விரக்தியாய் தோன்றியது.

''அதெல்லாம் வேணாம்... ப்ளீஸ்! எனக்கு நீங்க உதவி செய்யணும்னு நினைச்சா, ஒரு வேலைக்கு மட்டும் ஏற்பாடு பண்ணுங்க. அது போதும். தயவு செய்து இதைப் பத்தி யார்கிட்டயுமே நீங்க பேச வேண்டாம்'' என்றாள் சகி மெதுவான குரலில்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''என்னோட அக்காவின் கணவர், எர்ணாகுளத்துல இருக்கார். அவரோட மாமா அங்கே கம்ப்யூட்டர் சென்டர் நடத்திட்டு இருக்கார். அவர்கிட்டே வேலை ஏதாவது இருக்கான்னு வேணா, நான் விசாரிக்கச் சொல்றேன்'' என்றான் திலீப்.

அடுத்த முறை பாட்டு வகுப்புக்குச் செல்லும் போது, தன்னுடைய படிப்புச் சான்றிதழ்களை அவனிடம் கொடுத்தாள் சகானா.

அஜயிடம் இருந்து, தன்னை வெகுவாய்த் தனிமைப் படுத்திக் கொள்ளப் பழகிக் கொண்டாள். எந்த நிலையிலும், தான் ஆதித்யாவிடம் கையேந்தி நிற்கக் கூடாது என்ற உறுதி இருந்தது அவளுக்குள்! வேலையாகட்டும் காதலாகட்டும், அவனிடம் எதையுமே யாசகமாய்ப் பெற மனம் மறுத்தது.



ஒரு வாரம் கழித்து, நல்ல செய்தி ஒன்றைக் கூறினான் திலீப்.

அன்று, பாட்டு வகுப்புக்குச் சென்ற போது மகிழ்ச்சியுடன் அவளை எதிர்கொண்ட திலீப், ''உங்களுக்கு வேலை கிடைச்சாச்சு சகானா. கம்ப்யூட்டர் சென்டரிலேயே உங்களை வேலைக்கு சேத்துடலாமின்னு எங்க மாமா இன்னிக்குத் தான் போன் பண்ணிச் சொன்னார். உங்களோட திறமையைப் பாத்துட்டு, அப்புறம் வேலையை நிரந்தரமாக்கறதா அவரோட மாமா சொன்னாங்களாம். இன்னும் பத்து நாள் கழிச்சி வந்து வேலையிலே சேரச் சொன்னாங்க'' என்றான்.

அவன் குரலில் ஒருவித சோர்வுமிருந்தது. ஆனால் அவள் மனதில் நன்றியுணர்ச்சி ஊற்றாய்ப் பெருக்கெடுத்தது.

''ரொம்ப நன்றி திலீப். நான் இதை மறக்கவே மாட்டேன்'' என்றாள்.

திலீப் அவளிடம் ''நான் உங்களோட எர்ணாகுளத்துக்கு வர முடியாது சகானா. அப்புறம், இங்கே பிரச்சினை ஆயிடும். அதனால, என் அக்கா இந்த வாரக் கடைசியில வராங்க. அவங்களோட நீங்க திங்கள்கிழமை காலையிலே கிளம்பற மாதிரி தயாராயிடுங்க'' என்றான்.

சரியென்றவள் அவனிடமும், ஜானகியிடமும் நன்றி கூறி விட்டுக் கிளம்பினாள். அந்த வாரம் முழுவதும் அஜயுடன் வெகு நேரம் பொழுதைக் கழித்தாள். அவன் உறங்கும் போது கூட அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சகானா.

ஆதியைப் பார்த்தே, வெகு நாட்களாகி இருந்தது. அவனை இப்போதெல்லாம் அவள் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை எப்போதாவது அவன் எதிர்ப்பட்டாலும், அவனுடைய

தோளுக்கு மேல் அவள் பார்வை உயராது. குனிந்து கொண்டு சென்று விடுவாள்.

மறுநாள் காலையில், அவள் எர்ணாகுளத்துக்கு கிளம்பிச் செல்ல வேண்டும். அன்று காலையில் சீக்கிரமே எழுந்தவள் மாடி ஜன்னலின் வழியே, கடலையே பார்த்துக் கொண்டு இருந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்தில், ஆதித்யா ஜாகிங் வந்து விடுவான். அவன் வருகைக்காகக் காத்திருந்தாள் சகானா.

ஆதித்யா, கடல் மணலில் நடந்து கொண்டிருந்தான். உடல், சற்று மெலிந்தாற் போல் இருந்தது. அவனையே உற்றுப் பார்த்து, கண்களில் அவன் உருவத்தைத் தேக்கி, இதயத்தில் பதித்துக் கொண்டவளை பிரிவு எனும் பெரும் துயர் பெரிதும் வருத்தியது.

அன்றிரவு தன்னுடைய பொருட்களை இரண்டு சூட்கேஸ் களில் எடுத்து வைத்துக் கொண்டவள், பின்புறம் காத்திருந்த திலீப்பிடம் கொடுத்து அனுப்பினாள். அஜயை ஆசை தீர முத்தமிட்டாள். அவன் தூக்கக் கலக்கத்துடன் அவளைக் கட்டிக் கொண்டான்.

அவன் பிரிவு தன்னை எந்த அளவு பாதிக்குமோ என்ற யோசனையில் மூழ்கினாள் சகானா. ஆனால், ஆதியிடம் தன்னை இழந்து, சாவித்திரி அம்மாவிடம் அவமானப்பட்டு, வாழ்க்கையை இழந்து, பிறகு வெளியே செல்வதற்குப் ...தியாக, மரியாதையாக இப்போதே சென்று விடலாம் என்று தோன்றியது. பாட்டு வகுப்பில், பழைய மாணவிகளுக்கு முன்னமே சொல்லிவிட்டுத் தான் கிளம்புகிறாள்.



காலையில் எழுந்தவள், வழக்கம் போல் சாவித்திரி அம்மாவிடமும நீலாம்மாவிடமும் சொல்லி விட்டு, சித்ராவை அஜயைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, அஜயை அணைத்து முத்தமிட்ட பிறகு, பாட்டு வகுப்புக்குக் கிளம்பிச் செல்வது போல் கிளம்பினாள். ஆதியைக் காணாமல், அவள் மனம் ஏனோ சோர்ந்து போய் கசந்தது.

தோப்பின் வழியே நடந்தே சென்று, திலீப்பின் வீட்டை அடைந்தாள் சகானா. எப்போதும் தன்னுடன் எடுத்துச் செல்கின்ற கைப்பையில், பாட்டுப் புத்தகத்துடன் அவள் சேர்த்து வைத்திருந்த பணமும், வங்கியின் பாஸ் புத்தகமும் எடுத்து வைத்திருந்தாள். எப்போதும் போலவே அவள் கிளம்பிச் சென்றதால், யாருக்குமே சந்தேகம் எழவில்லை.

திலீப்பின் வீட்டிற்குச் சென்ற போது, அங்கு அவனுடைய அக்கா திலகா அவள் குழந்தை பூரணியுடன் வந்திருந்தாள். திலகாவும் அவனுடைய அம்மாவைப் போலவே அமைதியாகத் தெரிந்தாள்.

சகியைக் கண்டதும் ஆர்வத்துடன் கையைப் பிடித்துக் கொண்டவள், ''நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க சகானா! முதல்லேயே அம்மா சொல்லியிருந்தாங்க... ஆனா, நான் இவ்வளவு அழகா எதிர்பார்க்கலை'' என்றாள் வெகுளித் தனத்துடன்!

வெளிப்படையாகப் பேசும் அவளை சகானாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவள் திலகாவிடம், ''நீங்களும் அமைதியா, அழகா இருக்கீங்க அக்கா'' என்று கூறிவிட்டு, ஜானகியிடம் சொல்லிக்

கொண்டு, அவர் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

ஜானகி கண்ணீர் மல்க, அவளுடைய தோளைப் பிடித்து அணைத்துக் கொண்டார். பிறகு அவளுக்கும் திலகாவுக்கும் புதுப்புடவைகள் வைத்துக் கொடுத்து வழி அனுப்பினார்.

பாட்டு வகுப்புக்கு வரும் பெண்களிடம் வேறு ஏற்பாடுகள் செய்து கொள்ளும்படியும், பாதியில் விட்டுச் செல்வதற்குத் தான் மிகவும் வருத்தப்பட்டதாகவும் சொல்லும்படி கூறி விட்டு, விடைபெற்று படகில் ஏறினாள் சகானா.

செல்லும் போது தூரத்தில் உயரமாக கம்பீரமாகத் தெரிந்தது ஆதியின் வீடு. அது புள்ளியாகிக் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தாள் அவள். தன் உயிரையே அங்கு விட்டு விட்டுப் பிரிந்து செல்வது போலிருந்தது அவளுக்கு! காதலின் அருமை பிரிவில் புரிந்து, உயிரில் பாதி தொலைந்தது.

அமைதி இன்றி அலைப்புறும் புறாவைப் போல் மனம் த்தளித்துத் தவித்தது. காதல் சுகமானதென்று தெரிந்திருந் லும், பெரும் சுமையானது என்று, இன்று புரிந்தது. கண் ாக்கரையில் கரை புரண்டு வந்த நீர் முத்துச் சிதறலாய் ிந்தது.

அவளுடைய நெஞ்சம் கனத்துப் போயிருந்தது. 'இறைவா மனதை ஒரு கணம் காதலால் மரை வைத்து பின் சருகாக்கி ர் வைத்து விட்டாயே?' என்று இறைஞ்சியது.

னமும் தவமிருந்து அவள் கேட்ட வரம் ஒன்று, கை ிப் போனதை எண்ணி மனம் உடைந்தாள் சகானா.



## 10

கலங்கிய மனதுடன் எர்ணாகுளத்திற்குச் சென்றடைந்து, திலகாவின் வீட்டுக்குச் சென்றாள் சகானா. அவர்களுடைய வீட்டு மாடியில், ஒரு அறை காலியாக இருந்ததால், அவளை அங்கேயே தங்கிக் கொள்ளலாம் என்று கூறி இருந்தாள் திலகா.

ஜானகி அவளை அங்கேயே சாப்பிட்டுக் கொள்ளும்படிச் சொல்லி இருந்தார். அந்த வீட்டில் திலகா, அவள் கணவர் வேணு, குழந்தை பூரணி மட்டுமே இருந்தனர்.

சகானாவுக்குப் பூரணியை பார்க்கும்போது அஜயின் நினைவு வந்தது. இன்னும் மூன்று நாட்களில் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற நினைவும் வந்தது.

திலகாவின் வீட்டு மாடியறை எளிமையான அழகுடன் காணப்பட்டது. மாடியில் அந்த ஒரு அறை மட்டுமே, உள்ளேயே குளியலறை வசதியுடன் அமைந்திருந்தது. அங்கிருந்த இன்னொரு கதவைத் திறந்து கொண்டு வெளியே அழைத்துச் சென்றாள் திலகா, வெளியே மொட்டை மாடியில் பூந்தொட்டிகள் வைக்கப்பட்டு அந்த இடமே பசுமையாக இருந்தது.

அவள் கூடவே, திலகா வந்து எல்லாவற்றையும் காண்பித்து விட்டு, வெளிப்புறம் செல்லும் கதவை மட்டும் எப்போதுமே தாளிட்டு வைக்கச் சொன்னாள். வீட்டின் உள்புறமே மாடிப் படிகள் அமைந்திருந்ததால் பயமில்லை என்று தோன்றியது.

மதியம், கடையிலிருந்து வந்த வேணுவும் அவளை அன்புடன் வரவேற்றார்.

வேணு, கடைத் தெருவில் பெரிய மளிகைக் கடை வைத்து இருப்பதாகவும், மதியம் வந்து சாப்பிட்டு விட்டுச் சென்றால்,

இரவு தான் வருவார் என்றும் திலகா கூறினாள். அவர்களின் அன்பும், எளிமையும் மனதிற்கு இதமாக இருந்தது சகானாவுக்கு.

மாடி அறையில் பாயும், தலையணையும் இருந்தது. ஒரு மர அலமாரி இருந்ததால், தன் துணிகளை அதில் அடுக்கி விடலாம் என்று நினைத்தாள் சகி. அங்கு, அவளுக்காக ஒரு கயிற்றுக் கட்டிலும் போட்டிருந்தார்கள். அவள் நினைவில் ஒளிரும் நிழலாய், ஆதியின் முகத்தை மனம் பதித்துக் கொண்டது.

மதியம் சாப்பிட்டு ஓய்வெடுத்து விட்டு, மாலையானதும் கீழே இறங்கிச் சென்ற போது, திலகா காபி கலந்து இருவருக்கும் எடுத்து வந்து அவளிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு, தானும் ஒன்றைப் பருகினாள். பூரணியும், சகியிடம் நன்றாகப் பழகி விட்டாள்.

இரவுக்கு என்ன டிபன் செய்யலாம் என்று யோசித்து விட்டு, இடியாப்பமும் பட்டாணி குருமாவும் என்று முடிவு செய்தார்கள். திலகா இடியாப்பம் செய்ய, குருமாவை சகானா செய்தாள். சமவயது உள்ளவர்களாக இருந்ததால், இருவரும் மனம்விட்டு பேசிக் கொண்டே பொழுது இனிமையாகச் சென்றது.

படுக்கப் போகும் போது திலகாவும் கூடவே வந்து, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு கீழே சென்றாள்.

சகானாவின் மனம், தன்னை விட்டு விட்டு அஜய் தனியே எப்படி இருப்பானோ என்று மறுகியது. ஆதியைப் பற்றி நினைக்கும் போதோ, இதயம் உடைந்து விடும் போல் வலித்தது.



ஆனால் அங்கு ஆதித்யாவின் நிலையோ வேறு விதமாக இருந்தது. கூண்டில் அடைபட்டுக் கிடந்த புலியைப் போல் கோபத்துடன் உறுமிக் கொண்டிருந்தான், அவன்.

சாவித்திரி அம்மாவுக்கோ, முதலில் ஒன்றும் புரியவில்லை. சகானா வந்த புதிதில், அவளிடம் தான் பேசியதும், பிறகு சகானாவை புரிந்து கொண்டு அவளை இயல்பாகவே ஏற்றுக் கொண்டதும், ஏனோ நினைவு வந்தது.

ஏன் இந்தப் பெண் திடீரென்று இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ சென்று விட்டாள் என்று புரியாமல் திகைத்தார் அவர்.

சகானா கிளம்பிச் சென்ற அன்று காலையில் பத்துமணி யாகியும் அவள் வராததால், அஜய் அவளைத் தேடி அழ ஆரம்பித்து விட்டான். சித்ராவை விட்டு, அவளுடைய அறையில் சென்று பார்க்கச் சொன்னார் சாவித்திரியம்மா அங்கும் சகி இல்லாததால், டிரைவரை விட்டு திலீப்பின் வீட்டிற்குப் போய் விசாரித்து விட்டு வரும்படி கூறி அனுப்பினார்.

ஆதித்யா, அப்போதுதான் அலுவலகத்துக்குக் கிளம்பி கொண்டிருந்தான். அவனிடம் கேட்டபோது அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவன் சகியுடன் பேசியே ப நாட்களாகி விட்டது. அவள் எதிர்ப்படும்போது பார்ப்பதோ சரி! இன்று அவளைக் காணவில்லை என்றதும், மன தன்னிலை இழந்து தவித்தது.

வேகமாக மாடிக்குச் சென்ற ஆதித்யா, அவளுடை அறைக் கதவைத் திறந்ததுமே, ஒரு வேறுபாட் உணர்ந்தான். அறை காலியாக இருந்தது. அலமாரி

திறந்து பார்த்தான். அதில் அவளுடைய பொருட்கள் எதுவுமே இல்லை. அவன் மனம் பதறியது... இரண்டாகப் பிளப்பது போல் வலித்தது.

அங்கிருந்த மேஜையின் மேல் ஒரு கடிதம் மடித்து வைக்கப்பட்டு, மேலே பூஜாடி ஒன்றும் வைக்கப்பட்டு இருந்தது. மழை நின்ற பிறகும் நடுங்கும் மலர்களைப் போல், முதன்முறையாக அவன் உடலில் ஒரு நடுக்கம் ஓடியது.

அந்தக் கடிதம், அவளுடைய ஆளுமைத் தனத்தையும், அவளின் மென்மையான மனதையும் தெளிவாய் றைசாற்றுவதாக இருந்தது.

அக்கடிதத்தில், 'அம்மா! இந்த ஆறு மாதங்களும் என்னை ன்போடு பார்த்துக் கொண்டதற்கு, நான் உங்களுக் கல்லாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ங்கிருந்து தனியே செல்லவில்லை. உங்கள் அனை ரையும் என் மனதில் சுமந்துதான் செல்கிறேன். அஜயை, ளைவிட நீங்கள் எல்லோரும் அருமையாகப் பார்த்துக் ள்வீர்கள் என்ற நம்பிக்கையில் செல்கிறேன். அஜயின் வுதான் என்னை மிகவும் வாட்டுகிறது. என் இதயம் ருதான் இருக்கும்... என்றும்! சகி' என்று முடித்திருந்தாள் ளா.

டிதத்தைப் படித்து முடித்தவுடன், ஆதித்யாவின் மனதில் ம் குமுறல் வந்தது. அங்கு, வாய் திறந்து கதறினால் தான் கை என்பது கூட மெய்ப்படவில்லை. அவனுடைய குமுறலின் அளவு, கண்களில் மட்டுமே தெரிந்தது. ய மனதில், உயிரின் ஓசை கேட்டது.



அப்போது உள்ளே நுழைந்த சாவித்திரி அம்மா, ஆதித்யாவின் முகத்தைப் பார்த்து பயந்து போனார். அவன் கண்களும் முகமும், அவருக்கு ஆயிரம் செய்திகளைக் கூறியது.

ஆதியின் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படித்தவர், அப்படியே சரிந்து கட்டிலில் அமர்ந்து கொண்டார்.

வேகமாக வெளியே செல்லும் ஆதியைப் பார்த்தபோது மனதில் கவலை எழுந்தது. கண்ணீர் மல்க, அஜயை ஆதரவாக அணைத்துக் கொண்டார் அவர். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை.

'இந்தப் பெண் எங்கு சென்றிருப்பாள்... நாம்தான் அதற்குக் காரணமோ...' என்று பலவிதமான எண்ணங்களில் மனம் குமைந்தார் அவர்.

தன் அறைக்கு வந்து கதவைத் தாளிட்ட ஆதி, கட்டிலில் அமர்ந்து, இரு கைகளாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். முதன்முதலாகத் தான் செய்தது தவறோ என்ற எண்ணம் மனதினுள் வந்தது. தங்களையே நம்பி வந்த பெண்ணைக் காயப்படுத்தி அனுப்பி விட்டதில், தன் பங்குதான் பெரிதென்று அவன் மனம் இடித்து உரைத்தது.

என்ன செய்வது என்று புரியாமல், திலீப்பின் மீது கோபம் கோபமாய் வந்தது. சகியை நினைத்தாலோ, தன் மீதே ஆத்திரமாக வந்தது. திலீப்பின் மேல் ஏற்பட்ட கோபத்துடன், நேரே தங்கள் பள்ளிக்குச் சென்றான்.

உடனே திலீப்பை வரவழைத்தவன் அவனைக் கண்டதும் பாய்ந்து சென்று அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான்.

அவனிடம் கோபமாக, ''ஏய்! என் சகி எங்கேடா?'' என்றான் ஒருமையில்.

ஆதித்யாவின் கோபத்தைப் புரிந்து கொண்ட திலீப், ''எனக்குத் தெரியாது சார். அவங்க உங்க வீட்டிலதானே இப்ப இருப்பாங்க. என்னைக் கேக்கறீங்க?'' என்றான்.

எப்படிக் கேட்டும், அவனிடமிருந்து பதிலை வாங்க முடியாமல் சோர்ந்து போன ஆதி, திரும்பி வேகமாக திலீப்பின் வீட்டுக்கு வந்தான். ஜானகியிடமும் சகானாவைப் பற்றி கேட்டான். அவரும், தனக்குத் தெரியாதென்று உறுதியாக மறுக்கவும், அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இரண்டு மணி நேரத்தில், தன் வாழ்க்கையே இருண்டு விட்டது போலிருந்தது அவனுக்கு! அலுப்பும் கோபமும் வேதனையும் ஒன்று சேர, அவன் வீட்டுக்குள் நுழையவும், சாவித்திரி அம்மாள் முன் வந்து, ''ஏதாவது தகவல் கிடைச்சதாப்பா?'' என்றார் ஆர்வமாய்.

மெதுவாக ''இல்லை'' என்று தலையசைத்து விட்டுத் தன் அறைக்குள் போய், கதவை இறுகத் தாளிட்டு கொண்டான் ஆதி.

அன்று காலையும், மதியமும் அவன் சாப்பிட வெளியே வரவேயில்லை. சாவித்திரி அம்மா எவ்வளவோ வற்புறுத்தி அழைத்தும் பயனில்லை. அவருக்கு ஏதோ புரிந்த மாதிரி இருந்தது. ஆனால் புரிந்த விஷயம்தான் மனதை மிகவும் வருத்தியது.

தன்னுடைய வறட்டு கவுரவத்தால், சத்யாவை இழந்தது போல், ஆதித்யாவையும் இழக்க மனம் வரவில்லை



அவருக்கு! 'அன்று சத்யாவையும் மோகனாவையும் வெறுத்து ஒதுக்கியதால் தானே இன்று அவர்களில்லாமல் நிற்கிறோம். சகானாதானே நான் உடல்நலமில்லாமல் இருந்த போது என்னையும் வீட்டையும் கவனித்துக் கொண்டாள். நல்ல குணமும் பாசமும் உள்ள இந்தப் பெண்ணை நாம் இழக்கக்கூடாது' என்று அன்று முழுவதும் ஆழ்ந்து யோசித்தார் சாவித்திரியம்மா.

இரவு, அவர் வற்புறுத்தியதால் அரைமனதுடன் சாப்பிட வந்த ஆதியின் கண்களில் ஜீவனே இல்லை. தன் மகனை, அந்த நிலையில் பார்த்த சாவித்திரி ஒரு தீர்மான முடிவுக்கு வந்தார். சத்யாவின் மறைவு, அவரை மிகவும் பண்படுத்தி இருந்தது.

அன்றிரவு அவருக்கும் வெகுநேரம் உறக்கம் வரவில்லை. அஜயுடனே படுத்துக் கொண்டவருக்கு சத்யாவின் இழப்பு அன்றுதான் பூதாகரமாகத் தெரிந்தது.

ஆதித்யாவோ, அன்று ஒரு நொடி கூட இமைகளை மூடவில்லை. 'நீ என்னிடமிருந்து விலகித் தொலைதூர சென்றிருந்தாலும், என் மனப்பார்வையில் என்றும் என்னுட நீ இருப்பாய்' என்ற எண்ணம் உயிரினுள் கலந்தது. 'எ உயிருக்கு உயிரானவளே? ஏன் தொலைந்து போனாய்?' என் கேள்வி, மனதைக் குடைந்தது.

ஆதிக்கு, சகானா இல்லாமல் தன்னால் இயங்க முடிய என்றே தோன்றவில்லை. அவள் எங்கிருந்தாலு கண்டுபிடித்து அழைத்து வந்து விட வேண்டும் என்ற வே எழுந்தது. பிரிவு என்ற பெருஞ்சுமை வாழ்க்கைப் பாடத்தை சொல்லித் தந்தது அவனுக்கு!

அன்று, அவளைத், தான் ஏன் அந்தளவுக்குக் காயப்படுத்தி னோம் என்று, தன் மீதே கோபப்பட்டுக் கொண்டான். விடியும் பொழுதுதான், அவன் விழிகளை உறக்கம் தழுவியது. கனவிலும் நீங்காத கவலைப் பதித்தாள் சகானா.

## 11

சகானாவும், கண்களில் சோக இழைகளைக் கோர்த்து, கண் இமைகளில் உறக்கத்தைத் தொலைத்தபடி, கண்ணீரில் கரைந்து கொண்டு இருந்தாள். அவளுடைய ஆதியைப் பிரிந்து வந்த சோகம், கண்ணீர் வேள்வியைப் பரிசளித்தது... மனதிலிருந்த காதல் காயத்துக்கு மருந்து கண்டுபிடிக்கப் படாமலே...!

மறுநாளைய விடியலும் அவளுக்குத் துன்பத்தையே காடுத்தது. மீளாத்துயராய் அவனுடைய நினைவுகள் வளை இம்சை செய்தது. கீழே இறங்கிச் சென்று திலகாவுக்கு மையலில் உதவி செய்தாலும், மனம் எதிலுமே முழுமையாக படட மறுத்தது.

அன்று பள்ளி விடுமுறையானதால் பூரணி வீட்டிலிருந் ர். அவளுடன், தன் பொழுதைக் கழித்து விட்டு மாடிக்கு 5 சகானா, மதியம் சிறிது நேரம் உறங்கினாள். எடுத்து இருந்த துணிகளை எல்லாம் இன்னும் பிரித்து அடுக்க லை. மனமும், உடலும் சோர்ந்திருந்ததால் படுத்து டாள்.

ாலையில் பக்கத்திலிருந்த கோவிலுக்குச் செல்லலாம் திலகா கூறி இருந்ததால், தன்னுடைய சரிகைக்



கரையிட்ட புடவை ஒன்றை அணிந்து கொண்டு கிளம்பினாள் சகி. அந்தப் புடவை, சோகத்திலும் அவள் அழகைப் பன்மடங்கு அதிகப்படுத்தியது. கோவிலுக்குச் சென்றாலாவது தனக்கு நிம்மதி கிடைக்குமா என்ற ஆவலில் திலகாவோடு கிளம்பிச் சென்றாள் அவள்.

ஆதித்யாவின் வீட்டில், சாவித்திரியம்மா காலையில் எழுந்ததுமே, முதல்வேலையாக அஜயுடன் திலீப்பின் வீட்டுக்குச் சென்றார். திலீப்பும் அவர் சென்ற போது வீட்டிலிருந்தான். அவரைக் கண்டதும் முகம் மலர வரவேற்று அமரச் செய்தவன், அம்மாவிடம் காபி கொண்டு வரச் சொன்னான்.

சாவித்திரி அவனைப் பார்த்து, ''ஏம்ப்பா! சகானா இருக்கற இடம் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா? உன்னை கேட்டுட்டுப் போகலாம்னு தான் வந்தேன்'' என்றார்.

''எனக்குத் தெரியாதும்மா'' என்றான் திலீப் அழுத்தமாக.

காபியுடன் வந்த ஜானகியிடம் ''நீங்களாவது சொல்லுங்க சகானா எங்கே இருக்கான்னு. ஒரு பையனை இழந்து நான் ரொம்ப துடிச்சிக்கிட்டிருக்கேன். இப்ப இன்னொரு பையனை யும் என்னால இழந்து தவிக்க முடியாது. ஆனா, நடக்கறதை யெல்லாம் பார்க்கும் போது இழந்துடுவேனோன்னு பயமா இருக்கும்மா'' என்றார் கண்கள் கலங்கியபடி.

அதற்கு மேலும் ஜானகியால் உண்மையை மறைக்க முடியவில்லை. ''எனக்குத் தெரிஞ்சதை சொல்றேம்மா சகானா, இப்ப என் பொண்ணு திலகா வீட்டிலேதான் இருக்கா

எர்ணாகுளத்திலே எங்க சொந்தக்காரர் ஒருத்தர் வேலை தர்றேன்னு சொன்னதாலே அங்க போயிருக்கா. ஆனா சகானா ரொம்ப கேட்டுக்கிட்டதால நான் நாங்க இந்த உதவியை அவளுக்குச் செய்தோம்'' என்றவர் திலீப்பிடம் திரும்பி, ''என்னால முடியலைடா! ஒரு அம்மாவா, இன்னொரு தாய் படற வேதனையைப் பாத்துகிட்டு சும்மா இருக்க முடியலை, அதான் சொல்லிட்டேன்'' என்றார் தாங்காமல்.

திலீப் சாவித்திரி அம்மாவிடம், ''ஆதித்யா சாருக்கு என்னம்மா பிரச்சினை?'' என்றான் கேள்வியாக.

''எனக்கு ஒண்ணு மட்டும் புரியுது திலீப். சகானா இல்லாமல் ஆதியால நிம்மதியா வாழ முடியாதுங்கறது மட்டும் நல்லா புரியுது. சகானா காணாமப் போனதிலேர்ந்து அவன் கண்ணில் ...வனே இல்லை. அவன் நிலைமையை எனக்கு விளக்கி ...சால்ல முடியலைப்பா... அஜய் கூட, அவனைத் தேடிட்டு ...ப்புறம் சமாதானமாகிட்டான்'' என்று நிறுத்தினார்.

பிறகு பெருமூச்சுடன் நிமிர்ந்து திலீப்பை நோக்கியவர், ...ன்னுடைய வறட்டு கவுரவத்துக்காக என் மகன் ஆதியையும் ...ன் இழக்கத் தயாராக இல்லை. உன்னை கெஞ்சிக் ...க்கறேன்பா... அவங்க ரெண்டு பேருக்கும் நடுவுலே என்ன ...ச்சினைன்னு உனக்காவது தெரியுமா?'' என்றார் தளர்ந்து ...ய்!

...எனக்கு அதெல்லாம் தெரியாதும்மா. எனக்குத் தெரிஞ்ச ...மையைச் சொல்றேன். சகானா, உங்க பையனை ...ருக்கு உயிரா விரும்பினாங்க! எனக்கு எப்படித் ...யும்னு கேக்கறீங்களா? நானே, அவங்களைக் கல்யாணம்



பண்ணிக்க விரும்பிக் கேட்டேன். என்னை ஒரு நல்ல நண்பனா நினைச்சித்தான் பழகினதா சொன்னாங்க. அவங்க வேற ஒருத்தரை விரும்பறதா சொன்னப்ப, ஆதித்யா சாரான்னு நானே யூகமாக கேட்டப்புறம் ஆமான்னாங்க. ஆனா, அவங்க ரெண்டு பேருக்கும் நடுவுலே என்ன பிரச்சினைன்னு எனக்குத் தெரியாதும்மா'' என்றான் திலீப்.

உடனே எழுந்தவர், ''அது நமக்குத் தெரிய வேண்டாம்ப்பா. சகானா இருக்கற இடத்தைச் சொல்லுப்பா அது போதும்! உங்களைத் தவிர அவளுக்கு இங்கே யாரையும் தெரியாதுங்கறதாலேதான் உங்ககிட்ட ஓடி வந்தேன். உங்க உதவியில்லாம, அவ இங்கே இருந்து போயிருக்க முடியாதுன்னு தோணிச்சி, எனக்கு உங்க அக்காவோட முகவரி வேணும். இதை, உன் முதலாளியா நான் கேக்கலை. ஒரு தாயாகக் கேக்கறேன் திலீப்'' என்று முடித்தார்.

திலீப் புன்னகையுடன் தன் அக்காவின் முகவரியை எழுதிக் கொடுத்தான். அவர்களிருவருக்கும் நன்றி கூறிவிட்டு கிளம்பினார் சாவித்திரியம்மா.

வீட்டிற்கு செல்லும் வழியில் யோசித்தபோது, அவர் வினாவுக்கு விடை கிடைத்தது. சகானா வீட்டை விட்டு கிளம்பிச் சென்றதில் தன் பங்கு அதிகமிருப்பதை உணர்ந்தார் அவர்.

சகானா இங்கு வந்த புதிதில் தான் அவளை பற்றிப் புரிந்து கொள்ளாமல் பேசியதே இதற்குக் காரணம் என்று தெளிவாகப் புரிந்தது. அவர்கள் இருவருக்குமிடையே உள்ள பிரச் சினையை அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும். என்னால்

விளைந்த பிரிவை, நான்தான் சரி செய்ய வேண்டும் என்ற முடிவுடன் சென்று, ஆதியின் அறைக் கதவைத் தட்டினார்.

சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்த ஆதியின் கண்கள் சிவந்திருந்தன. முகம் வெருவாகக் களைத்துப் போய் இருந்தது. கண்களுக்குக் கீழே கருவளையங்களுடன் சோர்ந்து தெரிந்தான் ஆதித்யா.

'கடவுளே!... என் மகனை இப்படி பார்க்கும்படி செய்து விட்டாயே' என்ற தவிப்போடும், இதைத் தான் மட்டுமே சீர் செய்ய முடியுமென்ற நம்பிக்கையோடும் அறைக்குள் சென்று அமர்ந்தார் அவர்.

ஆதியிடம் திரும்பியவர் "சகானா இருக்கற இடம் தெரிஞ்சிடுச்சிப்பா!" என்றவுடன் அவனுடைய கண்களிலும் முகத்திலும் அவ்வளவு நேரம் தொலைந்து போயிருந்த ஒளி, மீண்டும் வந்து குடியேறியது.

புன்னகையுடன் அவசரமாக அவரிடம் வந்தவன், "அம்மா! அவ எங்கேம்மா?" அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

அவனை உட்காரச் சொன்னவர், தான் திலீப்பின் வீட்டுக்குச் சென்று வந்ததைக் கூறினார்.

திலீப்பை சகானா விரும்பவில்லை என்ற செய்தியை கேட்டதுமே ஆதியின் மனதினுள் அமிழ்ந்து கிடந்த சோகப் பந்து, வேகமாய் எம்பி வெளியே வந்து விடைபெற்றது. நெஞ்சினுள் சந்தோஷம் ஊஞ்சல் கட்டி ஆடியது.



"இன்னொரு விஷயம் சொல்லணும் ஆதி. தப்பு என் பேரிலயும் இருக்கு" என்று கூறிவிட்டு, அன்று தங்களுக்குள் நடந்த உணர்ச்சிபூர்வமான உரையாடலைப் பற்றி அவனிடம் மெதுவாக விவரித்தார் அவர் தயக்கத்துடன்!

அவர் சொல்லும்போதே, ஆதிக்குத் தன் கண்மணி தன்னை விட்டு ஏன் பிரிந்து சென்றாள் என்று மிகத் தெளிவாகப் புரிந்தது. உடனே அவளைப் பார்க்க வேண்டும்... எல்லாவற்றுக்கும் அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உள்ளம் விழைந்தது. கவிதைக்குப் பொருள் தேடிய மனதில், அவள் நேசம் வந்து சந்தமிட்டது.

ஆதித்யா சாவித்திரியையும் அஜயையும் அழைத்துக் கொண்டு காரில் கிளம்பினான். அவன் மனம் இறக்கை கட்டி சகானாவிடம் பறந்து செல்லத் துடித்தது.

**கோ**விலிலிருந்து வீட்டிற்கு பேசியபடி மெல்ல நடந் சகானாவும், திலகாவும் வந்தனர். வாசலில் ஆதித்யாவின் கா நின்றிருப்பது தெரிந்ததும், திடுக்கிட்டாள் சகானா. அவ மனதில் மகிழ்ச்சியும் துக்கமும் ஒருங்கே இணைந் வந்தது.

திலகா ஆச்சரியத்துடன் காரைப் பார்த்து விட்டு, "ய நம்ம வீட்டுக்குக் கார்லே வந்திருப்பாங்க?" என்றாள்.

வீட்டினுள் நுழையும் போதே சகானாவின் இதய தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்தது. சொல்லொணாத தவி உடலில் பரவியது. ஹாலில் அடியெடுத்து வைத்ததுமே, எதி அஜயை தூக்கிக் கொண்டு நின்ற ஆதியின் உருவம்த

முதலில் தெரிந்தது. வேறு யாருமே அவள் கண்களில் படவில்லை.

"சகிம்மா!" என்று ஆவலுடன் அஜய் அவளிடம் தாவவும், ஓடிச் சென்று அவனை விம்மலுடன் அணைத்துக் கொண்டாள் அவள்.

ஆதியின் விழிகள், அவளையே காதலுடன் நோக்கியது. வாய் வார்த்தைகளால் வெளியிட முடியாத மன உணர்வுகளை ண்களாலேயே அவளுக்கு அறிவித்தது. அளவிட முடியாத ன்பை முகம் வெளிப்படுத்த, 'என் மனதை செப்பனிட்டுத் ருவாயா?' என்ற அவனின் ஏக்கம் நிறைந்த பார்வை, வளைத் தன்னிலை மறக்கச் செய்தது.

அவனிடமிருந்து அஜயை வாங்கிக் கொண்டு நிமிர்ந்த ாதுதான் அங்கு சாவித்திரியம்மா வந்திருப்பதையே ளித்தாள்.

"அம்மா!" என்று தவிப்புடன் ஓடி வந்தவளை ஆறுதலாக ணைத்த சாவித்திரியம்மா ஆதியிடம் திரும்பினார்.

சகானாவை எங்கேயாவது வெளியில அழைச்சிட்டுப் ப்பா ஆதி! இல்லைன்னா, மாடிக்கு கூட்டிட்டுப் போய்ப் " என்றவர், சகியின் தலையைப் பாசமாக வருடிவிட்டு யைத் தூக்கிக் கொண்டவுடன் திலகாவும் அவள் ரும், சாவித்திரியம்மாவுடன் பேச ஆரம்பித்தனர்.

' கண் அசைவில் தன்னுடன் வரும்படி சகானாவை த்துக் கொண்டு மாடிக்குச் சென்றான் ஆதித்யா.



மாடி அறைக்குள் சென்றவுடன் அறைக்கதவை மூடி விட்டுத் திரும்பி அவளையே ஒரு கணம் தாபத்துடனும் ஆர்வத்துடனும் பார்த்தான் ஆதி. அவன் பார்வை, உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்டும் ஒரு அற்புதக் கண்ணாடியாய்த் தோன்றியது.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த சகானாவின் மனம், கவலைக் குப்பைகளை களைந்து, நிர்மலமாய் மணம் வீசியது. கால்கள் ஏனோ வேர் பிடித்தாற் போல் நின்றது.

ஆதித்யா, அவளின் அருகே வர எத்தனித்தவன், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கதவின் மீது சாய்ந்து நின்று, ஒரு கணம் தன் கண்களையும் கைகளையும் இறுக்கமாக மூடித் திறந்தான். அவள் அருகில் வர, அவன் தனக்குள்ளேயே போராடுவது அவளுக்குப் புரிந்தது.

காற்று நாணலை வளைப்பது போல், காதல் மனிதனை வதைப்பதும் புரிந்தது. அவனுடைய மவுனம், அவளைப் பரிதவிக்கச் செய்வதாய் இருந்தது. மனதின் தவிப்பு குரலில் வர "ஆதி!" என்றாள் சகி கிசுகிசுப்பான தொனியில்!

முதன்முறை, தன் பெயரை உச்சரித்த அவளுடைய குரல், ஆதியின் காதுகளில் சாமரம் வீசிச் சென்றது.

ஒரு அலைப்புறுதலுடன் அவளை நிமிர்ந்து பார்த்தவன், அன்றைய தன் செய்கைக்கு தானே வருத்தப்படுபவனாக நிமிர்ந்து, "சகி... அன்னிக்கு நான் உன்கிட்ட நடந்துக்கிட்ட விதம் தப்புதான். ஆனா உன்னை யாராவது கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தாலோ அல்லது உன்கிட்ட சிரிச்சிப் பேசினாலோ

எனக்குள்ளே ஒரு பொறாமை உணர்ச்சி வந்து உஷ்ணமா தகிக்குது. என்னாலே நினைவுகளாலே கூட உன்னை யாரோடவும் பங்கு போட்டுக்க முடியலை. அதோட விளைவு தான், அன்னிக்கு நான் உன் மனசைக் காயப்படுத்தினது!'' என்று கூறிவிட்டு ஒரு வேகமான பெருமூச்சுடன் நிறுத்தி னான்.

அதற்கு மேல் என்ன கூறுவது என்று புரியாமல் கண்களை ஒரு கணம் இறுக மூடித் திறந்தவன், விழிகளில் தவிப்புடன் ''என்னைப் புரிஞ்சிப்பே இல்லை... என் கூட கடைசி வரைக்கும் பிரியாம வருவியா சகி?'' என்று பரிதவிக்கவும், வேகமாக முன்னால் வந்த சகானா, அவனைக் காதலுடன் நிமிர்ந்து பார்த்து, அவன் விரல்களைப் பிடித்துத் தன் இதழ்களைப் பதித்தாள்.

உடனே அவன் முகம் கனிந்து மென்மையாகி, விழிகள் உணர்ச்சியுடன் பளபளத்தன. அவள் வெட்கத்துடன் நிமிர்ந்த போது, இதைவிடப் பெரிய சந்தோஷத்தை இதயம் இனி அடையப் போவதில்லை என்ற உணர்வு அவன் மனக்காட்டில் டரச, காதலெனும் தீப்பிழம்பு அவன் விழிகளில் நேசமுள்ள ளன்சுடராய் காட்சி அளித்தது.

''சகி... நீ இன்னும் நான் எதிர்பாக்கற அந்த வார்த்தையைச் சால்லவே இல்லை.'' கொஞ்சலாக வந்தது ஆதியின் ல்.

சகானா குறும்பு கொப்பளிக்கும் விழிகளுடன் நிமிர்ந்து ... ம்... என்ன சொல்லணும்? எனக்குப் புரியலையே!'' றாள் சீண்டலுடன்.



''இப்ப நீ சொல்லலைன்னா அப்புறம் உனக்கு நிறைய பனிஷ்மெண்ட் காத்திட்டு இருக்கு'' அவன் குரல் மென்மை யாய் வருடி, அவள் உயிர் வரை சுவாசித்தது.

சீறலான ஒரு வேகமூச்சுடன் நிமிர்ந்தவள், ''என்ன பனிஷ்மெண்ட்டுன்னு சொல்லுங்க... அப்புறமா, நான் சொல்றேன்!'' என்றாள் சிணுங்கலான குரலில்.

''ஒரு மாசத்துக்குப் படகு வீடு ஒண்ணு புக் பண்ணப் போறேன்... நம்ம ஹனிமூனுக்கு! நீ என் கூடக் காதல் கைதியா அங்கே இருந்துதான் ஆகணும்!'' அவன் கண்கள் குறுகுறுத்தன.

''ஹனிமூனுக்குப் பொதுவா எல்லாரும் ஹில் ஸ்டேஷனுக்குத்தான் போவாங்க. நீங்க என்னடான்னா இப்படிச் சொல்றீங்க?'' சகி வேண்டுமென்றே குறும்புடன் கேட்டாள்.

''மலைக்குப் போனா, அப்புறம் வெளியே போய் சுத்திப் பாக்கணும்னு அடம் புடிப்பே... நானும் என்னோட பிரின்சஸோட மனசு நொந்து போயிடக் கூடாதேன்னு அதை செஞ்சாகணும். ஆனா, படகு வீட்டில அது முடியாதே! நீ என்னோடதானே, தனியா இருபத்து நாலு மணி நேரமும் இருந்தாகணும்'' கிசுகிசுப்பாய் ஒலித்த அவனுடைய குரலில் மலையளவு நேசம் தெரிந்தது.

உடனே ''நான் வரமாட்டேன்னு சொன்னா?'' என்றாள் சகானா வேண்டுமென்றே!

கண்கள் பளபளப்பாய் மின்ன, ஒரு புருவத்தை மட்டும் உயர்த்தியவன், ஒரு சுட்டு விரலைக் காட்டி எச்சரித்து "ஏய்... வரலைன்னா, அப்படியே கையக் காலை கட்டித் தூக்கிட்டுப் போயிடுவேன்" என்றான்.

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சில்லென்ற தீப்பொறியாய் உள்ளுக்குள் இறங்கி உணர்வுகளை தகிக்கச் செய்தது. கன்னங்களில் வெட்கச் சிவப்புடன் நிமிர்ந்த சகி, "ஐ லவ் யூ ஆதி!" என்றாள் இமைச் சிறகுகளை இறுக மூடியபடி.

"சகி..." அதற்குப் பிறகு ஆதித்யாவால் ஒரு கணம் கூடத் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அவர்கள் வாழ்வில் ஆனந்தம் அம்சமாய் நுழைந்தது. சகானாவைத் தன் ப்ரிய சகியாய் இணைத்துக் கொண்ட ஆதித்யாவின் மனதில் கோடிப்பூக்கள் மலர்ந்து மணம் பரப்பியது. வெளியே வானம் பன்னீரைத் தூவ ஆரம்பித்தது.

* * *